பாரத தேவி

நிர்வாக ஆசிரியர் வ. ரா. தனிப்பிரதி 2 அணா

மலர் 1	ஞாயிறு 30-7-'39	இதழ் 4

பொருள் அடக்கம்

விஷயம்			பக்கம்
என்னென்ன எதிர் பார்க்கலாம்? ...	...	...	2
ஏன் தாமதம்?	...	...	3
டோக்கியோ ஒப்பந்தம்	...	...	7
எதிர்ப்புக் கூடாது	...	...	9
பிருதிவிராஜன் கதை	...	...	11
தைரிய சம்பத்து	...	...	13
ஹனுமானின் அதிருப்தி	...	...	15
பெற்றோர் பள்ளி	...	...	17
புதிய உலகம்	...	வ. ரா.	21
பரதேசத் தபால்	...	...	27
மலைச் சிகரம்	...	சஞ்சாரி	31
ஆளுக்குள்ளே ஆளு; எத்தனை ஆளு?	...	...	33
அகத்தியன்	...	...	39
பைத்தியக்காரன்	...	பு. வே. சுப்ரமண்யம்	46
மணல் வீடு	...	சி. சு. செல்லப்பா	49
எங்கள் தமிழ் ஐயா	...	வரதன்	54
மின்சார விளக்கு	...	வே. ம.	57
ரஷ்யாவுக்குப் போ!	...	"ரஞ்சனன்"	62
மாமல்லனின் பொக்கிஷங்கள்	...	ரா. ஆறுமுகம்	65
சதைப் பற்றற்ற காதல்	...	கரிச்சான்	71
தர்மதேவதை	...	ஸரஸி	75
கலைஞான வரலாறு	...	....	77
ஆம்ரபாலி	...	கு. ப. ராஜகோபாலன்	81
நக்ஷத்திர குணாதிசயங்கள்	...	...	86
குற்றவாளி	...	மணி	89
வெட்டுப்பட்ட கை	...	ஜி. தாத்தாச்சாரி	93
திரைப்படச் செய்திகள்	...	...	98
ஒரு நிமிஷக் கதைகள்	...	...	100
மறைந்த கானம்	...	கே. வெங்கட்டராமன்	102

என்னென்ன எதிர் பார்க்கலாம்?

'பாரத தேவி'யில் எந்த ரக எழுத்துக்களை எதிர் பார்க்கலாம் என்று கேள்வி கேட்கவேண்டாம்; ஊக மும் செய்ய வேண்டாம். குத்து மதிப்பில், கீழ்க்கண்ட ஜாப்தா தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதில் விவரங்களைக் காணலாம் :—

1. கவிதை
2. கட்டுரை
3. மலை, நீர் வீழ்ச்சி, மாலைப்பொழுது போன்ற இன்பந்தரும் காட்சிகளைப்பற்றிய வர்ணனைகள்
4. சிறு கதை
5. தொடர் கதை
6. நாடகம்
7. பெரியார் வாக்கு
8. ஸயன்ஸ் குறிப்புகள்
9. விகடத் துணுக்குகள்
10. இந்து தேச சரித்திரம்
11. அயல் நாட்டுச் சரித்திரத் துளிகள்
12. சித்திரப் படங்கள்
13. பெரியார்களின் வரலாறு
14. காந்தியின் உபதேசம்
15. சித்தர்களின் ஞானோபதேசங்கள்

இந்த ஜாப்தாவே பூரணமானதோ என்ற சந்தேகம் தேவையில்லை. பழைய ட்ராமா நோட்டீஸ்களில் குறிப்பிடுவதுபோல, "சமயோசிதப்படி" விஷயங்கள் வெளி வரும்.

ஏன் தாமதம்?

வங்காளத்தில், ராஜாங்கக் கைதிகள், சுமார் நூற்றைம்பது பேர்கள் உண்ணாவிரதம் இருக்கின்றார்கள். அவர்களை விடுதலை செய்யாததே, அவர்கள் உண்ணாவிரதம் இருப்பதற்குக் காரணம். தங்களுடன் காந்தியும் உண்ணாவிரதம் இருக்கவேண்டும் என அவர்கள் மகாத்மாவுக்கும் விண்ணப்பம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

இந்த ராஜாங்கக் கைதிகள் என்று அழைக்கப்படுகிறவர்கள் யார்? அவர்கள் தீவிரமான தேச பக்தர்கள். அவர்களுடைய தேச பக்தியா அவர்களுடைய குற்றம் என்று நீங்கள் கேட்கலாம். அப்படித்தான் தோன்றுகிறது. விசாரணை யில்லாமல் காவலில் வைப்பது என்றால், வேறு என்ன காரணத்தைச் சொல்ல முடியும்?

இந்த அருமையான தேச பக்தர்களை, அரை நிமிஷம்கூட, சிறையில் வைப்பது தவறு. உலகத்தில், சுதந்திர நாடுகளில், புத்திசாலிகளாகவும் சுறுசுறுப்பாளர்களாகவும் தேச பக்தர்கள் இருந்தால், அவர்கள் அரசியலை நடத்தும் பொறுப்பு வாய்ந்த மந்திரிமார்களாக ஆகின்றார்கள். இந்தியாவிலோ, தேச பக்திக்கு சன்மானம் சிறை. என்ன அவலட்சணமான காட்சி!

வங்காளத்திலும், மலையின் பிரசவமான மாகாண சுயாட்சி நடைபெற்று வருகின்றது. அந்த ஆட்சிக்கு அதிபராக விளங்குபவர் கனம் பஸ்லூல் ஹக். இவர் முன்னொரு காலத்தில் காங்கிரசில் இருந்து, மிகவும் தீவிரமாக உழைத்தவர். காலஞ் சென்ற தேசபந்து தாசின் பக்கத் துணைவர்களில் இவர் ஒருவர்.

இவர் காலத்தில் கூடவா, தேச பக்தர்கள் ராஜாங்கக் கைதிகளாக இருக்கும் துர்ப்பாக்கியம் நீடித்திருக்க வேண்டும் என்று நீங்கள் கேட்கலாம். பஸ்லூல் ஹக் என்ற பெரியார் தம்மை மனிதன் என்று சொல்லிக்கொண்டால் பெருமை இல்லை என்று

நினைத்து, "நான் வங்காளப் புலி, தெரியுமா" என்று ஒரு தடவை, உரக்கக் கத்தினர். மனிதன் சகோதர மனிதனிடம் விண்ணப்பம் செய்து கொள்ளலாம். "புலி" யினிடம் மனுப் பண்ணிக்கொண்டால், காரியம் சாயுமா? நிற்க,

வங்காள ராஜாங்கக் கைதிகள் உண்ணுவிரதம் இருப்பது தவறு என்பது நமது கருத்து. உண்ணுவிரதம் என்பது ஒருவகை நோன்பு. அந்த நோன்பை, தூயமனத்தர்கள் கொண்டால்தான், கோரிய பலன் கைகூடும். மனதில் பரிசுத்தமில்லாதவர்கள் உண்ணுவிரதம் இருந்தால், அது பலிப்பதில்லை. வங்காளக் கைதிகள் தூயமனமில்லாதவர்கள் என்று நாம் சொல்ல வரவில்லை.

இந்த நாட்டில், உண்ணுவிரதத்தை மேற்கொள்ளக் கூடிய தன்மை படைத்தவர்கள் மகாத்மா காந்தி, ராஜேந்திர பிரசாத், கான் அப்துல் கபூர்கான் போன்ற சிலர்தான். இத்தகைய உத்தமர்கள், கூடுமானவரையில், காமக்குரோதம் போன்ற உணர்ச்சிகளினின்றும் விடுபட்டவர்கள். ஆகவே, இவர்கள் உண்ணுவிரதம் இருந்தால், சுயநலத்துக்காக அல்ல; அது பொது நலத்துக்காகத்தான்.

தூய்மை மனத்தோடு, பொது நலத்துக்காக உண்ணுவிரதமிருப்பவர்களின் சங்கற்பம் விரைவில் நிறைவேறிவிடுவதை சென்ற சில ஆண்டுகளாக, நாம் கண்கொள்ளாக் காட்சிகளாகக் கண்டு, பிரமித்தும் பயந்தும் போயிருக்கிறோம். காந்தி ஹரி ஜனங்களுக்காக உண்ணுவிரதம் இருந்த காலத்தில், இந்தியா முழுதும் 'திகில்' பட்டுப்போக வில்லையா? என்ன நேர்ந்து விடுமோ என்று தவித்துக்கொண்டிருக்கவில்லையா?

அதுதான் உண்மையான உண்ணுவிரதம். அந்த விரதம் நல்லார்களையும் அல்லார்களையும் ஆட்டிவைத்து விடுகிறது. வேறு சில உண்ணுவிரதங்களைக் கண்டு, உலகம் நகைக்கத் துணிந்துவிட்டது. ஆகவே, எந்த ஆயுதத்துக்கும், அதை உபயோகிக்கும் மனிதனைப் பொறுத்து, பெருமையோ சிறுமையோ உண்டாகின்றது. குழந்தையின் கையில் வேடிக்கைத் துப்பாக்கி அகப்பட்டு விழிப்பதைப்போல, சிலருடைய கையில், இந்த உண்ணுவிரதம் அகப்பட்டுக்கொண்டு தவிக்கின்றது.

வங்காளக் கைதிகளின் கட்சியை எடுத்து, காந்தி பல மாதங்களுக்கு முன்னர், வங்காள மந்திரிகளிடம் பேசிவிட்டார். அவர்களும், கொள்கையில், கைதிகளின் விடுதலையை ஏற்றுக்

கொண்டிருக்கிறார்கள். ஆனால், நடை முதலில் கொள்கையை, அமுலுக்குக்கொண்டு வருவதில், அவர்கள் கருமித்தனத்தைக் காண்பிக்கிறார்கள். இந்தக் கருமித்தனம் அரசியல் விவேகம் ஆகாது.

கனைந்து சுமக்கும் பேர்வழிகளுக்கு, சரியான காலத்தில், சரியான யோசனை தோன்றுவதில்லை. 'அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயாக'ப்படும் என்று சொல்லுவது போல, வங்காள தேசபக்த ராஜாங்கக்கைதிகள், மந்திரிகளின் கண்ணில் குற்றவாளிகளாகத் தோன்றுகிறார்களா?

ஜெர்மனியில் நாஜி ஆட்சியில் யூதர்களும் பொது உடமைக் காரர்களும் படும் வேதனைகளையும் அவஸ்தைகளையும் வங்காளத் தில் தேசபக்தர்கள் படவேண்டுமா? வங்க தேசபக்தர்கள் பலாத்கார புரட்சிக்காரர்கள் என்று சாக்கு சொல்லப்படுகிறது. "எங்களுக்குப் பலாத்காரத்தில் நம்பிக்கையில்லை" என்று அவர் கள், இதோடு, எத்தனையோ தடவைகள் சொல்லிவிட்டார்கள்.

ஒருவன் தன் நம்பிக்கையை எத்தனை தடவைகள் உரக்கச் சொன்னாலும், பிடிவாதமாக நம்புவதில்லை என்றால், அதிலே இருக்கிற கோளாறைத் தெரிந்துகொள்ளவேண்டும். 'தேச பக்தர்கள்', தங்களுக்கு, பலாத்காரத்தில் நம்பிக்கை இல்லை என்று சொல்லுகிறார்கள். அவர்களைச் சிறையில் பேட்டிகண்ட காந்தி, அவர்களுடைய வாய்மொழியைத் தாம் நம்புவதாகச் சொல்லுகிறார். இதற்குப் பிறகும், வங்காள அரசாங்கத்தார் தேசபக்தர்களின் சொல்லை நம்புவதில்லை என்றால், அது வருந்து வதற்கு உரிய சங்கதியாகும்.

அவர்கள் ஏன் ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறார்கள்? "தேசபக்தர்களை" வெளியேவிட்டால், விபரீதங்கள் விளையக் கூடும் என்பதற்கு அத்தாட்சிகளாக, தங்களிடம் அவர்களைப்பற்றி ரிகார்டுகள் இருப்பதாக அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால், வங்காள ஜனசமூகமோ, புரட்சிக்காரர்களைப்பற்றிப் பயங்கொள் ளவே இல்லை. அது எப்படித் தெரியும் என்று கேட்கலாம். வங்காள முழுதும், ஏன் இந்தியா முழுதும், ஒருமுகமாக அவர்களுடைய விடுதலையைக் கோருவதிலிருந்து, புரட்சிக்காரர், களைப்பற்றி, ஜன சமூகம் அஞ்சவே இல்லை என்று தெரிய வில்லையா?

பொது ஜனங்கள் அஞ்சாத அல்லது சந்தேகப்படாத ஒன் றுக்காக, அரசாங்கம் அஞ்சுவதாகச் சொல்லுமாகில், அந்த

அச்சம் பொய் அல்லது பாசாங்கு என்றுதான் சொல்ல வேண்டும். எந்தக் குடிமக்களுக்காக அரசியல் நடத்துவதாக, வங்க மந்திரிமார்கள் சொல்லுகிறார்களோ, அந்த ஜன சமூகமே ராஜாங்கக் கைதிகளைப்பற்றிப் பரிந்து பேசுகையில், மந்திரிமார்கள், அவர்களை விடுதலை செய்யாமல், பிடிவாதம் பிடிப்பது நியாயமுமல்ல, ஜனநாயக ஆட்சியின் செயலுமல்ல.

இப்பொழுது ராஜாங்கக் கைதிகளாக இருக்கும் தேசபக்தர்களில் பலர், “க்ரேக்கின் சொர்க்க பூமி” யான அந்தமான் தீவில், எத்தனையோ கொடுமைகளுக்கு ஆளானவர்கள். எத்தனையோ பேர்கள், க்ஷயரோகத்தால் பிடிக்கப்பட்டு, யமனோடு, அல்லும் பகலும் போராடிக்கொண்டு வருகிறார்கள். இவைகள் எல்லாம் தெரிந்திருந்தும், மந்திரிகள் மௌனம் சாதிப்பதைப் பார்த்தால், அவர்களின் கண்ணில், பின்னால் விளையக்கூடிய ஆபத்து படவில்லை என்று தோன்றுகிறது.

இதற்கு முன்னர், நூற்றுக்கணக்கான தேச பக்த கைதிகளை விடுதலை செய்தார்களே, அதனால், வங்காளத்துக்கு என்ன ஆபத்து வந்துவிட்டது? அத்தனை தேச பக்தர்களும் அமைதியாக, தேசத் தொண்டிலோ, குடும்ப சேவையிலோ, ஈடுபட்டு, தங்கள் வாக்கைக் காப்பற்றவில்லையா? வாதத்துக்கு மருந்துண்டு, பிடிவாதத்துக்கு மருந்து கிடையாது என்று சொல்லுகிறார்களே, அந்தக் கூட்டத்தில் சேர்ந்துகொண்டு, கெட்ட பெயர் வாங்கப் பார்க்கும் வங்க மந்திரிமார்களுக்குப் பின்னுமொரு தடவை, அவர்களின் கடமையை நினைப்பூட்டுகின்றோம்.

“மந்திரிமார்களே! தேச பக்தர்களின் மானத்தைக் குலைக்க வேண்டாம். மானிகளினுடைய சொல்லை நம்பாமல் இருக்க வேண்டாம். தேச பக்தர்கள், கண்ணியமான முறையில், நாட்டுத் தொண்டு செய்வதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள். வரட்டுப் பிடிவாதம் செய்து, வங்க நாட்டுக்கு அவமானத்தையும் ஆபத்தையும் தேடி வைக்காதீர்கள்” என்று நாம் மந்திரிமார்களை வேண்டிக் கொள்ளுகிறோம்.

ராஷ்டிராதிபதி ராஜேந்திர பிரசாத், இந்த விஷயத்தில், தக்கதைச் செய்வார் என்று நமக்குப் பூரண நம்பிக்கை உண்டு.

டோக்கியோ ஒப்பந்தம்

சென்ற சில வாரங்களாக டென்ட்ஸின் என்ற பெயர் மிகவும் அடிபட்டது. ஏதோ வொரு ஜப்பானிய உத்தியோகஸ்தன் சுட்டுக் கொல்லப்பட்டதைக் காரணமாக வைத்துக்கொண்டு ஜப்பான் பிரிட்டனுக்கு ரொம்ப தொல்லை கொடுத்துக்கொண்டிருந்தது. யுத்தமே ஏற்பட்டுவிடுமோ என்று நினைக்கும்படியாக அவ்வளவு மானபங்கமான அட்டூழியங்களைச் செய்து ஜப்பான் பிரிட்டனை அவமதித்தது. பிரிட்டிஷ் சிங்கத்தின் வாலை ஜப்பானியர் நுனிவரை முறுக்கி விட்டார்கள் என்று சித்திரக்காரர்கள்கூட நையாண்டி செய்தார்கள்.

பிரிட்டிஷ் பொது மக்களும் பத்திரிகைகளும் பார்லிமென்ட் அங்கத்தினர்களும் சர்க்கார்மேல் சீறி விழுந்தார்கள். "இனி பொறுக்க மாட்டோம்!" என்று பதைபதைத்தார்கள். ஆனால் பிரதம மந்திரி சேம்பர்லின் ஒன்றுக்கும் மசியவில்லை.

"நிலைமையை சர்க்கார் கவனித்து வருகிறார்கள்", "தேவையான எச்சரிக்கைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன", "கண்டிப்பான நடவடிக்கை எடுப்பதைப் பற்றி சர்க்கார் தீவிரமாக யோசனை செய்து வருகிறார்கள்" என்று தனது பெயர்போன மழுப்பல் முறையில் பதில் சொல்லி பிரதம மந்திரி காலந்தள்ளிக்கொண்டே வந்தார்.

ஆனால் நிலைமை நாளுக்குநாள் நெருக்கடி ஆகிக்கொண்டு வந்தது. பிரிட்டனின் தயக்கத்தைக் காணக் காண, ஜப்பானுக்கு தைரியம் அதிகமாயிற்று. பிரிட்டனின் ராஜ தந்திரத்தின் போக்குதான் அதற்கு முன்பே பாடமாயிற்றே! ஜப்பான் தனது கோரிக்கைகளை விமரிசையாகக் கோர்த்து சமர்ப்பிக்கலாயிற்று.

கொலைக்குப் பழி வாங்கும் ஆரம்பத்திலிருந்து மாறி விருத்தியடைந்து டென்ட்ஸீன் நெருக்கடி பிரிட்டன் தன் நடு நிலைமைக் கொள்கையையே கை விட வேண்டிய எல்லைக்கு வந்து விட்டது. இன்று டென்ட்ஸீன் நெருக்கடி சிறு விஷய மல்ல. பிரிட்டன் சைனாவிற்கு ஒருவிதமான சலுகையும் காட்டக்கூடாது என்று ஜப்பான் கேட்கிறது.

பிரிட்டிஷ் தூதர் ஸர் ராபர்ட் கிரெய்கிக்கும் ஜப்பானிய அன்னிய நாட்டு மந்திரி ஸ்ரீ அரிடாவுக்கும் நடைபெற்ற ஒப்பந்தம் பிரிட்டனின் கொள்கையையே மாற்றுவதாக இருக்கிறது. "ஒன்பது வல்லரசுகள் ஒப்பந்தம்" என்ற கட்டுப்பாட்டை உடைத்தெறிவதாக இருக்கிறது.

"சைனாவில் யுத்தம் தீவிர முறையில் நடந்துகொண்டிருக்கும் வரையில் சைனாவிலிருக்கும் ஜப்பானிய துருப்புகள் தங்கள் நிலைமையைப் பாதுகாத்து கொள்வதற்கும் தங்கள் வசம் இருக்கும் சீனப்பிரதேசங்களில்

அமைதியை நிலைநாட்டுவதற்கும், தடங்கல்கள் ஏற்படுத்தும் எந்தவிதமான காரணங்களையும் அடக்கவோ, தடுக்கவோ, எதிரிக்கு அனுகூலம் ஏற்படாமலிருக்க தேவையான நடவடிக்கை எடுக்கவோ ஜப்பானுக்கு அவசியம் ஏற்படுகிறது என்பதை பிரிட்டிஷ் சர்க்கார் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

ஜப்பானின் மேல்கண்ட உத்தேசங்கள் நிறைவேறுவதைத் தடுக்கும்படியான யாதொரு ஏற்பாட்டையும் ஆதரிப்பதாக பிரிட்டனுக்கு உத்தேசமில்லை."

இது தான் ஒப்பந்தத்தின் சாராம்சம். இதிலிருந்து பிரிட்டன் ஜப்பானைத் திருப்தி செய்வதற்காக எவ்வளவு தூரம் தன் அந்தஸ்தையே விட்டுக் கொடுத்திருக்கிறது என்பது தெளிவாகிறது.

இதைப் பார்லிமெண்டிற்கு அறிவித்துப் பேசுகையில் சேம்பர்லின் சப்பைக் கட்டு கட்டினதுதான் மிகவும் வினோதமாக இருக்கிறது. இதனால் பிரிட்டிஷ் கொள்கையில் ஒருவிதமான மாறுதல் கூடக் கிடையாதென்றும், ஜப்பான் சைனாவில் அடைந்த வெற்றியை பிரிட்டன் அங்கீகரிப்பதாக ஆகாதென்றும் சொன்னார். ஜப்பானுக்குச் சைனாவில் பாதுகாத்துக் கொள்ளவேண்டிய உரிமைகள் இருக்கின்றன என்று ஒப்பந்தம் ஒப்புக்கொள்ளுகிறதே, அதற்கென்ன அர்த்தம்?

வேறென்ன அர்த்தம் இருக்க முடியும்? பிரிட்டன் சைனாவை விட்டுக்கொடுக்கத் தீர்மானித்து விட்டது என்றுதான் அர்த்தம். மேற்கண்ட ஒப்பந்தத்தை ஒரு வாரம் யோசனை செய்ததிலிருந்தே தெரியவில்லையா?

இங்கும் சேம்பர்லினின் "சமாதான முயற்சி" (அப்பீஸ்மென்ட்) தான் வேலை செய்திருக்கிறது. அதாவது ஜப்பானின் பசியை ஆற்ற பிரிட்டன் சைனாவை, அதற்கு பலி கொடுக்கச் சம்மதித்து விட்டது. இனிமேல் ஜப்பான் பிரிட்டன் ஜோலிக்கு வாராது என்பது பிரதம மந்திரியின் கனவு.

பார்லிமெண்டில் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லும் பொழுது, சேம்பர்லின் ஒப்பந்தத்தால் நிலைமை ஒருவிதமாகவும் மாறவில்லை என்றுதான் சொல்லியிருக்கிறார். மேலும் நடக்கப் போகும் சமரஸப் பேச்சுகளுக்கு ஒரு வழி ஏற்படுத்துவதற்காகத் தானாம் அது!

ஆனால் ஒப்பந்தம்தான் பட்டவர்த்தனமாக இருக்கிறதே! அதில் இருப்பதை ஒரே ஒரு விதமாகத்தான் அர்த்தம் செய்து கொள்ள முடியும். சைனா இனிமேல் பிரிட்டனிடம் ஒன்றும் எதிர்பார்க்கவேண்டாம்.

இதுவரையிலும் தனியாகப் போர் புரிந்த சைனா இன்னும் தனியாகப் போர் புரியும் என்று சியாங் - கே-ஷேக் சொல்லுகிறார்.

ஆனால் ஜப்பானின் எண்ணம் நிறைவேறிவிட்டது. பிரிட்டனை அது பணிய வைத்துவிட்டது. சைனாவில் தான் பெற்ற வெற்றிகளை ஒப்புக்கொள்ளும்படி தைரியமாகப் பிரிட்டனை வற்புறுத்தும் நிலைமையை உண்டாக்கிக் காரியத்தைச் சாதித்துக்கொண்டு விட்டது.

எதிர்ப்பு கூடாது

இந்த நாட்டிலே, சனாதனிகள் என்று ஒரு கூட்டம். அவர்கள் சனாதன தர்மத்தைப் பின்பற்றுகிறார்களா என்று கேட்க வேண்டாம். சனாதன தர்மிகள் இரண்டு வேலைகளைச் சரியாய்ச் செய்து வருகிறார்கள். தங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று இங்கிலீஷ்காரர்களிடம் இவர்கள், பரிபூரண சரணாகதி செய்துவிட்டார்கள். ஆண்டவனிடம் அடைக்கலம் புகக்கூடாதா ?

அவர்களுடைய இரண்டாவது வேலை என்னவென்றால், இந்துக்களின் தெய்வ வழிபாடு சம்பந்தமான சகல ஆராய்ச்சி, அதிகார உரிமைகளும் தங்களிடம்தான் இருக்கின்றன என்று மயக்கங்கொண்டு, உண்மையான பக்தி கொண்டவர்கள், சிரத்தையோடு, தெய்வ வழிபாட்டுக்காகச் செய்யும் முயற்சிகளுக்குக் குறுக்கே சனாதனிகள் நிற்கிறார்கள்.

ஆகவே, தற்கால (கலிகால) சனாதனிகளிடம் இரண்டு குணங்களைக் காண்கிறோம். அவர்களிடம் துராக்கிரகம் மலிந்து கிடக்கின்றது. அவர்களிடம், தன்னடக்கம் மருந்துக்குக்கூட கிடையாது. எவ்வளவு ஆத்திரக்காரர்களாக இருக்கிறார்கள்! சாந்தம் என்பதைக் கனவிலே காணாத இந்தப் பேர்வழிகள், தங்களைச் சனாதனிகள் என்று சொல்லிக்கொள்ளும்பொழுது, மனதுக்கு துக்கமாயிருக்கிறது.

சனாதனிகள் இந்த நாட்டு மக்களையும் கடவுளையும் நம்பாமல், தங்கள் பாதுகாப்புக்காக, அன்னியர்களான இங்கிலீஷ்காரர்களிடம் சரண்புகலாம், சரண்புகவேண்டும் என்று எந்த சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது என்று நமக்குத் தெரியவில்லை. தீண்டாமை நிலைத்து நிற்க வேண்டும், சனாதனிகள் அசடு வழிய வேண்டும் என்று கண்டிருக்கிற ஏட்டிலேயே, அன்னியர்களிடம் சரண்புகுந்து, மானத்தைப் போக்கிக் கொள்ளலாம் என்று இருக்கிறதோ, என்னவோ ?

சனாதனிகள் என்று சொல்லிக் கொள்ளும் கூட்டத்தை அலசிப் பார்த்தால், ஒன்று கண்ணுக்குப்படும். அவர்களிடம் ஜீவனத்துக்கு வேண்டிய செல்வம் இருப்பதைக் காணலாம். ஓரிரண்டு ஏழைகள், பயத்தாலும் பரம்பரையாலும், சனாதனிகளாக இருக்கலாம். ஆனால் மற்ற சனாதனிகளின் கதையைக் கவனித்தால், வேடிக்கையாக இருக்கும். இவர்களில் பெரும்பான்மையோருக்கு தர்ம சாஸ்திரம் தெரியாது; சமஸ்கிருதமும் தெரியாது.

இங்கிலீஷ் ராஜாங்கத்திலே, "கோணல் எழுத்தை" படித்து விட்டு, உத்தியோகம் பண்ணி, பொருள் சேர்த்த சீமான்களாயிருப்பார்கள்; பிரபல வக்கீல்களாக இருப்பார்கள்; அல்லது பரம்பரை பூமியாளர்களாக இருப்பார்கள். அன்னத்தை விற்கப்படாது என்பது சாஸ்திரம். ஆனால், கச்சேரிகளும் பட்டணங்களும் புதிது புதிதாக ஏற்பட்டு வரும் இக்காளிலே, அன்ன விக்கிரயம் செய்யும் காபி, சாப்பாடு ஹோட்டல்கள், லாபம் தரக்கூடிய தொழில்கள் அல்லவா! ஆகவே, அன்ன விக்கிரயம் செய்யும் பேர்வழிகள் சனாதனிகள்!

இன்னும் இந்தக் கூட்டத்தில், எத்தனையோ தினுசுப் பேர் வழிகள் இருக்கிறார்கள். அவர்களைப்பற்றி, எல்லாருக்கும் தெரியும். இப்பேர்பட்ட, பலபட்டரைக் கூட்டத்தாருக்கு, சனாதனிகள் என்று பெயர். இந்தக் கூட்டத்தார்தான், இப்பொழுது, ஹரிஜன ஆலயப் பிரவேசத்துக்கும் காந்திஜியின் சாந்த சத்தியாக்கிரகத்துக்கும் குறுக்கே நிற்கிறார்கள்.

நெருக்கடி சமயத்தில், இவர்களின் மூதாதைகள், பண்டைக் காலத்தில், இந்த நாட்டைக் காப்பாற்றினார்கள்; புகழ் தேடிக்கொண்டார்கள். ஆனால், தற்கால சனாதனிகளோ, துராங்காரம் பிடித்தவர்களாக, சொத்துரிமை பேசி, சட்டம் சொல்லி, நாட்டையே, எதிரிகளுக்குக் காட்டிக்கொடுக்கும் வேலையில் அமர்ந்திருக்கிறார்கள். இந்த மாதிரி எழுதுவதில், நமக்குச் சந்தோஷமே ஏற்படவில்லை.

நாட்டின் பெரிய இலட்சியத்தை மறந்து, சில்லறை மனஸ்தாபங்களை வளர்ப்பவர்கள் யாராயிருந்தாலும் சரி, அவர்கள், பின் சந்ததியாரின் வாழ்த்துக்கு உரியவர்களாகமாட்டார்கள். "பாபிகள் வெண்ணெய் திரண்டுவரும் சமயத்தில், தாழியை உடைக்கப் பார்த்தார்களே! இவர்கள் அசடர்களா? அயோக்கியர்களா" என்று பின் சந்ததியார்கள் சாபம் கொடுப்பார்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

சனாதனிகள், இந்த நாட்டிலே, இப்பொழுது, கடலில் கரைத்த காயத்தைப்போல, சொற்பத்தொகையினர். அவர்களுடைய எதிர்ப்பை, பிரிட்டிஷ் சாம்ராஜ்யக்காரர்கள் உற்சாகத்துடன் வரவேற்கலாம். ஆனால் இந்த நாடு வரவேற்காது. அவர்களுடைய துராங்காரத்தால், நாட்டில் துராங்காரம் மலிந்துபோகும்படியான சந்தர்ப்பங்கள் நேரப்படாதே என்று கடவுளைப் பிரார்த்திக்கிறோம்.

அகம்பாவத்தால், எந்தக்கட்சியும் இதுவரையில், உலகத்தில் வெற்றிபெற்றதில்லை. அடக்கத்தாலும் அன்பினாலும்தான் உலகமும் தர்மமும் முன்னேறியிருக்கின்றன. இதை சனாதனிகள் உணர்ந்து, ஹரிஜனங்களின் ஆலயப்பிரவேச வெள்ளத்தைத் தடுக்க முயலாமல் இருக்கும்படி, அவர்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.

பாரத தேவி பேசுகிறாள்

பிருதிவிராஜன் கதை

ஹஸ்தினபுரம் என்று சொல்லும் தில்லி மாநகரில், பிருதிவிராஜன் என்று ஒரு ரஜபுத்திர வீரன், ஆட்சி நடத்தி வந்தான். அவன் வில்வலி, வாள்வலி, தோள்வலி—இம் மூன்றிலும் பெயர் போனவன். அவன் தில்லியில் அரசாண்ட காலத்தில், சுற்றுப்புறத்திலும், ஹிந்துஸ்தானத்தின் பல பகுதிகளிலும் கலகங்களும் கலவரங்களும் இருந்தன.

இளம்பிராயத்திலேயே, சிங்காதனம் ஏறிய பிருதிவிராஜன், தனது வீர பராக்கிரமத்தை, வெளியுலகம் ஏற்கும்படியான வகையில் நடந்து கொண்டான். நல்ல மேனியை உடையவன். அவனது கண்களிலே தயையும் தீயும் ஒருங்கே குடிகொண்டிருந்தன. தஞ்சமடைந்தவர்களைக் கைவிடாத தக்கோன்.

இப்பேர்ப்பட்ட வீரன், தில்லியில் அரசாண்ட காலத்தில், ஆப்கனிஸ்தானத்தில், கோரி என்ற இஸ்லாமிய குடும்பத்தார், பெருங்கீர்த்தியுடன் வாழ்ந்து வந்தார்கள். அவர்களில் தலைவன், மகம்மது கோரி என்பவன். இவனும் இளங்காளை. கோரி குடும்பத்தாரின் கீர்த்தியையும்தனது பராக்கிரமத்தையும் ஹிந்துஸ்தானத்தில் எல்லோரும் பேசிக்கொள்ளும்படி செய்யவேண்டும் என்பது மகம்மது கோரியின் ஆசை.

கோரி தனது இனத்தாரையும் ஏனையோரையும் படை திரட்டிக் கொண்டு, பாஞ்சால வழியாக, ஹிந்துஸ்தானத்தில் நுழைந்தான். பாஞ்சாலத்தில், அப்பொழுது, அரசாண்டவன் ஜயசந்திரன் என்பவன். இவன் கோழை. இவனுக்குப் பிருதிவிராஜனிடம் பொறாமையும் பயமும் உண்டு.

ஆனால், இவனுடைய மகளுக்கோ, பிருதிவிராஜனிடம் காதல். மகள் தில்லி மன்னனிடம் காதல் கொள்ளுவதில், ஜயசந்திரனுக்கு சம்மதமில்லை. ஜயசந்திரன் கோழையல்லாமல், வெறும் முட்டாள். காதல் என்பது அதிகாரத்துக்கும் ஆக்கினைக்கும் கட்டுப்பட்டதா? இதை அறியக்கூடாமல், ஜயசந்திரன், தனது செல்வியின் காதலை, கட்டுப்பாடு செய்து பார்த்தான்.

காதல் கட்டுப்படவில்லை. ஆகவே, ஜயசந்திரன், பிருதிவிராஜனுடைய அழிவைத் தேடினான். எனவே, கோரி, பாஞ்

காலத்தின்வழியாக, ஹிந்துஸ்தானத்தில் பிரவேசித்த பொழுது, ஜயசந்திரன், அவனை வழிமறிக்காமல், உள்ளே விட்டு விட்டான்.

ஆனந்தமாக, ஹிந்துஸ்தானத்தில் பிரவேசித்த கோரி, பிருதிவி ராஜனுடைய படையை எதிர்த்து போராடவேண்டி யிருந்தது. கோரியின் படைகளும் தில்லி மன்னனுடைய படைகளும் தனேசுவரம் என்ற போர்க்களத்தில் சந்தித்தன. கோரி தோற்றுப் போய், பிருதிவி ராஜனிடம் அபயம் வேண்டினன்.

பிருதிவிராஜன் பால்யம். கள்ளம் கபடம் அறியாத வீரன். உலகின் சூது மாயங்கள் அவனுக்குத் தெரியாது. கோரியை மன்னித்து, அவனுக்கு வாகனாதிகளையும் ஆகாராதிகளையும் கொடுத்து, பிருதிவிராஜன் அவனை அவனது ஊருக்கு வழி அனுப்பிவிட்டான். தில்லி மன்னனது மந்திரிமார்களுக்கு, தங்கள் அரசன் செய்ததில், சம்மதம் இல்லை.

"மன்ன! போரிலே சில திட்டமான விதிகள் இருக்கின்றன. எதிரி உண்மையாக சரண் அடைந்தால், அபயம் அளிக்கலாம். வஞ்சகமானல், அது ஆபத்தில் முடியும்" என்று மந்திரிமார்கள் எடுத்துரைத்தார்கள். பிருதிவி ராஜன், இதை ஏற்றுக் கொள்ளவில்லை.

கோரியோ, தில்லி மன்னனது பெருந்தன்மையை மனதில் கொள்ளாமல், அடுத்து அடுத்து ஹிந்துஸ்தானத்தின் பேரில் படையெடுத்து வந்தான். ஒவ்வொரு தடவையும், பாஞ்சால மன்னன், அவனுக்கு வழிவிட்டான். ஒவ்வொரு தடவையும், மகம்மது கோரி தோற்றுப் போனன். ஒவ்வொரு தடவையும், தில்லி மன்னன், அவனுக்கு வழிக்குத் தேவையான பொருளையும் சாப்பாட்டு வசதிகளையும் அளித்து, வழி அனுப்பினன்.

கடைசித் தடவையாக மகம்மது கோரி படையெடுத்து வந்தான். இதற்குள் ஜயசந்திரனுக்குப் பிருதிவிராஜன்பேரில் இருந்த பொறாமை கொழுந்து விட்டு எரியத் துவக்கிவிட்டது. மிகக் கேவல உணர்ச்சியான பொறாமைக்குப் பலியான ஜயசந்திரன், மகம்மது கோரிக்குப் படை உதவி புரிந்து, பிருதிவி ராஜனேடு, போர் புரிந்தான். "முண்டனுக்கு இரண்டு ஆள்" என்ற சம்பிரதாயம் பலித்துவிட்டது.

பிருதிவிராஜன் தோற்றுப் போனன். இளங்காளை பிருதிவி ராஜன் உலகம் அறியாத சுத்த வீரன்; பாஞ்சால மன்னன் ஜயசந்திரன் படுகுழி வெட்டின, உலகம் அறிந்த துரோகி! பிருதிவி ராஜனை மன்னித்துப் போற்றுங்கள்! ஜயசந்திரனை மறந்து விடுங்கள்! முடியுமானல் மன்னித்து விடுங்கள். அவன் பலவீனன்,

தைரிய சம்பத்து

எல்லாரும் தைரியத்தைப் புகழ்கிறார்கள் ; வாழ்த்துகிறார்கள். மரத்தின் கடைசிக் கிளையில், குரங்கைப் போல தொத்திக்கொண்டிருப்பவர்களைப் பார்த்து, "தைரியசாலி" என்று பிரமித்துப் போகிறார்கள். உருப்பிரியாத இருளில் வழி நடந்து வந்தவனைத் தட்டிக் கொடுக்கிறார்கள். கூட்டத்தைக் கண்டு மலைக்காதவனை கும்பிடுகிறார்கள். எதிர்ப்புக்கு கலங்காதவனைப் பார்த்து வழிபடுகிறார்கள்.

எதற்காக, தைரியத்தைப் புகழவேண்டும் ? ஏன் கோழையாக வாழவேண்டும் ? இந்த விசித்திரத்தை, நீங்கள் உலகத்தில், ஏராளமாகப் பார்த்திருப்பீர்கள். தீரத்தனத்தைப் புகழ்ந்து கொண்டு வருபவர்கள், எவ்வாறு கோழைகளாக நடக்க சம்மதிக்கிறார்கள் ?

மாயை என்பார்கள் தத்துவ சாஸ்திரிகள் ; மாயம் என்பான் குடியானவன். மன்னிக்கத்தகாதது என்பான் இளைஞன். பொறுக்க முடியாதது என்பான் படாடோபக்காரன். அப்படித்தான் நடக்கும் என்பாள் பாட்டி, காலை நீட்டிக்கொண்டு. இதைப்பற்றி இவ்வளவு பேச்சா என்பாள் கட்டழகி.

இவர்கள் சொல்லுவது ஒருபுற மிருக்கட்டும். எந்தப் பொருளை நாம் புகழ்கின்றோமோ, அந்தப் பொருள், நம்மிடம் இருக்கவேண்டும் என்பது இயற்கையான ஆசைதானே? அது இயற்கையானால், அந்த இயற்கை வெற்றி பெறாமல், ஏன் தோற்றுப் போகவேண்டும்? ஆகவே, அதன் மர்மத்தை அறிந்து கொள்ள வேண்டாமா?

தைரியம் என்பது தங்கம், வைரம்போல ஒரு சம்பத்து, ஒரு சொத்து. தங்கத்தையும் வைரத்தையும் சுரங்கத்திலிருந்து வெட்டி எடுப்பது போலவே, தைரியத்துக்கும் ஒரு சுரங்கம் இருக்கிறது. அதில் கைவைத்தால் போதும், தானே, அந்த சுரங்கத்திலிருந்து, தைரியம் ஊற்றுப் பெருக்கைப்போல, அபரிமிதமாக வெளிவரும்.

மற்றவர்களைப் பகைத்து, அல்லது தனிவழி நின்றால் தான் தைரியம் என்று பலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். கொடுமைச் சித்தத்தைக் காண்பிப்பதுதான் தைரியம் என்று பலர் நினைக்கிறார்கள். அசாதாரணமான காரியத்தைச் செய்வதுதான் தைரியம் என்று சிலர் மயங்குகிறார்கள். பிறன் பேச்சைக் கேட்காமல், கொண்டி பிடிப்பது தைரியம் என்பது சிலருடைய நினைப்பு.

இவைகளில் சிலவற்றில், தைரியம் [illegible] மிகவும் லேசாகப் பழக்கிக் கொள்ளலாம். அதற்கு வித்வான் பரீட்சை கொடுக்க வேண்டியதில்லை. அதற்கு பயில்வான் பயிற்சித் தேவை இல்லை. அதற்கு படைத்திரட்டும் வேதனை வேண்டியதில்லை. அது, விளக்கு வெளிச்சத்தில் படித்துக்கொள்ளும் வித்தை இல்லை. அது வேடிக்கையுமில்லை; வித்தகமும் இல்லை.

மனதிலே பயம் குடிகொண்டிருப்பதினாலே, தைரியம் உண்டாவதில்லை. மனதிலே, பயத்தை ஏன் குடிவைக்க வேண்டும்? ஒரே ஒரு காரணம்தான் அதற்கு உண்டு. அந்தக் காரணத்துக்கு முட்டாள்தனம் என்று பெயர். மேலும், எதற்காக, பயப்படவேண்டும்? பயப்படுவது இயற்கையா? பயப்படுவது இயற்கையானால், தைரியமாயிருப்பதும் இயற்கைதானே?

இதைத் தெரிந்து கொள்ளாமலே, பலர், பயத்தை மடியில்கட்டிக் கொண்டே தூங்குகிறார்கள், நடக்கிறார்கள், பேசுகிறார்கள், சாப்பிடுகிறார்கள். பயந்துகொண்டே தூங்கினால், தூக்கம் வருமா? பயந்துகொண்டே நடந்தால், இடறி விழாமல் என்ன செய்கிறது? பயந்துகொண்டே பேசினால், குரல் இயற்கையாகவும் நேர்த்தியாகவும் இருக்குமா? பயந்துகொண்டே சாப்பிட்டால், ருசி இருக்குமா? ஜீரணம் ஆகுமா?

சமையலுக்கு, உப்பு எப்படி ருசியைக் கொடுக்கிறதோ, அதைப் போல, வாழ்க்கைக்கு ருசியைக் கொடுப்பது தைரியம்; வாழ்க்கையின் ருசியைக் கெடுப்பது பயம். இந்த ரகசியத்தைத் தெரிந்து கொண்டு, இயற்கையாக நடந்தால், தைரியம் தானாக வளர்ந்து விடுகிறது. பயம், சொல்லிக்கொள்ளாமலே போய்விடுமே!

தைரியம் என்பது சிரமப்பட்டு சம்பாதிக்கவேண்டிய சம்பத்தல்ல. விதையைப் பூமியில் போட்டால், முளை காணுகிறவித்தைதான், தைரியப் பயிற்சியிலும் இருக்கிறது. இயற்கையான தைரியம் என்ற விதையை மனம் என்ற பூமியில் போட்டுவிடுங்கள். அது தேக்கு மரத்தைப் போன்ற உறுதியான மரமாக முளைத்துவிடும்.

நம்முடைய மனதில் எவ்வளவு வஞ்சகமும் தன்னலமும் இருக்கிறதோ, அதற்குத் தகுந்தாற்போல, பயம் அழைக்காமலே வந்துவிடும். நாம் இயற்கையாக நடந்துகொள்ள முயன்றால், தைரியம் தானாகவே வரும். சிறு துளியாக வந்த தைரியம் சம்பத்தாகத் திரண்டுவிடும்.

———

ஹனுமானின் அதிருப்தி

கடலோடு கலக்கப்போகும் வெள்ள வேகத்தில் விழுந்து அடித்துக்கொண்டு செல்லும் ஒரு ஜன வெள்ளம். அதிலே சுழித்துச் செல்லும் ஒரு துரும்பு நான்! முந்தின சந்தர்ப்பங்களில் பார்க்கக் கொடுத்துவைக்காத ஒரு துரதிர்ஷ்டசாலி இதுவரையில்! இன்று கிடைத்துவிட்டது அந்த சந்தர்ப்பம்.

என்னைப்போல் இன்னும் எத்தனை பேர்களோ?

வழக்கமாக கண்களுக்குத் தெளிவாகப் புலப்படும் மெரினா ரேடியோ, கண்களுக்கு மங்கலாகி விட்டது. அதிலிருந்து வரும் சங்கீதத்தை ஏற்கக்கூட, காதுகள் செவிடாகிவிட்டன.

நேர் எதிரேபோய் நின்றுவிட்டேன். மேடைக்கு எதிரே ஒன்றரை பர்லாங்கு தூரத்தில்! இன்னும் கிட்டப் போவதற்கு என்ன என்று கேட்பீர்கள். தலை மீது கால் வைத்து நடக்க யாராவது சம்மதிப்பார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

'சீதையைத்தேடப்போன ராம தூதன் ஹனுமான் செய்தியைச் சொல்ல இன்னும் வரவில்லை.' 'சமரசத்தைக் கண்டேன்' என்ற செய்தியை எதிர்பார்த்து நிற்கும் கோடிக்கணக்கான ராமர்களுக்கு செய்தி சொல்ல, 'காங்கிரஸ் தூதன்' நேரு இன்னும் மேடைக்குவரவில்லை.

வானை வானைப்பார்த்துக்கொண்டிருந்தவரான வெள்ளத்தின் உற்சாகம் மனித வெள்ளத்தின் அத்தனை கண்களிலேயும் துள்ளிக் குதித்துக்கொண்டிருந்தது.

தூரத்தில் இருந்தால் பேச்சுக் கேட்கும். கிட்டப் போய் நின்றால் உருவம் தெரியும். இரண்டில் எதை தேர்ந்தெடுத்துக் கொள்வது? கண்ணுக்கும் காதுக்கும் கொஞ்சநேரம் ஒரு சின்னத்தகராறு. ஹிருதயம் கடைசியில் மத்யஸ்தம் செய்தது. ஆளுக்குப் பாதி என்று சீட்டுப் போட்டதிலே முதல் சந்தர்ப்பம் கண்ணுக்கு விழுந்தது.

இரண்டு பர்லாங்கு சதுரத்தின் பாதியைச் சுற்றிக்கொண்டு நேரே பின்னால் போய் நின்றேன். கண் திருப்தி அடைய அதுதான் ஏற்ற இடம். ஆறடித்து ஐந்து நிமிஷம் ஆயிற்று. மேடைமீது இருந்த போட்டோ எடுப்பவர்களின் உடல் பதைபதைப்பிலிருந்து தெரிந்தது எங்கோ கரை காணாத வெள்ளத்தில் நீந்தி ஹனுமான் வருகிறார் என்று.

ஒரு விநாடி தற்செயலாகக் குனிந்துவிட்டு, மறு விநாடி தலையை உயர்த்திப் பார்த்த போது, கரகோஷத்தின் வேகத்தில் தள்ளப்பட்டும், நிதானமாக எட்டுப்போட்டு மேடைமீது ஏறிக்கொண்டிருந்தார் ஜவஹர்.

‘போன செய்தி என்ன? சொல்லிவிட்டுப் பிறகு நாற்காலிக்குப் போங்களேன்’ என்று கேட்க வாயெடுத்த மனது, அந்த முகத்திலே தோன்றின அயர்ச்சியை கண்டு வாய் மூடிக்கொண்டுவிட்டது.

‘ஏன், பிரயாணத்தின் அயர்ச்சியாக இருக்கக்கூடாதா’ என்று ஒரு குறுக்குக் கேள்வி அதற்குள்.

‘பூ! ஆயிரக்கணக்கான மைல்கள் பிரயாணம் செய்த காலத்தில் எல்லாம் இந்த அயர்ச்சியில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட முகம் குறி காட்டினதில்லையே’ என்று அதற்குப் பதில்.

ஆம்; காரணம் அதல்ல. திருப்தி தரும் அளவுக்குச் சமரசத்தைக் காணவில்லை. லங்கை முழுவதும் தேடியாகிவிட்டது!.

அந்த அயர்ச்சிதான் முகத்தில். ஹனுமானுக்கு இழுக்கா அது? இல்லை, அவநம்பிக்கைக்கு வெற்றியா அது?

மனது இப்படி யோசிக்கையில், ஜவஹர் நேரே நாற்காலிக்குச் சென்றார். இல்லை. மேஜைக்கு. ஓரே தவ்வு. மேஜையின் மேலே எடுப்பாக உட்கார்ந்தது அந்த காந்தி உருவம். காந்திஜியின் அஹிம்சை ஒளியைப் பருகி தானும் ஒளி பெற்ற காந்தி ஸ்வரூபம் தானே அதுவும்!

முதல் பார்வையிலேயே என்னெல்லாம் தோன்றின அந்த உருவத்தைப் பார்த்ததும்?

அடக்கம்! ராஷ்டிரபதியென்ற பெயரை அடுத்தடுத்து தாங்கியும், பேர் சொன்ன அளவிலே லக்ஷக்கணக்கில் கூட்டம் கூடியும், ‘நான் சின்னவன்தான்’ என்று சொல்வது போல், அங்க அசைவுகளிலேதான் என்ன பவ்யம்? விழும் மாலைகளின் புகழ் மணத்திடம்தான் என்ன கூச்சம்?

ஆனால் அத்தனை கூச்சமும் அந்த தொனியில் எங்கே போய்விட்டது? வார்த்தைகளின் அத்தனை வேகமும் செய்கையாக வந்து விழுந்துகொண்டிருந்ததா?

வாஸ்தவம். ஜவஹர்லால் வாக்குச்சாதுர்யத்துக்குப் பேர்போனவரல்ல. செய்கை அழுத்தத்தைத்தானே, அவருடைய வார்த்தைகளைத் தொடரும் ஒவ்வொரு கையழுத்த அசைவும் காட்டுகிறது?

திருப்தியான செய்தி கொண்டு வரமுடியாததை வருத்தத்தோடு அன்று சொல்லிவிட்டு ஜவஹர் பறந்து சென்றுவிட்டார். இன்னும் அந்த உருவமும், தொனியும் என் கண் எதிரில்; காதருகில்!

பெற்றோர்களின் பள்ளி

"இன்னிக்கு, அப்பாகிட்டச் சொல்லி, உனக்கு அடிவாங்கி வைக்கிறேன், பார். அப்பாவுக்கு என்ன தெரியும்னு சொல்றே" என்றாள் பார்வதி.

"பார்வதி! நான் சொன்னதைத் தப்பாக எடுத்துக் கொண்டு, நீ ஏதோ உளறுகிறாய்? அப்பாவுக்கு ஒண்ணும் தெரியாதுன்னு சொன்னேன்? அப்பாவுக்கு ஒண்ணும் தெரியாதுன்னு, ஆபீசிலே, அவரை வேலைக்கு வச்சுக்குவாளோ" என்று சொல்லிவிட்டு, பரமசிவன் சிரித்தான்.

"நீ இப்போ, கேலி பண்றயே, இதையும் சேர்த்து, அப்பாகிட்டச் சொல்றேன். உன் முதுகுத்தோலைப் பிச்சுடச் சொல்றேன்" என்று பார்வதி ஆத்திரத்தோடு பதில் சொன்னாள்.

"முதுகுத்தோலைப் பிய்க்கிறதற்கு அப்பா வரவேண்டாம். நீ செஞ்சுடேன்! இதோ, முதுகைக் காட்டிண்டு நிற்கிறேன். தோலை, நாசூக்கா பிச்சுடு" என்று சொல்லிக்கொண்டே, பரமசிவன், பார்வதியின் பக்கம்போய் நின்றான். பார்வதிக்கு கோபம் தாங்க முடியவில்லை, பரமசிவனுக்குக் சிரிப்புத் தாங்க முடியவில்லை.

"குழந்தைகள், இந்தமாதிரி வாக்குவாதம் செய்துகொண்டிருக்கிற சமயத்தில், அவர்களுடைய தாயார் காமாட்சி அம்மாள், உள்ளே சமைத்துக்கொண்டிருந்தவள், வெளியே வந்து, "நீங்க ரெண்டு பேரும் இப்படி சண்டை பிடிக்கலாமா? நேத்திக்குத்தானே, அப்பா சொன்னா? அதுக்குள்ளே மறந்து போச்சா? நான் உங்களைச் சரியாய் கவனிக்கலேன்னு, என்னைக்கூட கோவிச்சுண்டாளே! ஏன் இப்படி படுத்துகிறீர்கள்" என்று பரிதாபக் குரலில் பேசினாள்.

"அம்மா! இந்த பரமசிவன், இன்னும் முளைச்சு மூணு இலை விடல்லே! இவன் அப்பாவைக் கேலிபண்ணவாவது! அம்மாவை, வாயடக்கப் பார்க்கவாவது! ஆம்பிளைக் குழந்தையாய்ப் பிறந்தா, அதிகாரந்தான் பண்ணச்சொல்லியிருக்கோ" என்று துடிதுடிப்போடு பேசினாள் பார்வதி.

“ தடையில்லாமே! ‘சாண்பிள்ளை ஆனாலும் ஆண்பிள்ளை. பார்வதி! அதை நெஞ்சிலே, மறந்துடாமே வச்சுக்கோ. ஆம்பிளே அதிகாரம் பண்ண பிறந்திருக்கிறன். அந்த அதிகாரத்துக்குக் கீழ்ப் படிய, பொம்பிள்ளே ஜென்மம் எடுத்திருக்கா” என்று பரமசிவன், சிரித்துக்கொண்டே, பதில் சொன்னான்.

“அம்மாவும் பொம்பிள்ளே! அவகூட, உன் அதிகாரத் துக்குக் கட்டுப்பட்டு நடக்கணுமோ” என்றாள் பார்வதி.

இதைக் கேட்டுக்கொண்டே, தகப்பனார் கணபதி உள்ளே நுழைந்தார். அவர் வந்ததும், இவ்வளவு நேரம், ஆகாயத்தை முட்டிக் கொண்டிருந்த சத்தமெல்லாம் எங்கேயோ ஒளிந்து கொண்டு விட்டது. குழந்தைகள், சாதுக்களைப்போல, தங்கள் புஸ்தகங்களைத் தேட ஆரம்பித்தனர்.

கணபதி, இந்தக் காட்சியைக் கண்டதும் சிரித்தார். “ஏன்! அப்பா! சிரிக்கிறீர்கள்” என்று பார்வதி, கணபதியின் கையைப் பிடித்துக்கொண்டு, தடவிக் கொடுத்தாள்.

“ இமைப்பொழுதிலே, நீங்கள் சாதுவாகப் போன அற்புதத் தைக் கண்டு, நான் சிரித்தேன். சற்றுமுன், தெருக்கோடி வரையிலும் கேட்ட உங்கள் சத்தம், இப்ப, திடீரென்று, நான் வந்ததும் எங்கேயோ பறந்து போய்விட்டதே” என்றார் கணபதி.

“இந்த பயம் கூட வேண்டாமா” என்று மிகவும் மெல்லிய குரலில், காமாட்சி அம்மாள் சொன்னாள்.

“இதைத்தான், அவர் சொன்னார். அவர் சொன்னது, ஒவ் வொன்றாக நிஜமாகிக்கொண்டே வருகிறது. நமக்கு குடித்தனம் நடத்தவும் குழந்தைகளை வளர்க்கவும் தெரியவே இல்லை” என்றார் கணபதி.

“அவர், அந்த காந்தி சிஷ்ன் என்ன சொன்னார் என்று சொல்லவே சொல்லாதேயுங்கள். அவர் அதைத்தான் சொன்னார் என்று அடிக்கடி சொல்லிக்கொண்டு இருங்கோ” என்று காமாட்சி அம்மாள் சொல்லுகிறபொழுது, கணபதி சிரித்தார்.

கணபதி சிரித்தது காமாட்சி அம்மாளுக்குக் கோபம். “கடைசீத் தடவையாக் கேக்கரேன். நீங்க சொல்லறகளா, மாட்டீர்களா? அவர் என்ன சொன்னார்? நீங்க சொல்லலேயானா, நான் இனிமே கேக்கப் போறதில்லே” என்று காமாட்சி அம்மாள் தடதட என்று பேசினாள்.

“ஏன் ஆத்திரம் வரது உனக்கு? அவர் சொன்னதை நான் சொல்லமாட்டேனா? சொல்லாமல் இருப்பதற்குத்தான், அவர் சொன்னார் என்று உங்களிடம் அன்னிக்கு நான் சொன்னேனே?

குழந்தைமாதிரி, உனக்கும் ஆத்திரம் வரதே! அதுதான் வேடிக்கை" என்று கணபதி, பதில் சொல்லுகையிலேயே, அந்தத் தெருக்காரர் ஒருவர் உள்ளே நுழைந்தார்.

"வாருங்கோ! முதலியார்வாள்! என்ன அவசர சமாசாரமோ! இதோ வந்துவிட்டேன்" என்றார் கணபதி.

"ஒண்ணும் அவசரமில்லே. ஒங்க பையன் பரமசிவன் பொல்லா வாலாப் போய்ட்டான். இந்தத் தெருவிலே, சதா அவனுலே சண்டை தான். நம்ம சின்னப் பையன் மண்டையிலே கல்லாலே அடித்து, ரத்தக் காயம் உண்டாக்கிட்டான். அவனைப் பிடிச்சு நான் அடிக்கிறது நல்லாயிருக்காது என்று உங்ககிட்ட சொன்னேன். அதுக்குத்தான் வந்தேன். கொஞ்சம் கண்டிச்சு வையுங்கோ!" என்று சொல்லி விட்டு, அவர் போய்விட்டார்.

கணபதிக்கு அடங்காத துக்கம். பக்கத்திலே நின்றுகொண்டிருந்த பரமசிவனைப் பார்த்தார். அவன், நிழலில் மறைந்தது மாதிரி, எங்கேயோ, மறைந்து போய்விட்டான். பார்வதியின் முகத்திலே, சந்தோஷம் நர்த்தனம் செய்துகொண்டிருந்தது.

"இவ இப்போ ரொம்ப கொம்மாளமாய்ச் சிரிச்சுண்டு இருக்காளே, இவள் ரொம்ப நல்லவளோ? நம்மாத்து வெத்தலேத் தட்டை, ஓசப்படாமே, எதிராளாத்திலே இவ கொடுத்து எத்தனே நாளாச்சு இன்னு கேளுங்கோ" என்றாள் காமாட்சி அம்மாள்.

"பார்வதியாவது சாது என்று நான் எண்ணிக்கொள்ளப்படாது போலிருக்கிறது. அவளேயும் பத்தி ஏதாவது சொன்னு, என் துக்கம் நிறை குடமாய்ப் போய்டனு மோன்னே" என்று கணபதி அலுத்துக் கொண்டார்.

"சரி! பரமசிவன் எங்கே? அவனைக் கூப்பிடு" என்றார் கணபதி.

காமாட்சி அம்மாள் கூப்பிட்டாள். பதில் சத்தம் இல்லே. பார்வதி கூப்பிட்டுப் பார்த்தாள். சத்தம் இல்லே. கணபதியும் கூப்பிட்டார். சத்தமே இல்லே. ஆகவே, எல்லோரும் சேர்ந்து, அறை அறையாகத் தேடினர்கள். எங்கேயும் காணவில்லே. கணபதி சலித்துக்கொண்டார். "இந்த அசடு எங்கேயோ போய் விட்டதே! இவனை எங்கே தேடறது" என்றார் கணபதி.

"எங்கேயும் அவனைத் தேட வேண்டாம் அப்பா! அவன் மெத்தைக்குள்ளே மெத்தையா உருண்டு படுத்துண்டு இருப்பான். மெத்தையைப் பாருங்கோ" என்றாள் பார்வதி.

அவள் சொன்னபடியே, பெரிய மெத்தையைச் சோதித்தார்கள். காணவில்லே. சின்ன மெத்தையைச் சோதித்தார்கள். பரமசிவன், அதற்குள், மூச்சுவிடாமல் படுத்துக்கொண்டிருந்தான்.

"அசடு! எழுந்திரு" என்றார் கணபதி. பரமசிவன, வாய் திறக்காமல், அப்படியே படுத்துக்கொண்டிருந்தான். "ஏ! எழுந்திருடா" என்றாள் தாயார். "அப்பா அடிக்கல்லேன்னு சொன்னா, எழுந்திருக்கிறேன்" என்று பரமசிவன் அழுதுகொண்டே சொன்னான்.

"நான் ஏன் உன்னை அடிக்கிறேன்? நீதான் ஊரார் மண்டையை உடைக்கிற வீரனாகப்போய் விட்டாயே" என்று சொல்லிக் கொண்டே, கணபதி பரமசிவனைத் தூக்கினார். தூக்கும் பொழுது, அவன் "வீர்" என்று அலறினான். "ஏண்டா" என்றாள் காமாட்சி அம்மாள்.

"எதிர்த்த வீட்டு வீரு, என் சுண்டு விரலைக் கடிச்சு, காயம் பண்ணிட்டான், அம்மா! அது வலிக்கிறது" என்றான் பரமசிவன்.

"வீரு உன் விரலைக் கடிச்சது, நீ முதலியார் வீட்டுப் பையன் பேரிலே கல் எறிந்ததற்கு முந்தியா, பிந்தியா?" என்று தகப்பனார் கேட்டார்.

"நான் முதலியார் வீட்டுப் பையன் பேரிலே, கல் எறியல்லே அப்பா! எறியப்போனேன்! வீரு என்னைக் கடிச்சுட்டான். வீருவும் முதலியார் வீட்டுப் பையனும் சினேகம்" என்று பரமசிவன் அழுதான்.

"அம்மா! காமாட்சி அம்மா! நீதான் மகாராஜி! வீட்டிலே என்ன நடக்கிறதுன்னு தெரியாமலே, நீ காலம் தள்ளிண்டு வரே! என் கிட்ட பயமும் உன் கிட்ட பயமும் இருந்தால் மட்டும் போதுமா? இந்தக் குழந்தைகள் உருப்படணும்னா, அவர், அவர் என்று நீ ஆத்திரத்தோடு கேலி செய்கிறயே, அவர் சொல்றபடி செய்யத்தான் வேணும்" என்றார் கணபதி.

"அவர் என்ன சொன்னார், அப்பா! தினம் தினம் ஆசை காண்பிச்சு, சரேன்னு மறச்சுப்பிடுகிறளே! அப்பா! இன்னிக் காவது சொல்லுங்க! அப்பா" என்றாள் குழந்தை பார்வதி.

"அடே! பரமசிவம்! இங்கே வா! கையைப் பார்ப்போம். பல் விஷம் பொல்லாத விஷமாச்சே! விளையாடலாம். சண்டை போடலாமோ" என்றார் கணபதி.

புதிய உலகம்

(வ. ரா.)

என்னுடைய நண்பர்கள் சுந்தரமும் கோபாலனும் அருமையான பேர்வழிகள். குறுக்கு வெட்டு வெட்டுவதில், சுந்தரம் கை தேர்ந்தவர். விஷயத்தை அமைதியுடன் வாங்கிக்கொண்டு, பதில் சொல்வதில், கோபாலன் மிகவும் பேர்போனவர். இருவரும் சத்தியசீலர்கள். ஆனால், புதிய உலகம் என்று நான் வாய் திறந்து விட்டால் போதும்; உடனே, அவர்கள், 'கடகட' வென்று சிரிப்பார்கள்.

அதுவும் சுந்தரத்தின் சிரிப்பை அடக்கவும் முடியாது; தாங்கவும் முடியாது. அந்த சிரிப்பில், அவ்வளவு சந்தேகமும் புரளியும் கலந்திருக்கும். சுந்தரத்துக்குப் புதிய உலகம் என்பதில் நம்பிக்கையே இல்லை. கோபாலனுக்கு நம்பிக்கை உண்டு. ஆனால், புதிய உலகத்தை ஸ்தாபிப்பதற்கு வழி தெரியாது. ஆகவே, அவரும் கூடச் சேர்ந்து கொண்டு சிரிப்பார்.

சுந்தரம் தான் கிண்டலாகச் சம்பாஷணையைத் துவக்குவார். கோபாலன் அதை ரசித்துக்கொண்டிருப்பார். எனக்கோ, தாங்க முடியாத வருத்தம் உண்டாகும்.

சுந்தரம் :—வ. ரா! உங்கள் புதிய உலகத்திலே, சூரியன் எங்கே உதிக்கும்? கிழக்கேயா, மேற்கேயா? கத்தரிக்காய் காய்க்குமோ, காய்க்காதோ? மனிதர்களுக்கு ஆடை யுண்டோ? உங்கள் புதிய உலகத்தில், சினிமா இருக்குமா? பத்திரிகை உண்டா? விமர்சனக்காரர்கள் இருப்பார்களா?

இம்மாதிரி, சுந்தரம், கேள்விகளை, அடுக்கிக்கொண்டே போவார். சுந்தரம் அடுக்க அடுக்க, கோபாலன் சிரிப்பினால் குலுங்கி விடுவார். இப்படி, வேண்டுமென்றே கிண்டலாய்க் கேள்வி கேட்கிறாரே என்று ஆத்திரம் எனக்கு வந்தாலும், அது ஒரு நிமிஷம் தான். அடுத்த நிமிஷம், நானும் கூடச் சிரிப்பேன்.

அபத்தமாக, காரண மில்லாமல், யோசனை யில்லாமல் ஒருவர் சிரித்தாலும், அந்த சிரிப்புக்கு ஒரு வசீகர சக்தி இருக்கிறது. அந்த சிரிப்பில், எல்லாரும் கலந்து கொள்ளத்தான் வேண்டியதாய் விடும். நான் சிரித்தவுடனே, சுந்தரம் கொம்மாளத்துடன், "வ. ரா!" நீங்கள்

சிரித்து விட்டீர்கள். ஆகவே, உங்கள் 'புதிய உலகு' கேஸ் தோற்றுப் போய் விட்டது" என்பார்.

"சிரிப்பு, சம்மதமும் அல்ல, தோல்வியுமல்ல. சிரிப்பு, கிண்டலுக்கு காணிக்கை. உங்களுடைய கிண்டல் கேள்விகள் எவ்வளவு அபத்தம் என்று நினைத்து, அந்த அபத்தத்தைக் காண்பிப்பதற்காக சிரித்தேன்" என்பேன்.

"வ. ரா! உங்களுக்குப் புதிய உலகம் என்ற பைத்தியம் பிடித்திருக்கிறது. இந்தப் பித்துக்கு, மருந்தும் கிடையாது; ஆஸ்பத்திரியும் இல்லை. உங்களை வெளியே விடுவதும் பிசகு; உள்ளே பூட்டி வைப்பதும் முடியாது. ஆகவே, நாங்கள், உங்கள் பைத்தியத்தை அனுபவித்துத்தான் ஆகவேண்டும்" என்று சுந்தரம் சிரிப்பார். நானும் கோபாலனும் கூடச் சிரிப்போம்.

கோபாலன் :—வ. ரா! சுந்தரத்தின் கேலி ஒருபக்கம் இருக்கட்டும். தெளிவாகச் சொல்லாமல், "புதிய உலகம்" என்று நீங்கள் ஜபம் செய்வதில், பயன் இல்லை. உங்கள் புதிய உலகத்தில், என்ன இருக்கும்? ஏதாவது அதிசயம் இருக்குமா?

நான்:—அதிசயத்தைக் குழந்தைகள்தான் விரும்பும். அறிவு குறையக் குறைய, எல்லாம் அதிசயமாகத் தோன்றும். அறிவு முதிர முதிர, எல்லா நிகழ்ச்சிகளும், முறைப்படி, சட்டப்படி நடப்பதாக விளங்கும்.

சுந்தரம் :—வ. ரா! முறை, சட்டம்! இந்த வார்த்தைகள் வேண்டாமே! முறை என்பதை யார் கண்டு பிடித்தார்? அதை யார் ஏற்றுக்கொண்டார்? சட்டம் என்பதை யார் ஆக்கினர்? அதை யார் ஏற்றுக்கொண்டார்? மூளையைக் குழப்புகிற மாதிரி, எதையும் பேசவேண்டாம்.

நான் :—சுந்தரம்! உங்களுக்கு, இப்பொழுது நீங்கள் வாழ்ந்து வருகிற உலகம் பிடிக்கிறதா?

சுந்தரம்:—பேஷாப் பிடிக்கிறது! கையிலே கொஞ்சம் பணம் வரட்டை; அது மட்டும் இருந்துவிட்டால், இந்த உலகத்தை விட்டுப் போகிறதற்கே, எனக்கு மனம் இருக்காது.

நான் :—நிசமாகவா? பொய், சூது, பேராசை, வஞ்சகம், கோழைத்தனம், நிறப் பைத்தியம் முதலியவைகள், இப்பொழுதிருக்கிற உலகத்தில், எந்த நிலைமையில் இருக்கின்றன?

சுந்தரம் :—அவைகள் மலிந்து கிடக்கின்றன.

நான் :—அப்படி யிருந்தாலும், இந்த உலகம் பிடிக்கிறது என்று சொல்லுகிறீர்களா?

சுந்தரம் :—ஆமாம்! நான் கோழையாக இருக்கும்பொழுது, எனக்கு தைரியம் பிடிக்குமா? நான் பொய் சொல்லுகிற பொழுது, எனக்கு உண்மை பிடிக்குமா? எனக்கு......

கோபாலன் :—சுந்தரம்! கிண்டல் செய்யப்படாது. பொய், துன்பம், வியாதி, பயம் முதலிவைகள் நிறைந்திருக்கும் ஒரு இடத்தில், யாரும் சந்தோஷமடைய முடியாது. யாரும் நீண்ட காலம், மன நிம்மதியுடன் வாழ முடியாது.

சுந்தரம் :—நீங்கள் எல்லோரும் மனித இயற்கையை மாற்றப் பார்க்கும்.......

நான் :—அசடர்கள் என்று தாராளமாகச் சொல்லலாம்.

சுந்தரம் :—ஆமாம்! அப்படித்தான், சொல்ல வாயெடுத்தேன்.

கோபாலன் :—மனித இயற்கை என்று நீங்கள் பொதுப்படையாகப் பேசிவிட்டீர்களே! அதுக்கு என்ன அர்த்தம்?

சுந்தரம் :—(கிண்டலாக) 'மனித இயற்கை என்றால் மனித இயற்கை தான்'. மாட்டு ரக்கை அல்ல.

கோபாலன் :—ஸ்வாரஸ்யமான இடத்திலே, விகடம் செய்து, விஷயத்தைக் கெடுத்துவிடப் பார்க்கிறீரே!

சுந்தரம் :—ஆமாம்! தர்க்க சாஸ்திர "தம்" எவ்வளவுநேரம் பிடிக்கிறது? விஷயத்தைச் சட்டுப்பிட்டென்று முடிக்கவேண்டாமா? நீட்டிக்கொண்டே போகிறதில் லாபம் இல்லே. சரியான முடிவுக்கு வரப் போகிறதில்லே. பாவம்! வ. ரா. புதிய உலகக் கனவு காண்கிறதை நாம் கெடுக்க வேண்டாம். நாம் போவோமா?

நான் :—சுந்தரம்! உங்களைப்போல, எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். விஷயத்தை யோசிக்க மனமில்லாமல், பளிர் என்று விகடம் செய்கிறது! அல்லது அலுத்துக் கொள்ளுகிறது!

கோபாலன் :—வ. ரா! நம்ம சுந்தரத்தின் குணம் நமக்குத் தெரியும். நீங்கள் தான் சொல்லுங்களேன்? புதிய உலகம் என்றால் என்ன?

நான் :—நான் சொல்லுகிறேன். சொல்லிமுடித்தவுடனே, இவ்வளவு தானு என்று நீங்கள் சொல்லப்போகிறீர்கள்! புதிய உலகம் என்பது உங்களுக்கும் தெரிந்ததுதான். ஆனால் அதைப்பற்றி, நீங்கள் சிரத்தையாக யோசித்ததில்லே. அவ்வளவுதான்.

சுந்தரம் :—சிரத்தை அதிகமாயிருந்தால், சுவரில் முட்டிக்கொள்ள வேண்டிய நிலைமைக்கு, நமக்கு பைத்தியம் பிடித்துவிடும்!

நான் :—கேலி இருக்கட்டும். நம்மை நாம் புத்திசாலி என்று எண்ணிக்கொண்டிருக்கிறோம். இல்லையா?

சுந்தரம் :—ஆமாம்! சந்தேகமே இல்லை.

நான் :—அப்படியானால் —

சுந்தரம் :—புதிய உலகத்துக்காக பாடுபட வேண்டுமோ?

நான் :—பொறுங்கள். பொய், பீடி, கள், அபின், சூது முதலியவை கள் புத்திசாலிகள் கண்டுபிடித்த பொக்கிஷங்களா? இவைகளைக் கண்டுபிடித்தவர்கள் யாரோ, அநாமதேயப் பேர்வழிகள். அவர்கள் கண்டுபிடித்து, ஜன சமூகத்திலே ஏற்றிய ருசிகளையும் பழக்கங்களையும், புத்திசாலியாகிய நீங்கள் ஒப்புக்கொள்ளுவீர்களா?

சுந்தரம் :—ஒப்புக்கொள்ளக்கூடாது; ஆனால் ஒப்புக் கொள்ளாமல் முடியாது. நம்மால் அவைகளை அழிக்க முடியாது போலத் தோன்றுகிறது.

கோபாலன் :—சபாஷ்! சுந்தரம்! உங்கள் கேஸ் முறிந்துபோய் விட்டது. அழிக்க முடியாது என்று எப்படி நீங்கள் கண்டு பிடித்தீர்கள்? முயன்று பார்த்ததுண்டோ நீங்கள்?

சுந்தரம் :—சில காரியங்களை முயன்று பார்க்கத் தேவையில்லை. சந்திரனைத் தொடலாமா, முடியாதா என்று தெரிந்து கொள்ளுவதற்காக, தெருவில் நின்றுகொண்டு தாவித் தாவிப் பார்க்க வேண்டுமோ?

நான் :—பேஷ்! சரியான உபமானம்! விஷயத்தைத் தெரிந்து கொள்வதற்காக கட்சி பேசும் முறை இதுதானே?

சுந்தரம் :—உலகம் பிறந்தது முதல் பொய்யும் சூதும் கோழைத் தனமும் இருந்து வருகின்றன. உலகம் அழியும் வரையில், அவைகள் இருக்கும் என்று தோன்றுகிறது.

கோபாலன் :—இதற்கு நொண்டி வாதம் என்று பெயர். நோய் இருக்கத்தான் செய்யும், மருந்து வேண்டாம். கால் இருக்கத் தான் செய்யும், வாகனம் வேண்டாம். பொய் இருக்கத்தான் செய்யும், புத்தியும் சத்தியமும் வேண்டாம். விதி இருக்கத் தான் செய்யும், முயற்சி வேண்டாம். இந்தமாதிரி பேசுவது, புத்திசாலித்தனம் ஆகுமா? பொறுப்பு உடைமை ஆகுமா?

சுந்தரம் :—சரிதான்!

நான் :—கேலி செய்யாதேயும்! நல்ல காற்று, சுத்தமான நீர், ஆரோக்கியமுள்ள இருப்பிடம், பக்குவமான ஆகாரம், சுவையான இன்பம், இவைகளை மனிதர்கள் நாடுகிறார்களா, இல்லையா?

சுந்தரம் :—ஆம்!

நான் :—அவைகள் எல்லாம் உடலின் தேவைகள். ஆனால், இந்தத் தேவைகளை, சில நல்ல குணங்களைக் கொண்டுதான், பூர்த்தி செய்துகொள்ள முடியும். மனிதன் அறிவில் உயரவேண்டும். பழைய பலவீனங்களும் துர்ப்பழக்கங்களும் போகவேண்டும் என்ற ஆசை, உங்களுக்கு இல்லையா?

சுந்தரம் :—ஆசை இல்லாமல் இருக்குமா? அவைகளைப் போக்கடிக்கிற வழி தெரியவில்லை. தெரிந்தாலும், என்னமோ சோம்பலாயிருக்கிறது. காந்தி கூடத்தான், இருபது வருஷமாக, புதிய யுகம், புதிய உலகம் என்று எவ்வளவோ உபதேசம் செய்து பார்க்கிறாரே!

நான் :—ஆமாம்! நீங்கள், சோம்பல் என்று சொன்னீர்களே, அதனாலேதான், முயற்சி குறைந்துபோய்விட்டது. ஆகவே, முடியாது, முடியாது என்று எதையும், யோசிக்காமலே, முடிவு செய்து விடுகிறோம். முட்டாள்களாகவும் கோழைகளாகவும் இருக்கிறவர்கள், தங்கள் ருசிகளையும் பழக்கங்களையும், மனிதர்களுக்குள் எப்படியோ ஏற்றி விடுகிறார்கள். புத்திசாலிகளாகவும் தைரிய சாலிகளாகவும் இருக்கிறவர்கள், அவைகளை மாற்ற முடியாது என்று முடிவுகட்டிக் கொள்கிறார்களே!

சுந்தரம் :—அதுதான் வேடிக்கை.

கோபாலன் :—அது வேடிக்கை அல்ல. அதற்குள் சோம்பல், பொறுப்பின்மை, அன்பில்லாமை என்று எப்படி யெல்லாமோ பெயர் கொடுக்கலாம். சோம்பலாலும் பொறுப்பில்லாமையாலும் அறிவாளிகளைப் போல, எல்லோரும், முடியாது என்று எதையும் முடித்து விடுகிறார்கள்.

சுந்தரம் :—அப்படிச் செய்வது தான், சுவாமி! மனித இயற்கை.

நான் :—மனித இயற்கை என்பதை கேவலப்படுத்தி பேசாதேயுங்கள். அபூர்வமான கட்டிடத்தைக் கட்டியவனும் மனிதன். அதைப் பாழாக்கினவனும் மனிதன்! உலகத்துக்கு அறிவைத் தேடிக் கொடுக்கும் புண்ணியவானும் மனிதன், அந்த அறிவைத் துர்வினியோகம் செய்பவனும் மனிதன்! தியாக புருஷனும் மனிதன், தங்கலத்தைப் பேணும் பதரும் மனிதன்! வீரனும் மனிதன், கோழையும் மனிதன்! பேஷ்! யாரை நீங்கள் மனிதன் என்றும் எதை மனித இயற்கை என்றும் சொல்லவேண்டும்?

கோபாலன் :—உண்மை தான்! மனிதனுடைய பலவீனங்களை யெல்லாம் மூட்டை கட்டி, அந்த மூட்டையை மனித இயற்கை என்று சொல்லுவது தவறாகும். வல்லமையும் வாய்மையும் உருத்திரண்டு நிற்கும் மனிதன் தான் மனிதன். அவனுடைய தன்மையை தான் மனித இயற்கை என்று சொல்லலாம்.

நான் :—அதைத்தான் நான் சொல்லுகிறேன். நான் சொல்லுகிற புதிய உலகமும் அதைத்தான் குறிப்பிடுகிறது. மனிதனுடைய கீழ்த்தரமான தன்மைகளை மாற்றி, உயர்ந்த தன்மைகளை நிலைநாட்டுவது தான் புதிய உலகத்தைப் படைப்பதாகும். சூரியன் இருந்த இடத்தில் தான் இருக்கும். நேற்றைக்குப் பார்த்த மரம், அந்த இடத்திலேயேதான் இருக்கும். புளியமரத்தில் புளிதான் காய்க்கும். மேகம் தான் மழையாகப் பொழியும். இவைகள் எல்லாம் பழையமாதிரி தான் இருக்கும். ஆனால், மனிதன் மட்டும் மாறி, உயர்ந்திருப்பான். அதற்குத்தான், புதிய உலகம் என்று பெயர்.

சுந்தரம் :—சரிதான்.



‘ரயில்வே ஸ்டேஷனுக்குப் போக என்னப்பா கேக்கறே?’

‘எட்டணாக் கொடுங்க சாமி.’

‘எட்டணாவா! இந்தா, அதை என் கிட்டக் குடு. நீ ஏறிக் குந்திக்க; நான் ஒட்டறேன்.’

பரதேசத் தபால்

நமஸ்காரம்!

நான் ஒரு பட்டதாரி. நான் எம். ஏ. ஆனால், சரியாகத் தமிழ் எழுதத் தெரியாது. நான் இப்பொழுது எழுதுகிறதுகூட, ஏதோ பழக்க வாசனையால் எழுதுகிறேனே யொழிய, படிப்பு வாசனையால் அல்ல.

எனக்கு இப்பொழுது வயது இருபது ஆகிறது. ஆனால் கலியாணம் ஆகிவிட்டது. இருபது வயது ஆகி, எம்.ஏ. தேறி விட்டேனே, கலியாணமும் ஆகிவிட்டதே! என் வாழ்க்கையின் விநோதம், உங்களுக்குச் சொன்னால்தான் தெரியும். அதை உங்களிடம் சொன்னால்தான், என் மனதுக்கும் ஒருவகையில் ஆறுதல் உண்டாகும்.

என் தகப்பனார் உத்தியோகஸ்தர் அல்ல. முப்பதுநாள் ஆனதும், கஜானா திறக்கிறதே, அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவருமல்ல. என் தகப்பனாரோ, கஜானாவில் பணம் செலுத்துகிற மிராசு கோஷ்டியைச் சேர்ந்தவர்.

நான் படிக்க ஆரம்பித்த பொழுதும், என் சகோதரிகளுக்குக் கலியாணம் செய்ய என் தகப்பனார் துவக்கிய காலத்தும், அதாவது பதினான்கு வருஷங்களுக்கு முன்னால், எங்கள் ஊரில், எங்கள் தகப்பனாருக்கு லட்சப் பிரபு என்று பெயர்.. அந்தப் பெயர், இந்தப் பதினான்கு வருஷங்களுக்குள் எங்கேயோ பறந்துபோய் விட்டது.

எங்கள் தகப்பனாருக்கு, கொஞ்சம் கையில் ரொக்கமும் இருந்தது. இப்பொழுது அவரிடம், கைதான் பாக்கி; ரொக்கம் போய்விட்டது. இது என் தகப்பனாரைப் பற்றிய சிறு குறிப்பு.

நான் படிக்க ஆரம்பித்த நாள் தொட்டு, எந்தப் பரீட்சையிலும் நான் தோற்றதேயில்லை. நூற்றுக்கு நூறு வாங்கும் பிள்ளைகளில் சாம்பன் ஒருவன் என்று என் வாத்தியார்கள் என்னைப் பற்றிப் புகழ்வார்கள். ஒவ்வொரு பரீட்சையிலும், முதல் வகுப்பில் தேறி, அலுத்துப் போனேன். எம். ஏ.யிலும் முதல் வகுப்புதான்.

எம். ஏ. தனியாக இருக்கப்படாது என்று எண்ணிற்றோ என்னமோ, இந்த உலகம்?, எனக்கு கலியாணத்தையும் செய்து வைத்

துப் பார்த்துவிட்டது. எனக்கு பரீட்சையில் கீர்த்தியையும், வாழ்க்கையில் துணைவியையும் தேடிக்கொடுத்த உலகத்துக்கு வல்லமை அற்றுப் போய்விட்டதோ என்னமோ?

அதுவரையிலும், என்னைக் கண் கொட்டாமல் கவனித்துப் பார்த்துக்கொண்டு வந்த உலகம், திடீரென்று தன் கண்ணை மூடிக்கொண்டு, கவலையில்லாமல் தூங்குகிறதே? இப்பொழுது நான் என்ன செய்கிறேன் என்பதைப் பற்றி, அதற்குத் துளிக்கூட கவலை இருக்கிறதாகத் தெரியவில்லையே?

நான் எம். ஏ. பட்டம் பெற்றதுதான் மிச்சம். நான் பட்டணவாசியாகிவிட்டேன். கிராமத்து வாழ்க்கையே எனக்குப் பிடிக்கவில்லை. கிராமவாசிகளுக்கு என்ன தெரியும் என்று நான் அலட்சியமாய் இருந்தவன். அவர்கள் எப்படியோ பிழைப்புக்கு வழி தேடிக்கொள்ளுகிறார்கள். நான் பட்டணத்தில் வாசம் செய்து, பணச் செலவு செய்வதைத்தான் பழக்கிக்கொண்டிருக்கிறேன். ரொம்பவும் வெட்கமாயிருக்கிறது.

திறந்திருக்கும் ஆபீஸ்களிலெல்லாம் நுழைந்து பார்த்து, "வேலையுண்டா" என்று கேட்டாயிற்று. எங்கு பார்த்தாலும், "இல்லை" என்ற குரல்தான் கம்பீரமாகக் கேட்கிறது. நேரே போக முடியாத ஆபீஸ்களுக்கெல்லாம், விண்ணப்பம் அனுப்பினேன். அங்கேயும் அதே கதிதான்.

காலேஜில் படிக்கும்பொழுது, நான் எவ்வளவு உல்லாசமாய் இருப்பேன்? எவ்வளவு செலவு செய்வேன்? எவ்வளவு அலட்சியமாக, நான் உலகத்தைப் பற்றிப் பேசுவேன்? எம். ஏ. என்றால், தேவலோக வாசி என்று எண்ணி, இறுமாந்து போவேன்! எம். ஏ-க்கு யார் ஈடு என்று எண்ணுவேன்! அந்தக் காலத்தை நினைத்தால், பகீர் என்கிறது.

முப்பது நாள் உழைத்து, பத்து ரூபாய் சம்பளம் வாங்குபவன் கூட என்னைக் காட்டிலும் உயர்ந்தவன் என்ற எண்ணம் எனக்கு உண்டாயிருக்கிறது. தெருவிலே பிச்சை எடுப்பவன் கூட, என்னைக் காட்டிலும் சந்தோஷமாக இருக்கிறான். நானோ, நாளை எண்ணி எண்ணி, ஓய்ந்து போய்க்கொண்டிருக்கிறேன்.

என் அனுபவத்திலிருந்து ஒன்று தெரிகிறது. நான் படித்த படிப்பு வயிற்றுப் பிழைப்புக்கான படிப்புக்கூட அல்ல. இந்தப் படிப்பினால், மனதிலிருக்கும் பயமும் ஏக்கமும் போவதுமில்லை. பயத்தையும், ஏக்கத்தையும் பதின்மடங்கு விருத்தி செய்யும் படிப்பு இது என்று எனக்கு நிச்சயமாய்ப் படுகிறது.

பள்ளிக்கூடத்திலே, குழந்தைகளைப் படிக்கவைக்கும் பெற்றோர்கள், காலேஜ் படிப்பு வந்ததும், அதைப்பற்றி யோசனை செய்து பையன்களைக் காலேஜுக்கு அனுப்பும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். காலேஜ் படிப்பினால், வயிற்றுப் பிழைப்புக்கு வழியில்லை.

எம். ஏ. பட்டதாரி.

சங்காதர வியாபாரிகளுக்கு,

நான் ஒரு வியாபாரி. சென்னை ராஜதானியில் இப்பொழுது நடந்துவரும் காங்கிரஸ் ஆட்சியால், வியாபாரிகளுக்கு எல்லாம் நாசம் வந்துவிடும், நாசம் வந்துவிட்டது என்று நாலா பக்கங்களிலிருந்தும் பயத்தைக் கிளப்பிக் கொண்டு வருகிறார்கள். இதை நீங்கள் நம்புகிறீர்களா?

வியாபாரிகளின் நிலைமையைச் சரிவர உணர்ந்து கொள்ளாதபடி, இந்த பீதியை, விஷமக்காரர்கள் கிளப்பி விட்டுக்கொண்டு வருகிறார்கள். நம்முடைய நிலைமை என்ன? இங்கே வாங்கி, அங்கே கொடுப்பதுதான் நமது தொழில். சந்தையிலே எந்த சரக்குக்குப் பிரிசம் உண்டோ, அதை நாம் வாங்கி விற்கிறோம்.

கட்டுக்கடைச் சரக்கினால், அதிக லாபம் சம்பாதிக்கலாம் என்று பேராசைப் பட்டுக்கொண்டிருப்பவர்கள் பலர், தாங்கள் கட்டி வைத்துக்கொண்டிருக்கிற சரக்கு, நல்ல லாபத்துக்கு விற்குமோ விற்காதோ என்று பயப்படலாம்.

கட்டுக்கடைச்சரக்கு என்பதே, எவ்வளவு காலத்துக்கு? மேலும், பத்து சில்லறை வியாபாரிகளின் வாயிலே மண்ணைப் போட்டுவிட்டு, எல்லா லாபத்தையும் தாங்களே அடையவேண்டும் என்று பேராசை பிடித்த சிலருக்கு, இந்தக் காங்கிரஸ் ஆட்சியின் நன்னோக்கம் பிடிக்காமலிருக்கலாம். மற்றவர்கள், காங்கிரஸ் ஆட்சியின் போக்கை ஆதரிக்கத்தான் வேண்டும்.

காங்கிரஸ் மந்திரிமார்கள், விற்பனை வரி போட்டுவிட்டார்களாம்! அதனாலே, வியாபாரமே சீர்குலைந்து போய்விடுமாம்! இந்த மாதிரிக் கட்சி சொல்லுவது ரொம்பவும் தப்பிதம். விற்பனை வரி கொடுப்பவர்கள் வியாபாரிகளா? பொது ஜனங்களா?

சாமானை வாங்குகிறவன் வரியைக் கொடுக்கிறான். அதாவது, வரிக்கும் சேர்த்து, நாம் விலையைச் சொன்னால், வாங்குகிறவர்கள் வாங்கித்தானே ஆகவேண்டும்? விலை அதிகமாய்ப் போனால், வாங்கமாட்டார்கள் என்று சொல்வது தவறு. முடையான சாமான் எப்போதும் விலை போகும். ஆனால், முடை என்பதை உண்டாக்கப் பார்ப்பது தவறு.

முடையை உண்டாக்கி, கொள்ளை லாபம் சம்பாதிக்கப் பார்க்கிற வியாபாரிகளுக்குத்தான், விற்பனை வரி பிடிக்காது. அந்த வரி தவறு என்று அவர்களுக்குத்தான் தோன்றும். தங்கள் லாபத்தைக் குறைத்துக் கொண்டு, பொது நன்மையிலே, கொஞ்சம் சிரத்தை வைத்தால், விற்பனை வரியை, வியாபாரிகள் எல்லோரும் கொண்டாடுவார்கள்.

நாம் சேர்க்கும் பணத்துக்கு, நல்ல வினியோகம் வேண்டாமா? குடிகாரர்களைக் குடிக்காமல் தடுக்கும் தர்மத் தொண்டுக்கான செலவுக்கு, வியாபாரிகள் கொஞ்சமாவது, தங்கள் லாபத்திலிருந்து, பணம் கொடுத்து உதவவேண்டாமா? வியாபாரிகள் செய்யக் கூடிய ஒத்தாசைக்குத்தான் விற்பனை வரி என்று பெயர்.

குடியை ஒழிக்கும் புண்ணியச் செயலிலே, நமக்குப் பங்கு

வேண்டாமா? அதை யோசித்துப் பாருங்கள். யாரோ சிலர், தாம் எண்ணத்தைக் கொண்டோ, அல்லது அறியாமையாலோ, நமக்குத் துர்ப்போதனை செய்ய வந்தால், "வேண்டாம் உங்கள் யோசனை" என்று தூரத் தள்ளி விடவேண்டும்.

இதைச் சொல்லுவதற்குத் தான், இந்தக் கடிதம் எழுதினேன்.

உங்கள் அன்பன்,
வியாபாரி.

மிராசுதார்களுக்கு,

நம் கஷ்டத்தை யாரிடம் சொன்னால் தீரும் என்று தெரியவில்லை. "அவனுக்கு, என்னப்பா! மிராசுதாரன்! சுகமாக சாப்பிட்டு விட்டு, ஜோராயிருக்கிறான்" என்று சிலர் சொல்லுவதை நான் கேட்டிருக்கிறேன்.

பொதிமூட்டை சுமக்கிற வண்ணான் கழுதையைக் காட்டிலும் அதிக பளுவான வரிச்சுமையைச் சுமக்கும் மிராசுதாரரின் பேரில், இவர்களுக்குப் பொறாமை வருவதென்றால், அது எனக்கு ஆச்சரியமாகவேபட்டது. நம் நிலைமை தெரியாமல், பலர் கண்டதையெல்லாம் பேசுகிறார்கள்.

நான் புள்ளி விபரங்களைக் காண்பித்தால், அவர்கள் கண்ணைப் பொத்திக்கொள்ளுவார்கள். சொன்னால் காதைப் பொத்திக் கொள்வார்கள். செக்குமாடு கொஞ்சம் சுகம் அனுபவிக்கிறதோ, என்னவோ? அது கூடக் கிடையாது மிராசுதாரனுக்கு.

நேரே பயிர்பண்ணாத மிராசுதாரனை மேலேயிருந்து, சர்க்கார் வாயுதாவுக்காக, மென்னியைப் பிடிக்கிறார்கள். கீழேயிருந்து, பண்ணையாள், காலையும் மென்னியையும் கெட்டியாகப் பிடித்து விடுகிறான். இந்த இரண்டுபேர்களுக்கும் கொடுத்துவிட்டு, மிராசுதார் மிஞ்சுகிற வழியைக் காணோம்.

கிராமத்திலே வீடு, கறவை மாடு, காய்கறிகள், அதிகாரம் பண்ண ஆட்கள் என்று ஏதோ கோட்டை கட்டுகிறார்கள் பட்டணவாசிகள், கிராமத்து மிராசுதார்களைப்பற்றி. ஆனால் மிராசுதார்களின் உண்மையான நிலைமை அவர்களுக்குத் தெரியாது.

கடன், பந்தகம், வட்டி, வட்டிக்கு வட்டி, வியாஜ்ஜியம், அமீனா, ஏலம் என்று எல்லாம் ஆர்பாட்டமாகச் சொல்லுகிறார்களே! எல்லாம் மிராசுதார்களின் ஆபரணங்கள். நம் நிலைமையை உலகத்துக்கு நீங்கள் சரியாகத் தெரியப்படுத்தவேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்ளத் தான் இந்தக் கடிதம் எழுதினேன்.

மிராசுதாரன்.

மலைச்சிகரம்

(சஞ்சாரி)

நடப்பதிலே எனக்குப் பிரியம். காரியம் நடப்பதிலே எனக்குப் பிரியம் என்று நீங்கள் வைத்துக் கொண்டாலும் வைத்துக்கொள்ள லாம். தேங்கிக் கிடக்காமல், ஒரு பொருள் சலனத்தில் இருந்து கொண்டிருந்தால், அதனிடம் உயிர் இருக்கிறது என்று பெரிய வர்கள் சொல்லுவார்கள்.

நடந்து நடந்து கண்ட பயன் என்ன என்று ஆயாசப்பட்டுக் கொள்ளுவதிலும் பயன் இல்லை. மூச்சை இழுத்து வெளியே விட்டுக்கொண்டிருப்பதற்கு சோம்பல் படலாமா? நடந்து நடந்து அலுத்துப்போனால், நிலை யான நிலையை அடையலாம் என்று எண்ணினேன்.

“உன்காலிலே ரப்பர் வைத்துக் கட்டியிருக்கிறதா” என்று பலர் கேட்கும்படியாக, அவ்வளவு விசை யாக நடப்பேன். நடையிலே, இவ்வளவு ஆர்வம் எனக்கு இருந் தாலும், உண்மையான ஆவல் நிலையிலேதான். அந்த நிலையான நிலைக்கு இலட்சணமாக விளங்கு வது மலையின் சிகரம் தான்.

மலையின் சிகரம் தன்னந் தனியே, ஆகாயத்தில் தலையை நீட்டிக்கொண்டு நிற்கிறது. அது எத்தனை ஆயிர வருஷமாக அப் படியே இருக்கிறதோ, யார் கண் டார்? ஜன சமூகத்திலே, இன் றைக்கு, தலையை உயர நிமிர்த்தி, கீர்த்திப் பிரதாபத்துடன் விளங் கிய தலைவரை நாளைக்குப் பார்த் தால், அவருடைய தலை தெரிய வில்லை. அந்தத் தலை எங்கேயோ போய் விடுகிறது.

கோடீசுரன் என்று பெயர் படைத்து, கம்பீரமாகத் தன் தலையை, ஆகாயம் முட்டும்படி யாக, காண்பித்துக்கொண்டிருந்த ஒரு பேர் வழி, இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகிறார். ஏன், அவர் சிறிது காலம், தலை யை தூக்கிக் கொண்டிருந்தார்? ஏன், மறைந்துபோய் விட்டார்? இவைகள் அற்ப வாழ்வுக்கு அறிகுறிகளா?

ஆனால் மலையைப் பார்த்தாலோ பயங்கரமாயிருக்கிறது. அசை யாமல், இருந்த இடத்திலிருந்தே, தவம் செய்யும் பாக்கியம் பெற்றி ருக்கிறதா? மலை நின்றுகொண் டிருக்கிறதா? படுத்துக்கொண் டிருக்கிறதா? உறங்கிக்கொண் டிருக்கிறதா? உற்சாகத்துடன் இருக்கிறதா? கர்வத்துடன் இருக் கிறதா? மன வேதனையுடன் இருக்கிறதா? அதனிடம் அடக் கம் இருக்கிறதா?

பிரம்மாண்டமான இடத்தை அடைத்துக்கொண்டிருக்கிறது

மலை. மலை தனது பெருமையை, வெளியுலகத்தார் அறியும் பொருட்டோ என்னமோ, தன் தலையை வெளியே நீட்டிக்கொண்டிருக்கிறது. மலையின் சிகரத்தைக் கேட்டால், உலக சரித்திரம் தெரிந்துவிடுமா? குப்பை கோபுரமானதையும் கோபுரம் குப்பையானதையும் அது பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது.

மன்னர்களின் மகுடங்கள் மண் மேல் விழ்வதையும் மண்மேல் விழ்ந்த மகுடங்கள் மன்னர்களின் தலையிலே மீண்டும் ஏறிக் கொள்ளுவதையும், மலைச் சிகரம், பலநூறு ஆண்டுகளாகப் பார்த்து அனுபவித்துவரும் காட்சிகள் தானே?

சிகரத்துக்கு, பனி என்றால் என்ன? குளிர் என்றால் என்ன? மழை என்றால் என்ன? கோடை என்றால் என்ன? "கருமமே கண்ணாயினர்கள்" எந்த மாறுதல்களையும் கண்டு, சஞ்சலம் அடையாமல், தங்கள் இலட்சியத்திலேயே,கருத்தைச் செலுத்திக்காரியம் செய்வதைப் போல, மலைச்சிகரமும், யாதொரு சித்தச் சிதைவுமின்றி, நிம்மதியாக இருக்கும் காட்சி அற்புதக் காட்சியாகும்.

சிகரத்தை, மேதாவிக்கு ஒப்பிடலாமா? அல்லது மனிதனுடைய இலட்சியத்துக்கு ஒப்பிடலாமா? இரண்டுக்கும் ஒப்பிடலாம். மேதாவி, மனிதனைப் பிறக்கிறான். மனிதர்களோடேயே பழகுகிறான். ஆனால், மனிதர்கள் அறிந்துகொள்ளுவதற்குச்சாவகாசம் கொடுக்காமலே, மேதாவி, தன் தலையை வெளியே நீட்டி விடுகிறான். அவன் தலையை நீட்டுகிறானே, அது அசம்பாவதத்தாலா? இல்லை. அவஸ்தையினால். அவன், தன் தலையை வெளியே நீட்டாமல், உள்ளே அமுங்கிக் கிடக்க முடியவில்லை.

சிகரமும் அப்படியே. மலையின் வேதனையால்தான், சிகரம் வெளி வந்திருக்கிறது. படர்ந்து படுக்கையில் கிடக்கும் மலையின் மன வேதனைதான் சிகரமாகும்.

மனிதர்களுடைய இலட்சியமும் அவர்களை அறியாமலே வெளி வருகிறது. மனிதன் அநியாயத்தைக் கண்டு, மனம் புழுங்குகிறான். குழந்தையின் மழலைச் சொல்லைக் கேட்டு, ஆனந்தப்படுகிறான். வயிற்றுப் பசியைக் கண்டு, ஆத்திரப்படுகிறான். கவிதையைக் கேட்டு, உடல் பூரிப்படைகின்றான். சங்கீதத்தினால் பரவசப்படுகின்றான். நோய்களையும் துன்பங்களையும் கண்டு துக்கப்படுகின்றான். இவைகள் எல்லாம் சேர்ந்து, மனிதனுடைய இலட்சியத்தை ஒருவாறு உருவாக்கி விடுகின்றன.

பனியும் குளிரும் காற்றும் மழையும் வெப்பமும் சேர்ந்து மலையின்பேரில் தாக்குகின்றன. இவைகளை தாங்கியோ அல்லது தாங்க முடியாமலோ அல்லது இவைகளுக்கு எதிர்ப்பு காண்பிப்பதற்காகவோ, மலை, தனது சிகரத்தை, ஆகாயத்தில் முட்டும்படி எழுப்புகின்றது. எதையும் எதிர்த்து, வெற்றிகொள்ளும் வல்லமைக்கு அடையாளமாக இருப்பது போல, மலைச் சிகரம் கண்ணில் படுகிறது. சஞ்சலப்படாத மலைச் சிகரத்தைப் போல, நாம் இருக்கக் கூடாதா?

18690

"குமார குலோத்துங்கனி"ல் நடிக்கும் நந்தாராம் பயில்வான்

"கண்ணன் குழலோசை"
சியாமசுந்தரில்

"திருநீலகண்ட"ரில் பாகவதர்



"ராதாகிருஷ்ண"வில் நந்தன்

அலைக்குள் அலை; எழுச்சி அலை!

ரகுநாதன் அப்போது இண்டர்மீடியேட் படித்துக்கொண்டிருந்தான். அவன் கலாசாலைக்குள் நுழைந்து இரண்டாவது வருஷம் நடப்பு. ஒரு சின்ன சந்தேகம். ரகு கலா சாலைக்குள் நுழையும் போது லக்ஷியம் கூடவே ஒட்டிக்கொண்டதா, அல்லது அதை அவன் அங்கே சம்பாதித்துக் கொண்டதா? எப்படியோ, இப்போது லக்ஷியமே ரகு; ரகுவே லக்ஷியம்.

சமூகம், ராஜீயம் எல்லா பிரச்னைகளிலும் ரகுவுக்கு இருந்து வந்த முன்னேற்ற நோக்கங்களைக் கேட்டால் நீங்கள் பிரமித்துப் போவீர்கள். ஏன், ரகு மட்டும் என்ன? கலாசாலை மாணவர்கள் யாரும் அப்படித்தானே!

தான் ஒருவனாகவே சமூகத்தில் உள்ள குறைபாடுகளையெல்லாம் நொறுக்கி எறிந்துவிடவேண்டும் என்ற அவன் ஆத்திரத்துக்கு, அவன் கிட்ட பேசுவதற்கே உங்களுக்கு பயமாக இருக்கும். அவ்வளவு லக்ஷிய உணர்ச்சிக்கு வசமான உள்ளம் அவனுடையது. எல்லா நினைப்புகளும் ஒரு உச்ச நிலையை எட்டிப் பார்த்து, லட்சியத்தை நிறைவேற்றிவிட வேண்டும் என்ற உறுதியுடன்தான் திரும்பும்.

'உலகத்தில் மற்றவர்கள் எல்லாம் கோழைகள்! முதுகெலும் பற்ற ஒரு சமூக கோஷ்டியில் நான் கலந்துகொண்டு இருப்பதே பெரிய அவமானம்' இப்படி எல்லாம் நினைப்பதுண்டு அவன் சமூகத்தைப்பற்றி.

இவ்வளவு லக்ஷியம் ஊறிப்போயிருந்தும் ரகு மனதில் ஏற்பட்ட மாறுதல்கள் உங்களைத் திகைக்க வைக்கும்.

பிரஸ்தாப நாளன்று அவன் கலாசாலையில் ஒரு கூட்டம். அதிலே வரதக்ஷிணையின் கொடுமை என்பதைப்பற்றிப் பேச்சு. நமது ரகுதான் அந்த விஷயத்தை அலசி வெளுத்துக் கட்டினவன்.

அதிலும் அவனுடைய அந்தக் [illegible] அதை அப்படியே பொன் தகட்டில் எழுதி வைக்கவேண்டும். என்ன தெரியுமா அவை?

‘எந்த இடைஞ்சலையும் பொருட்படுத்தாமல் நானே இதை நிறைவேற்றி வைப்பேன்’ என்று அவன் முடித்தபோது சபையிலே என்ன பலத்த கரகோஷம் தெரியுமா?

ரகுவுக்கு இன்னும் கலியாணம் ஆகவில்லை என்பதை முன்னமே சொல்லி இருக்கவேண்டும். பரவாயில்லை. இப்போது சொல்வதும் சரியான சந்தர்ப்பம்தான்.

கூட்டத்தில் பேசிவிட்டு அன்று ரகு வீடு திரும்பினபோது, அவனுக்கு ஒரு பெண் காத்துக்கொண்டிருந்தது. அதாவது ஜாதகப் பொருத்தம் சரியாகி, மேற்கொண்டு ‘லௌகிகம்’ பேச மறுநாள் புறப்பட்டு வருவதாகத் தந்தி அடித்திருந்தார் ஒரு பெண்ணைப் பெற்றவர். வீட்டிலே கூடிக் கூடி இதைப்பற்றியே பேச்சு.

ரகு சமாசாரத்தையும் கேட்டான். தந்தியையும் பார்த்தான். என்ன பெரிய வேடிக்கை போங்கள்! வேலை கிடைத்த பிறகுதான் கல்யாணம் என்று ஓரோர் சமயம் ரகு மனதில் தீர்மானித்து இருந்ததெல்லாம் எங்கேயோ பறந்து போய்விட்டது. பெரிய பெரிய ஞானிகள் எல்லாம் பட்ட பாட்டுக்கு நமது ரகு எம்மாத்திரம்?

போகட்டும், இந்த இயற்கைப் போக்கைப்பற்றி நாம் ஒன்றும் அவனைக் குறைகூறவேண்டாம். பின்னாலேதான் ஒரு வண்டி குறையை அவன்மீது சுமத்தப்போகிறோமே!

ரகு வரவும் இன்னொரு மூச்சு பலமாக பேச்சு ஆரம்பமாயிற்று. கல்யாண மாப்பிள்ளை இல்லையா ரகு? மௌனமாக அதைக்கேட்டான். அவன் மனதில் அந்த ‘லக்ஷியம்’ அப்போது இல்லாமல் இல்லை. ஆனால் அதற்குமேலே சட்டென்று விழுந்த அடிகளைப் பாருங்கள்.

‘நமது அந்தஸ்துக்கு மூவாயிரம் ரூபாய்க்குக் குறைந்து வாங்கினால் ஊர் சிரிக்காதா?’ என்று பாட்டி ஒரே போடாகப் போட்டாள்.

‘ஏன், நாம் நம் வீட்டிலே இரண்டு மூன்று பெண்களுக்கு வாரி வாரிக் கொடுக்கவில்லையா? யார் நமக்கு இரக்கப்பட்டார்கள்? கறந்து வாங்கினார்களே’ என்று அம்மாவின் போடு.

அப்பா சொன்னார்: ‘சீர்வகையறா நன்றாக செய்வதுபோக நமது ரகு, பி. ஏ. படிப்பதற்கு ஆகிய செலவை ஒப்புக்கொள்ளட்டும் அவர்கள். அதுதான் சரியானது.’

இதையெல்லாம் கேட்ட ரகு தனக்குள்ளே சிந்தனை செய்யத் தொடங்கினான்.

ஆமாம். அம்மா சொல்வது சரிதான். நான் என்னவோ பிரமாதமாக சீர்திருத்திவிடவேண்டும் என்று நினைக்கிறேன். இப்போது ஏழாயிரம் ரூபாய் குடும்பத்தின் கையைவிட்டுச் செலவழிந்ததே. இதற்கு யார் பொறுப்பு? சமூகம்தானே! இந்த சமூகத்திலே நான்மட்டும் இப்படிச்செய்தால் பைத்தியக்காரன் ஆகமாட்டேனோ? அவனவன் தன்தன் காரியத்தைப் பார்க்கிறானே தவிர பிறத்தியாருக்காகப் பார்க்கிற பேர்கள் ரொம்ப பேர்கள் அல்லவா இருப்பார்கள்? என்ன லக்ஷியம் வேண்டியிருக்கு எனக்குமட்டும், ஒருத்தனுக்கும் இல்லாதபோது......'

இன்னும் பாருங்கள்!

'அப்பா சொல்வதும் சரிதானே! பி. ஏ. படிப்பதற்குத்தான் பணம் கொடுக்கட்டுமே அவர்! மாமனாராக வரப்போகிறவர்! பணம் நிறைய இருந்தால் கட்டிவைத்துக்கொண்டு என்ன பண்ணப்போகிறார்? துருப்பிடிக்கவா? ஒரே பெண்தானே அவருக்கு. செய்யட்டுமே. யாருக்குச் செய்கிறார்? அவர் பெண்ணின் நன்மைக்குத்தானே. இதைக் கேட்பதிலே என்ன தப்பு? பேசுவதற்கென்ன? வாய் கிழியப் பேசலாம். நாம் என்ன தேவர்களா, பாழாப்போகிறது! மனுஷன்தானே....'

எப்படி, பார்த்தீர்களா? நம் லக்ஷிய புருஷனின் மனப்போக்கு? மேலே கதையைக் கேளுங்கள்.

அந்த ஆனி மாதத்திலேயே ரகுவுக்குக் கல்யாணம் நடந்தது. அவர்களுடைய நிபந்தனையை அப்படியே ஒப்புக்கொண்டார் மாமனாராக வந்தவர். ரகு அதிர்ஷ்டம், இல்லை மாமனார் துரதிர்ஷ்டம், எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள், ரகுவுக்குப் பரீக்ஷையும் தேறிவிட்டது. மாமனார் தன் கடமையை நிறைவேற்றுவதற்கு ரகு எவ்வளவு சிரத்தை காட்டினான்!

வரதக்ஷிணையாவது மண்ணாங்கட்டியாவது, கேவலம், என்றெல்லாம் ஜம்பம் பேசின ரகு, இப்போது, எப்படி? மாமனார் பணத்திலிருந்து படிப்புக்கு வழி ஏற்படுத்திக் கொண்டு, அந்த ரோச உணர்ச்சியே இல்லாமல் போனதுமட்டும் இல்லை, மாதாமாதம் முதல் நான்கு தேதிக்குள் அவர் ஏதாவது ஒரு சின்ன அசந்தர்ப்பத்தினால் பணம் அனுப்பத் தவறிவிட்டாலும், அவருக்கு என்ன டோஸ் கொடுத்துக் கடிதம் எழுதிக்கொண்டிருந்தான்! தீபாவளி, ஆடி, இந்த விசேஷங்களுக்கெல்லாம் என்ன கெடுபிடி? இது போதாது, அது நன்றாக இல்லை என்றெல்லாம் ஆரம்பித்துவிட்டான்.

அம்மா, பாட்டி, அக்கா இவர்கள் எடுத்துக் காட்டும் குறைகள் எல்லாம் உடனே மாமனாருக்கு எச்சரிக்கையாக விடப்படும். இவன்தான் 'எந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தமாட்டேன்' என்று சொல்லிக் கரகோஷம் வாங்கினது, அன்றொருநாள் கூட்டத்தில்!

இதற்குப்பின் இந்த நாலு வருஷத்திற்குள் நடந்துபோனது இதுதான்.

ரகு இன்னும் பீ.ஏ. பூரணமாகத் தேறினபாடில்லை. நாலைந்து தரம் போய் ஆகிவிட்டது. சிரத்தை இல்லாமல் கட்டாயத்துக்குப் படித்தால் பிரயோசனம்? இந்த லக்ஷணத்தில் அவன் மனைவியும் வீட்டுக்கு வந்துவிட்டாள். ஒரு குழந்தையும் பிறந்து விட்டது. இனி மேல் பரிக்ஷைக்குப் போவதில்லை என்று சொல்லிவிட்டான் ஒரு நாள் அப்பாவிடம்.

'இனிமேல் என்னப் பண்ணப்போகிறாய்?'

'ஏதாவது வேலை பார்க்கப் போகிறேன்.'

'அப்படி வேலைக்குப் பார்க்கவாவது உனக்கு சிரத்தை இருப்பதாகக்கூட நீ காட்டிக்கொள்ளவில்லையே' என்றார் அப்பா மேலும்.

'இல்லை, தேடிக்கொண்டுதான் இருக்கிறேன்' என்றான் ரகு.

'எங்கேயாவது சட்டென்று உட்கார்ந்து கொள்ளேன். இத்தனை ரூபாய் செலவழித்து படித்த படிப்புக்கு இப்படி பிரயோசனம் இல்லாமல் போச்சு' என்றாள் தாய்.

ரகுவுக்கு மூக்குக்கு மேலே கோபம் வந்தது. 'படித்த படிப்பு ஒரு நாளும் வீணாகப் போகாது. வேலை கிடைக்கத்தான் படிப்பு என்று நினைத்துப் படிப்பது வெறும் அசட்டுத்தனம்' என்றுத் தத்துவம் பேசினான் ரகு அம்மாவிடம்.

அம்மாவுக்கு, தத்துவம் ரூபாய், அணா, பைசாவில்தான் புரியும். இந்த சொத்தை வார்த்தைகள் எப்படிப் புரியும்? 'என்னவோ அப்பா! நான் படிக்கவில்லை. இந்த மாதிரிப் பேச' என்று வார்த்தையை நிறுத்திக்கொண்டாள். வளர்த்த பிள்ளை அல்லவா? மேலே பேச கொஞ்சம் தயக்கம்.

இருந்தாலும் அம்மா வார்த்தை ரகுவைக் குத்தியது. 'என்ன பேச்சு? யாரோ வேலை கொடுத்து, வேண்டாம் என்று உதறிவிட்டு வந்து வீட்டில் சுகமாக உட்கார்ந்து சாப்பிட ஆசைப்பட்டதுபோலே வார்த்தை! என்ன பிரமாதச் செலவு? இப்படிப் பணம் செலவழித்து வீணா படிப்பு என்று என்னை பிடுங்குவதற்கு? மாமனார் கொடுத்தார் பணம். இவர்கள் கையிலிருந்து போனதுமாதிரி பேசுகிறார்களே.'

'இரண்டு பெண்களுக்குப் பத்தாயிரம் ரூபாய் செலவழிந்ததே. அது பெரிசாக தோன்றவில்லை. நான் ஏதோ வீட்டிலே வேலை கிடைக்காமல் இரண்டு வருஷம் (என்ன போய்! நாலைந்து வருஷங்கள்!) உட்கார்ந்து கொண்டிருந்தது கண்ணை உறுத்துகிறது.'

இப்படி நினைக்க ஆரம்பித்துவிட்டான் ரகு. மூன்று வருஷங்களாக வீட்டைவிட்டு நகராமல்—அவன் மாதிரி இன்னும் சிலது சேராதா கிராமத்தில்?—அதோடு சேர்ந்து காலை அரட்டை, மத்தியானம் சீட்டு, மாலை வெளியே கோஷ்டியோடு போய்விட்டு எட்டு மணிக்குமேல் எல்லோரும் சாப்பிட்ட பிறகு வீடுதிரும்புவது, பழையபடி பதினொரு மணிவரையில் அரட்டை, இப்படிப் பொழுது போக்கி, படிப்பு, அதன் நோக்கமான வேலை நினைவே இல்லாமல் கழித்து வந்தவனுக்கு, அப்பா, அம்மா உள்ளதை ஜாடையாகச் சொன்னதில் என்ன கோபம் பாருங்களேன்.

ஒரு தர்க்க நீதிகூட அவனுக்குப் பிடிபடவில்லை. அவர்கள்மீது ஒரு கசப்பே பிறக்க ஆரம்பித்துவிட்டது. இந்தக் கசப்பு வித்து, பண்பட்ட நிலத்தில் விழுந்துவிட்ட பிறகு அது முளைவிட்டு துளிர்க்கா... என்ன பண்ணும்? எல்லாம் உரம் ஏறி பலம் கொடுக்க ...துதானே?

...போதுதான் ரகுவுக்கு அந்த ஞானோபதேசம் உண்டா... 'இவர்களுக்கு அந்த மாமனார் எவ்வளவோ தேவலை. இது ...ல் அவர்தான் இந்த ரீதியில் ஏதாவது ஒரு வார்த்தை கேட்...ரா வாய்திறந்து? இவ்வளவு பணம் கொடுத்த மனுஷர்' என்று ...தான்.

இப்படி இரண்டையும் ஒப்பிட்டு, அதை தன் தராசில் வைத்து ...க்க ஆரம்பித்துவிட்டான். தன் கடமை நினைவே இல்லாமல். ...வன்தான் முன்பே தீர்மானித்துவிட்டானே, அவனவன் தன் காரி...த்தைப் பார்த்துக்கொண்டு போவதுதான் சரியென்று:

கடைசியில் அவன் என்ன தீர்மானத்துக்கு வந்தான் தெரியுமா? அதை அவன் செய்கையிலிருந்தே ருசிப்பித்து விடுகிறேன்.

மாமனார் வீட்டிலிருந்து கடிதம் வந்தது அவன் மைத்துனிக்குக் கல்யாணம் என்று. போகவேண்டாமா? நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது என்று மனதுக்குள் சந்தோஷப்பட்டுக்கொண்டான். மனைவி குழந்தையை கூட்டிக்கொண்டு இரண்டு வாரங்களுக்கு முன்னாடியே புறப்பட்டுவிட்டான், கலியாணமாகி ஒருவாரத்திற்குள் வந்துவிடுகிறேன் என்று.

கல்யாணமாகி எத்தனை வாரங்கள் ஆகிவிட்டன தெரியுமா? நாலைந்து மாதங்கள் ஆகிவிட்டன. இன்னும் அவன் ஊருக்குத் திரும்பவில்லை. 'ஆமாம், அங்கேபோய் என்ன சாதிக்கப்போகிறேன்? வார்த்தை கேட்பதுதான் மிச்சம். பேசாமல் இங்கே இருந்துவிட்டால் போகிறது. சுகமாகப் பொழுது போகும்.'

இந்த நினைப்பு வந்துவிட்டபிறகு அவனை, என்ன செய்ய முடியும்? தன் கலாசாலைக் கால லக்ஷியங்களிலிருந்து அவன் எந்த

தூரத்துக்கு வந்துவிட்டான் பாருங்கள்! மாமனுர் வீடே கதியென்று வந்துவிட்டான். என்ன மனேதத்வ வீழ்ச்சி! வாழ்க்கையில், தான் செய்யவேண்டிய கடமை ஒன்று உண்டு என்பதே அவனுக்கு இப்படி ஞாபகம் இல்லாமல் போய்விட்டதே!

இப்போது போதாக்குறைக்குப் புகையிலே போடக் கற்றுக் கொண்டுவிட்டான். அதைப்போட்டு 'புளிச் புளிச்'சென்று அவன் மாமியார் சொல்லுவதுபோல், துப்பிக்கொண்டு, சீட்டு ஆட ஒரு கோஷ்டி அங்கேயும் சேர்த்துக்கொண்டு தன் லக்ஷியம், கடமை, மானம், கௌரவம், இந்த சிந்தனைகளே இல்லாமல் இருக்கின்றுன். இப்படி எத்தனை நாள்? இன்னும் புத்தி எந்தமாதிரி மாறிக் கொண்டே போகப்போகிறதோ?

அகத்தியன்

(1) அஸ்வனி-மகம்-மூலம்.

3-30 முதல்
3-18 வரை.

தொழிலிலும் ஜெயம், ஆரோக்கியம், நல்லோர்
[illegible], நற்காரியம் செய்யின் நலம்.

[illegible]லெ 6-18 முதல்
[illegible]லெ 9-15 வரை.

[illegible]ச்சல், குடும்பசஞ்சலம், பீதி, தனமுடக்கம், மதிமயக்கம்,

[illegible] காலெ 9-15 முதல்
[illegible] மத்தியானம் 12-15 வரை.

அனுகூலம், நற்காரியம், நூதன தொழில் தொடங்குவதற்[illegible]ாள், ஜயந்தரும், எதிர்பாராத மனோமகிழ்ச்சியும் உண்டாகும். உ[illegible]ா.

3-8-39 மத்தியானம் 12-15 முதல்
4-8-39 மாலெ 3-12 வரை.

எடுத்த காரியங்களில் தடை, செய்தொழிலில் பிசகு நேருதல், எதிர்பாராத சங்கடங்கள், கலகம், தயக்கம், இத் தினத்தில் எதிலும் ஜாக்கிரதையாய் இருக்கின் நலம், மத்திபம்.

4-8-39 மாலெ 3-12 முதல்
6-8-39 இரவு 8-20 வரை.

செய்காரியங்கள் ஒழுங்காய் நடக்கும், நல்லோர் பேட்டியால் மனமகிழ்ச்சி, இந்நாளில் தொடரும் காரியங்கள் ஜெயத்துடன் மேன்மையடையும், சிக்கிய தனத்தைப் பின்னும் பெறுதற்கு எத்தனிக்கின் ஜெயந்தரும்.

(2) பரணி-பூரம்-பூராடம்.

30-7-39 காலெ 3-30 முதல்
1-8-39 காலெ 6- 18 வரை.

எதிர்பாராத சங்கடங்கள், இடர்காயம், விஷபயம் அல்லது வீண்பகை, குணத்துயர், மானக் குறை, நற்காரியம் தொடரின் தீங்குறும், நூதன பெரியோரின் பேட்டிகாணின் பழுதுறும், ஆய்ந்தோய்ந்து காரியம் செய்யின் நலம், மத்திபம்.

1-8-39 காலை 6-18 முதல்
2-8-39 காலை 9-15 வரை.

சுகம், போகம், எத்தொழிலினும் ஜெயம், ஆரோக்கியம், நல்லோர் நேசம், பொருள்வரத்து, நற்காரியம் செய்யின் நலம்.

2-8-39 காலை 9-15 முதல்
3-8-39 மத்தியானம் 12-15 வரை.

ஆயாசம், அலைச்சல், குடும்ப சஞ்சலம், பீதி, தனமுடக்கம், மதி மயக்கம், மத்திபம்.

3-8-39 மத்தியானம் 12-15 முதல்
4-8-39 மாலை 3-12 வரை.

சர்வகாரிய அனுகூலம், நற்காரியம், நூதன[illegible] வதற்குத் தகுதியான நாள். ஜெயந்தரும், எதிர்பா[illegible] உண்டாகும். உத்தம நாள்.

4-8-39 மாலை 3-12 முதல்
5-8-39 மாலை 5-57 வரை.

எடுத்த காரியங்களில் தடை, செய்தொழிலில் பி[illegible] பாராத சங்கடங்கள், கலகம், தயக்கம், இத்தினத்தில் [illegible] கிரதையாய் இருக்கின் நலம்.

5-8-39 மாலை 5-17 முதல்
6-8-39 இரவு 8-20 வரை.

செய்காரியங்கள் ஒழுங்காய் நடக்கும், நல்லோர் பேட்டியால் மனமகிழ்ச்சி, இந்நாளில் தொடரும் காரியங்கள் ஜெயத்துடன் மேன்மையடையும், சிக்கிய தனத்தைப் பின்னும் பெறுதற்கு எத்தனிக்கின் ஜெயந்தரும்.

(3) கார்த்திகை-உத்திரம்-உத்திராடம்.

30-7-39 காலை 3-30 முதல்
1-8-39 காலை 6-18 வரை.

குடும்பசுகம், மனோஉல்லாசம், நற்சேதியறிதல், மகிழ்ச்சி தாத்தக்க இன்னிசைப் பெறுதல், எத்தனிக்கின் தன லாபம், உத்தமம்.

1-8-39 காலை 6-18 முதல்
2-8-39 காலை 9-15 வரை.

எதிர்பாராத சங்கடங்கள், இடர்காயம், விஷபயம், அல்லது வீண்பகை, குணத்துயர், மானக்குறை, நற்காரியம் தொடரின் தீங்குறும். நூதன பெரியோரின் பேட்டி காணின் பழுதுறும். ஆய்ந்தோய்ந்து காரியம் செய்யில் நலம்.

2-8-39 காலை 9-15 முதல்
3-8-39 மத்தியானம் 12-15 வரை.

சுகம், போகம், எத்தொழுலினும் ஜெயம், ஆரோக்கியம், நல்லோர் நேசம், பொருள் வரத்து, நற்காரியம் செய்யின் நலம்.

3-8-39 மத்தியானம் 12-15 முதல்
4-8-39 மாலை 3-12 வரை.

ஆயாசம், அலைச்சல், குடும்பசஞ்சலம், பீதி, தன முடக்கம், மதிமயக்கம் மத்திபம்.

4-8-39 மாலை 3-12 முதல்
5-8-39 மாலை 5-57 வரை.

சர்வகாரிய அனுகூலம், நற்காரியம், நூதன தொழில் தொடக்குவ தற்குத் தகுதியான நாள், ஜெயந்தரும், எதிர்பாராத மனோமகிழ்ச்சியும் உண்டாகும். உத்தம நாள்.

5-8-39 மாலை 5-57 முதல்
6-8-39 இரவு 8-20 வரை.

எடுத்த காரியங்களில் தடை, செய்தொழிலில் பிசகு நேரும், எதிர் பாராத சங்கடங்கள், கலகம், தயக்கம், இத்தினத்தில் எதினும் முன் ஜாக்கிரதையாய் இருக்கின் நலம்.

(4) ரோகிணி-அஸ்தம்-திருவோணம்.

30-7-39 இரவு 3-30 முதல்
1-8-39 காலை 6-18 வரை.

மனமயக்கம், ஸ்திரீகளால் கலக்கம், வீண் விரயம், சயன சுகங் குறைதல், நல்ல நேசர்களால் மனவருத்தம், காரியவிக்கினம், எதினும் யோசித்து நடத்தல் நலம்.

1-8-39 காலை 6-18 முதல்
2-8-39 காலை 9-15 வரை.

குடும்ப சுகம், மனோ உல்லாசம், நற்சேதியறிதல், மகிழ்ச்சி தாத்தக்க இன்னிசைப் பெறுதல். எத்தனிக்கின் தனலாபம், உத்தமம்.

2-8-39 காலை 9-15 முதல்
3-8-39 மத்தியானம் 12-15 வரை.

எதிர்பாராத சங்கடம், இடர்காயம், விஷபயம், அல்லது, வீண்பகை, ருணத்துயர், மானக்குறை, நற்காரியம் தொடரின் தீங்குறும், நூதன பெரியோரின் பேட்டிகாணில் பழுதுரும். ஆய்ந்தோய்ந்து காரியம் செய்யின் நலம், மத்திபம்.

3-8-39 மத்தியானம் 12-15 முதல்
4-8-39 மாலை 3-12 வரை.

சுகம், போகம், எத்தொழிலிலும் ஜெயம், ஆரோக்கியம், நல்லோர் நேசம், பொருள் வரத்து, நற்காரியம் செய்யின் நலம்.

4-8-39 மாலை 3-12 முதல்
5-8-39 மாலை 5-57 வரை.

ஆயாசம், அலைச்சல், குடும்ப சஞ்சலம், பீதி, தனமுடக்கம், மதிமயக்கம், மத்திபம்.

5-8-39 மாலை 5-57 முதல்
6-8-39 இரவு 8-20 வரை.

சர்வகாரிய அனுகூலம், நற்காரியம் நூதன தொழில், தொடங்குவதற்குத் தகுதியான நாள், ஜெயந்தரும், எதிர்பாராத மனோமகிழ்ச்சியும் உண்டாகும்.

(5) மிருகசிரம்-சித்திரை-அவிட்டம்.

30-7-39 இரவு 3-30 முதல்
1-8-39 காலை 6-18 வரை.

செய்காரியங்கள் ஒழுங்காய் நடக்கும், நல்லோர் பேட்டியால் மனமகிழ்ச்சி, இந்நாளில் தொடரும் காரியங்கள் ஜெயத்துடன் மேன்மையடையும், சிக்கிய தனத்தைப் பின்னும் பெறுதற்கு எத்தனிக்கில் ஜெயந்தரும்.

1-8-39 காலை 6-18 முதல்
2-8-39 காலை 9-15 வரை.

மனமயக்கம், ஸ்திரீகளால் கலக்கம், வீண்விரயம், சயன சுகங் குறைதல், நல்ல நேசர்களால் மனவருத்தம், காரிய விக்கினம், எதிலும் யோசித்து நடத்தல் நலம்.

2-8-39 காலை 9-15 முதல்
3-8-39 மத்தியானம் 12-15 வரை.

குடும்ப சுகம், மனோ உல்லாசம், நற்சேதியறிதல், மகிழ்ச்சி தரத்தக்க இன்னிசை பெறுதல், எத்தனிக்கின் தனலாபம், உத்தமம்.

3-8-39 மத்தியானம் 12-15 முதல்
4-8-39 மாலை 3-12 வரை.

எதிர்பாராத சங்கடம், இடர்காயம், விஷபயம், அல்லது வீண் பகை, குணத்துயர், மானக்குறை, நற்காரியம் தொடரின் தீங்குறும், நூதன பெரியோரின் பேட்டி காணின் பழுதுறும், ஆய்ந்தோய்ந்து காரியம் செய்யின் நலம், மத்திபம்.

4-8-39 மாலை 3-12 முதல்
5-8-39 மாலை 5-57 வரை.

சுகம், போகம், எத்தொழிலிலும் ஜெயம், ஆரோக்கியம், நல்லோர் நேசம், பொருள் வரத்து, நற்காரியம் செய்யின் நலமாம்.

5-8-39 மாலை 5-57 முதல்
6-8-39 இரவு 8-20 வரை.

ஆயாசம், அலைச்சல், குடும்பசஞ்சலம், பீதி, தனமுடக்கம், மதிமயக்கம், மத்திபம்.

(6) திருவாதிரை-சுவாதி-சதயம்.

30-7-39 இரவு 3-30 முதல்
2-8-39 காலை 9-15 வரை.

செய்காரியங்கள் ஒழுங்காய் நடக்கும், நல்லோர் பேட்டியால் மனமகிழ்ச்சி, இந்நாளில் தொடரும் காரியங்கள் ஜெயத்துடன் மேன்மையடையும், சிக்கிய தனத்தைப் பின்னும் பெறுதற்கு எத்தனிக்கின் ஜெயந்தரும்.

2-8-39 காலை 9-15 முதல்
3-8-39 மத்தியானம் 12-15 வரை.

மனமயக்கம், ஸ்திரீகளால் கலக்கம், வீண் விரயம், சயன சுகங்குறைதல், நல்ல நேசர்களால் மனவருத்தம், காரிய விக்கினம், எதினும் யோசித்து நடத்தல் நலம்.

3-8-39 மத்தியானம் 12-15 முதல்
4-8-39 மாலை 3-12 வரை.

குடும்ப சுகம், மனோ உல்லாசம், நற்சேதியறிதல், மகிழ்ச்சி தரத்தக்க இன்னிசை பெருதல், எத்தனிக்கின் தனலாபம், உத்தமம்.

4-8-39 மாலை 3-12 முதல்
5-8-39 மாலை 5-57 வரை.

எதிர்பாராத சங்கடங்கள், இடர்காயம், விஷபயம், அல்லது வீண்பகை, குணத்துயர், மானக்குறை, நற்காரியம் தொடரின் தீங்குறும், நூதன பெரியோரின் பேட்டி காணின் பழுதுறும், ஆய்ந்தோய்ந்து காரியம் செய்யில் நலம்.

5-8-39 மாலை 5-57 முதல்
6-8-39 இரவு 8-20 வரை.

சுகம், போகம், எத்தொழிலினும் ஜெயம், ஆரோக்கியம், நல்லோர் நேசம், பொருள் வரத்து, நற்காரியம் செய்யின் நலம்.

(7) புனர்ப்பூசம்-விசாகம்-பூரட்டாதி.

30-7-39 இரவு 3-30 முதல்
1-8-39 காலை 6-18 வரை.

எடுத்த காரியங்களில் தடை, செய்தொழிலில் பிசகுநேருதல், எதிர்பாராத சங்கடங்கள், கலகம், தயக்கம், இத்தினத்தில் எதிலும் முன் ஜாக்ரதையாய் இருக்கின் நலம், மத்திபம்.

1-8-39 காலை 6-18 முதல்
3-8-39 மத்தியானம் 12-15 வரை.

செய்காரியங்கள் ஒழுங்காய் நடக்கும், நல்லோர் பேட்டியால் மனமகிழ்ச்சி, இந்நாளில் தொடங்கும் காரியங்கள் ஜெயத்துடன் மேன்மை

யடையும். சிக்கிய தனத்தைப் பின்னும் பெறுதற்கு எத்தனிக்கின் ஜெயந்தரும்.

3-8-39 மத்தியானம் 12-15 முதல்
4-8-39 மாலே 3-12 வரை.

மனமயக்கம், ஸ்திரீகளால் கலக்கம், வீண்விரயம், சயன சுகங்குறைதல், நல்ல நேசர்களால் மனவருத்தம். காரிய விக்கினம், எதினும் யோசித்து நடத்தல் நலம்.

4-8-39 மாலே 3-12 முதல்
5-8-39 மாலே 5-57 வரை.

குடும்பசுகம், மனோல்லாசம், நற்சேதியறிதல், மகிழ்ச்சி தரத்தக்க இன்னிசைப் பெறுதல், எத்தனிக்கின் தனலாபம், உத்தமம்.

5-8-39 மாலே 5-57 முதல்
6-8-39 இரவு 8-20 வரை.

எதிர்பாராத சங்கடம், இடர்காயம், விஷபயம், அல்லது வீண்பகை, ருணத்துயர், மானக்குறை, நற்காரியம் தொடரின் தீங்குறும், நூதன பெரியோரின் பேட்டி காணின் பழுதுறும், ஆய்ந்தோய்ந்து காரியம் செய்யின் நலம்.

(8) பூசம்-அனுஷம்-உத்திரட்டாதி.

30-7-39 இரவு 3-30 முதல்
1-8-39 காலே 6-18 வரை.

சர்வகாரிய அனுகூலம், நற்காரியம், நூதன தொழில் தொடங்குவதற்குத் தகுதியான நாள், ஜெயந்தரும், எதிர்பாராத மனோமகிழ்ச்சியும் உண்டாகும், உத்தம நாள்.

1-8-39 காலே 6-18 முதல்
2-8-39 காலே 9-15 வரை.

எடுத்த காரியங்களில் தடை, செய்தொழிலில் பிசகு நேருதல், எதிர்பாராத சங்கடங்கள், கலகம், தயக்கம், இத்தினத்தில் எதிலும் முன் ஜாக்கிரதையாய் இருக்கின் நலம்.

2-8-39 காலே 9-15 முதல்
4-8-39 மாலே 3-12 வரை.

செய்காரியங்கள் ஒழுங்காய் நடக்கும், நல்லோர் பேட்டியால் மனமகிழ்ச்சி, இந்நாளில் தொடரும் காரியங்கள் ஜெயத்துடன் மேன்மையடையும், சிக்கின தனத்தைப் பின்னும் பெருதற்கு எத்தனிக்கின் ஜயந் தரும்.

4-8-39 மாலே 3-12 முதல்
5-8-39 மாலே 5-57 வரை.

மனமயக்கம், ஸ்திரீகளால் கலக்கம், வீண் விரயம், சயன சுகங் குறைதல், நல்ல நேசர்களால் மனவருத்தம், காரிய விக்கினம், எதினும் யோசித்து நடத்தல் நலம்.

6-8-39 இரவு 8-20 வரை.

குடும்ப சுகம், மனோல்லாசம், நற்சேதியறிதல், மகிழ்ச்சி தாத்தக்க இன்னிசை பெருதல், எத்தனிக்கின் தன லாபம், உத்தமம்.

(9) ஆயில்யம்-கேட்டை-ரேவதி.

30-7-39 இரவு 3-30 முதல்
1-8-39 காலை 6-18 வரை.

ஆயாசம், அலைச்சல், குடும்ப சஞ்சலம், தனமுடக்கம், மதிமயக்கம், மத்திபம்.

1-8-39 காலை 6-18 முதல்
2-8-39 காலை 9-15 வரை.

சர்வகாரிய அனுகூலம், நற்காரியம், நூதனதொழில் தொடங்கு வதற்குத் தகுதியான நாள், ஜெயந்தரும், எதிர்பாராத மனோமகிழ்ச்சியும் உண்டாகும், உத்தம நாள்.

2-8-39 காலை 9-15 முதல்
3-8-39 மத்தியானம் 12-15 வரை.

எடுத்தகாரியங்களில் தடை, செய்தொழிலில் பிசகு நேருதல், எதிர் பாராத சங்கடங்கள், கலகம், தயக்கம், இத்தினத்தில் எதினும் முன் ஜாக்கிரதையாய் இருக்கின் நலம், மத்திபம்.

3-8-39 மத்தியானம் 12-15 முதல்
5-8-39 மாலை 5-57 வரை.

செய்காரியங்கள் ஒழுங்காய் நடக்கும், நல்லோர் பேட்டியால் மன மகிழ்ச்சி, இந்நாளில் தொடரும் காரியங்கள் ஜெயத்துடன் மேன்மை யடையும், சிக்கின தனத்தைப் பின்னும் பெறுதற்கு எத்தனிக்கின் ஜெயந் தரும்.

5-8-39 மாலை 5-57 முதல்
6-8-39 இரவு 8-20 வரை.

மனமயக்கம், ஸ்திரீகளால் கலக்கம், வீண்விரயம், சயன சுகங் குறைதல், நல்ல நேசர்களால் மனவருத்தம், காரியவிக்கினம், எதினும் யோசித்து நடத்தல் நலம்.

பைத்தியக்காரன்

(பு. வே. சுப்ரமண்யம்)

"பித்தனுயிருக்க அருள்வாய்
பித்தரே—பித்தர் குருவே!"

என்று பாடுகிறான் பைத்தியம்! உலகம் வெட்டிவைத்த பாதைகளில் போகாததினால், அவன் பித்தன்! எங்கு பார்த்தாலும் ஒரே வெளிவேஷம்—திருட்டுத்தனம், மோசம். இந்தக் கூத்தையெல்லாம் அவன் நம்புவது மாத்திரமல்ல—அவன் ஆடவும் வேண்டும். இல்லாவிட்டால், அவன் பைத்தியக்காரன்.

சமூகத்திலிருந்து சிறியடிக்கும் அலைகளில் ஒதுக்கப்பட்ட துரும்பு அவன்! பிறகு அவன் 'அவன்' கூட இல்லை. அவன் 'அது' வாய் விடுகிறான்! இதிலேயே மனித வர்க்கத்தின் குரோதம் பிரதிபலிக்கவில்லையா? சமூகம் விரும்பும் பொய்களில், ஆட்டுமந்தையைப் போல் ஒன்றாகச் சேர்ந்துபோய் பாழில் முட்டிக்கொள்ளும் கூட்டத்தில், அவனுக்கு இடமில்லை. அவன் கனவு காண்பவன்—பகற்கனவு!

இல்லாவிட்டால், இயற்கையில் இன்பத்தைக் காணுவானா அவன்? கலையின் ஆலயத்திலேயேபோய் அதை தரிசனம் செய்துவிடத் துணிவானா? அதன் மேல்தோலை மட்டும் கண்டு—சதை இழந்த மாங்கொட்டையைப்போல்—வெறும் அசத்தோடு திருப்தியடைய மாட்டானா! அது தான் பைத்தியம்!

அருணோதயத்தின் மோகன சாந்தியும், உடலைச் சிதைத்து உழைக்கும் வயல் வரப்புகளில் தென்படும் ஆனந்தமும் கலக்கும் இடத்தில் தான் அவனுக்கு வேலை. உழுது, பரம்படித்து, விதைத்து செல்வம் முளைத்து வெளிவந்து ஒன்றுக்குப் பத்து, நூறு, ஆயிரமாகத் திருப்பிக் கொடுப்பதில் பிரகிருதியின் பலனை—நன்றியை கண்டு பூரிக்கிறது அவன் மனம். அதனால்தான் போலிருக்கிறது! அவன் ஒதுங்கி விடுகிறான்.

தனிமையில் அவனுக்குத் தனி ஆனந்தம். உலகம் அவனுக்கு வேடிக்கை காட்டுகிறது. "உலகமே பைத்தியம் பிடித்து ஓடுகிறது. ஓடட்டும்; நான் வேடிக்கை பார்க்கிறேன்: கடைசியில் அது என்னைத் திரும்பிப் பார்க்கும், பரிதாபகரமாக!" என்று எண்ணுகிறான், உண்மையாக.

யக்காரக் கூட்டத்தில் ஒன்றுபட்டிருக்காததற்காகவா அவன் பைத்தியம்?



ஆகையால் தான் அவன் அவர்களை வேண்டவில்லை. அவர்கள்

தான அவனை [illegible] எவ்வளவுபேர்—அதிலேயே தெரியவில்லையா! அதிலும் ஒரு சின்ன விஷயம், நம் கவனத்தைக் கடந்து நிற்கிறது! கவனித்துப் பார்த்தால் தெரிந்துவிடும். அவனைத் தொடர்ந்து போகும் எல்லோரும் குழந்தைகள்! புத்தியின் பிரகாசம் இன்னும் கொஞ்சம் அவர்களிடம் மங்காமல் இருக்கிறது. அதனால் அவர்கள், அவனிடம் ஒளியைக் காண்கிறார்கள். அவனைக்கண்டு சந்தோஷப்படுகிறார்கள்.

ஆனால் அவன், அவர்களைக்கண்டு ஓடுகிறான். வளரும் பேராசையையும், வீண் பெருமையையும்—ஏன்—மனிதனின் மோசமான அம்சங்களின் ஆரம்பத்தை அவன் அவர்களிடத்தில் காண்கிறான். ஆகையாலேயே அவன் பயந்துபோய் அவர்களைக்காண வெறுக்கிறான். அவன் தீர்க்கதரிசி.

அவன் தீர்க்கதரிசியாக இல்லாவிட்டால், ஆற்றின் கரைகளிலும், 'மோனத்திரைக்கடல் ஓரத்திலும்,' தென்னந் தோப்புகளின் அருகிலும் ஆனந்தத்தைக் காண முடியுமா? எப்படிப் பொருக்கி எடுக்கிறான்? இயற்கை, தன் சௌந்தரியத்தைக் கொழிக்கும் இடங்களை என்னமாக வடிக்கட்டிக் கண்டுபிடிக்கிறான்!

அவன் ஆற்றங்கரையில், உலகத்தின் அம்சத்தை காண்கிறான் கலைஞனைப்போல. வெள்ளத்தின் சுழிகளை, மனிதனுக்கு வரும் கஷ்டச் சுழல்களோடு ஒப்பிட எவ்வளவு தைரியம் வேண்டும்! அப்பா! ஆத்மீக பரிபாஷையில் பேசும் அவனுக்கு, என்ன நெஞ்சழுத்தம்!

தென்னந்தோப்பில் அவன் நிற்குமிடத்தைப் பார்த்திருக்கிறீர்களோ? பெரிய தோப்பு. குளிர்ந்த இடம். அதன் நடுவில் இளநீர், மட்டை, எதுவுமற்ற மொட்டை மரம். "அட! உனக்கும் என் கதியா?" என்று கேட்பதைப்போல் அதைப் பார்க்கிறான், அந்தப் பைத்தியம். பிடுங்கித்தின்னும் பேராசையை மனிதர்களிடத்தில் அந்த மரம் கூடக் கண்டுவிட்டது!

பிறை சூடியவனைப் பித்தன் என்றவன் பித்தனா, அல்லது ஆதி சக்திதான் பைத்தியங்கொண்டு அலைகிறாளா? உண்மையை, அப்படியே அப்பட்டமாகக் காண்கிறவன் பைத்தியம்.

பித்தனின் பித்துக்கொண்ட கூத்தில் பிறந்த கலையின் சிகரம், அதோ தெரிகிறது! நடனராஜனின் பைத்தியக்காரக்களி! அவனை வணங்குகிறேன்!

பைத்தியக்காரனிடத்து மனித இலட்சியங்களில் இரண்டு தெளிவடைந்துவிடுகின்றன. ஒன்று மனிதனின் ஏக்கம்; மற்றொன்று மனிதனின் கனவு. அவைகள் அவனிடம் கலந்துவிடுகின்றன.

அவன் வாழ்க!

மணல் வீடு

[சி. சு. செல்லப்பா]

நீல உடற்புடவையில் சிகப்புச் சாயம் எற்றி இருந்தது போன்ற தோற்றம் காட்டிக்கொண்டு இருந்தது அந்திக்கால வானம். அதன் ஆரஞ்சுநிற அடிவானத்தின் கீழ் ஊதாநிற அலைகள் மதில் மதிலாக எழும்பி, கரைநோக்கி சுழித்துச் சுருட்டி அடித்துக் கொண்டிருந்தன. யுகம் யுகமாக அலுப்பின்றி வித விதமான உருவங்கள் செய்து மண்ணில் ஓட்டிவிடும் சிருஷ்டி தேவனுக்குப் போட்டியாகத் தானும் முடிவற்ற அலைகளை கிளப்பி மணலில் மோதவிட்டு வேடிக்கை பார்த்தது இந்தக் கடல்!

விவரம் புரியாத இந்த வேடிக்கையைப் பார்த்துக்கொண்டு ஈரமணலின் எல்லைக் கோடியில் நின்றுகொண்டிருந்தாள் குழந்தை. அவியப் போகும் உயிரின் மரண வீறிடுதலைப் போல், அழிவைத் தேடிவரும் அலைகளின் கோஷம் அதன் சின்ன உள்ளத்தைக் கூதல்கொள்ளச் செய்தது. அதன் உச்சநிலையில் அம்மாவின் கைப்பிடிப்பை இன்னும் நெருக்கிக் கொடுத்தாள் குழந்தை ஜெயம்.

சூட்டிகையான குழந்தை ஜெயம். புறுபுறுப்புக் களை கும்மாளம் போட்டுக் கொண்டிருக்கும் முகம். துடிதுடிப்பு தாவி ஓடிக்கொண்டிருக்கும் உடலமைப்பு. நல்ல லக்ஷணம். பார்ப்போர் அள்ளி அணைத்திடத் தூண்டும் மோஹன உருவம்.

அவள் இருக்கும் வீட்டில் உள்ள மூன்று தனிக் குடும்பங்களுக்கு அவள் ஒரே குழந்தை. எங்கேயோ சந்து ஒன்றிலே, அதிக ஜனநடமாட்டம் இல்லாத இடத்திலே அவர்கள் வீடு. அக்கம் பக்கத்து வீடுகளில் கூட அவளுக்கு இசைந்து விளையாடக்கூடிய பருவக் குழந்தைகள் கிடையாது.

தனிமையைத்தான் ஜெயம் அநுபவித்து வந்தாள் தினமும். விளையாட்டிலே அவளுக்கு எதிர்க்கக்ஷி பேச வேறு தொனி கிடையாது. அவளோடு உரண்டையிட்டு, அடித்துக் கிள்ளி ரகளை செய்ய இடமே ஏற்பட்டதில்லை. அவள் விளையாட்டுப் போக்குக்கு ஒருவித தடையும் இல்லாமல் பொழுதுபோகும் அந்த குழந்தைக்கு. எந்த விளையாட்டிலும் தானே எல்லாமாகி விடுவாள்.

பொய்ச்சமையல் விளையாட்டிலே சமைப்பது அவள், சாப்பிடுவதும் அவள்! அப்பா அம்மா விளையாட்டிலே அவளே அப்பா, அம்மா, படுத்தும் குழந்தை! இப்படி தனிமையில் பழகிப்போன உற்சாகம் பிரத்யேமாக அமைந்திருந்தது அந்த சின்ன உள்ளத்தில். ஓடிவரும் அலைகளையே கொஞ்ச நேரம் குழந்தை பார்த்துக் கொண்டு நின்றாள்.

அலையலையாக கிளம்பி அவள் கண் எதிரிலேயே உருக்குலைந்து ஜலத்தோடு ஜலமாகிக் கொண்டிருந்தது. புது அலைகளுக்கு இடம் விட்டுக் கொடுப்பதுபோல்; புதுப் பிறப்புகளுக்கு சாவு வழி விடுவது போல.

திடீரென்று குழந்தை அம்மாவின் கைவிரல் இடுக்குகளிலிருந்து தன்

கையை சுண்டி இழுத்துக் கொண்டாள். அலையிலிருந்து திரும்பி காலடி ஈர மணலை ஒருதரம் பார்த்ததும், அவளுக்கு இயற்கையான தனிமை விளையாட்டிலே ஒரு உற்சாகம் கிளம்பினது. 'அம்மா, நான் வீடு கட்டி விளையாடப்போறேன்,' என்றாள் குழந்தை.

'அம்மாடி, ஈர மணல் உடம்புக்கு ஆகாது, காய்ச்சல் வந்துவிடும்' என்று தாய் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவள் கவனம் சுற்றுப்புறத் தோற்றத்திலே திரும்ப ஆரம்பித்தது. விதவிதமான நடையுடை பாவனைகளுடன் வரும் தன்னொத்த பெண்களை பார்வையில் மாற்றிக்கொண்டிருந்தாள். அந்த சிரத்தையில் குழந்தை வார்த்தைகளை மீறி மணலைத் தோண்ட ஆரம்பித்து விட்டதைக்கூட அவள் பொருட்படுத்தவில்லை. குழந்தை வீடு கட்டுவதிலே தன் முழுகவனத்தையும் செலுத்தி இருந்தாள்.

உலகங்களை சிருஷ்டிக்கும் பிரும்மா, வீடுகளை சிருஷ்டிக்கும் சிற்பி, இவர்களுடைய சிரத்தைக் குறிகள் அந்த குழந்தை முகத்தில் தோன்றின.

அந்த சுவாரஸ்யத்தில், சற்று தூரத்தில் வரை, நுரை தள்ளிக்கொண்டு வந்து திரும்பும் அலை ஓட்டத்தைக் கூட அவள் பொருட்படுத்தவில்லை. மணலைத் தோண்டிக் கொண்டே போனாள். அவள் சிறு கை பலம் சோதனை அளவிற்கு; விரலால் தோண்ட முடியாத கெட்டிப்பை நெருங்கும் வரையில்.

தாயின் கவனம் அப்போதுதான் குழந்தையிடம் மறுபடியும் திரும்பினது. 'அடி, சட்டை அழுக்காகப் போகிறது' என்று சொல்லும்போதே கவனம் மீண்டும் மாறிவிட்டது. அம்மா சொன்னதற்காக சட்டையை ஒரு தரம் தூக்கிக் கொடுத்துக் கொண்டாள் குழந்தை.

தோண்டி முடிந்தது. குழந்தை மணலில் உட்கார்ந்து கொண்டாள். தன் சிறுகாலை அந்தப் பள்ளத்திற்குள் நுழைத்துக்கொண்டு மேலே மேலே மண்ணைத் தள்ளி தன் பாதத்தை மூடிவிட்டாள். அந்த மேடு பலமாக, இரண்டு பட்டுக் கைகளாலும் தட்டிக் கொடுத்து அடையப்பினாள். மறைந்துபோன அவள் பாதத்துக்கு மேலாக கூடுபோன்ற வளைந்த ஒரு மணல் மேடு உண்டாயிற்று. அதன் வலுவில் நம்பிக்கை இன்னும் வராததுபோல் திரும்பத் திரும்ப அதை 'திம்ஸ்' போட்டாள். மணல் ஒட்டாத இடங்களை சீர்படுத்திக் கொடுத்தாள்.

குழந்தையின் விளையாட்டைப் பார்க்கும் ஆவல் கலந்த சங்கோசத்துடனோ என்னமோ, சின்னச் சின்ன அலைகள் அடிக்கொரு தரம் அவள் கட்டும் வீட்டுக்கு சற்றுதூரம் வரை வந்து திரும்பி பார்த்துவிட்டு ஓடின. குழந்தை கவனித்தால்தானே! தனிமையில் பண்பட்டுப்போன உள்ளம் அந்தத் தோழர்களை விரும்பவில்லை; வரவேற்கவில்லை.

அதுவரைக்கும் இல்லாத ஒரு ஜாக்ரதை அப்போது குழந்தைக்கு வந்துவிட்டது. வீடமைக்க, காலை வெளியில் எடுத்தாக வேண்டுமே! மெதுவாக தன் உடம்பை எற்றபடி அசைத்துக் கொடுத்து மணல் மேட்டுக்கு அதிர்ச்சி எற்படாமல், கண்களை கூராக்கி, அதன் பலஹீன இடங்களை மிருதுவாக தொட்டு ஸ்திரப்படுத்திக் கொண்டே காலை உஷாராக வெளியே இழுத்துக் கொண்டிருந்தாள்.

தான் கட்டின வீடு சரிந்துவிடக் கூடாதென்று அதன் மனது எவ்வளவு துடியாகத் துடித்தது! பார்க்கப் போனால் க்ஷணத்தில் அழியக் கூடிய, சில நிமிஷங்களில் அம்மாவுடன் வீடு திரும்பும்போது கலைத் தெரிந்தோ, அனுதாவாகவோ

விடப்போகிற அந்த மணல் குவியல் மீதுதான் என்ன சிரத்தை அதற்கு! குழந்தையைச் சொல்வானேன்? மனிதனே வயதான குழந்தை தானே!

காலை வெளியே எடுக்குமுன் தான் அந்த வீட்டுக்கு எத்தனை கண்டங்கள்! மண் கட்டிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக உதிரும்போது எவ்வளவு துடிசாக அவள் கை பாய்ந்து உருவை பூரணமாக்கும்?

குழந்தை காலை கிட்டத்தட்ட வெளியே இழுத்துவிட்டாள். விரல் நுனிகள்தான் பாக்கி. கூண்டின் முதுகுப் புறத்தில் மத்தியில் லேசாக ஒரு கீரல், கம்பிபோல் முதலில் உண்டாயிற்று. குழந்தை முதல் பார்வை பார்க்கும்போதே அதிலிருந்து படீர் படீரென கீரல்கள் வெடித்துக் கிளைவிட்டன. அடுத்த விநாடி முதுகு ஒடிந்து போய், மணல் சிதறி மூடின ஒரு மணல் குவியல்தான் இருந்தது.

'ஆ, சனியன்' என்று ஏமாற்றம், கோபம் இரண்டையும் தொனியில் காட்டிக்கொண்டு, குழந்தை மறுபடியும் மணலைத் தோண்டி காலை வைத்து அடையப்புவதுமாக ஈடுபட்டிருந்தாள், முதல் தோல்வியை பொது படுத்தாமல். திருப்தி அளவு ஏற்படும் வரையில், வெற்றியின் எல்லையைக் காணும் வரையில், சித்திரத்தை அழித்து அழித்து சரிப்படுத்தும் சைத்ரீகனைப் போல் தோன்றினாள் குழந்தை. எத்தனை தரம் இதற்குள் அவள் கட்டும் வீடுகள் இடிந்து விட்டன. மனிதன் கட்டும் மனக் கோட்டைகள் இடிவது போல்! குழந்தை மனதில் அயர்ச்சி தோன்றினால் தானே.!

கடைசி தரம். ஜெயம் ஒருமட்டுக்கு கால்களை வெளியே இழுத்து விட்டாள். மேலே ஒரு கூடாரம்போல், திமிங்கிலத்தின் முதுகுபோல் மூடிக்கொண்டு உள்ளே சுரங்க அறையை அடக்கிக்கொண்டு அமைந்து விட்டது அவள் வீடு. ஒரு வெற்றி மகிழ்ச்சியுடன் 'அம்மா, கட்டி விட்டேன்,' என்று கைதட்டிக் குதித்தாள் குழந்தை.

அப்போதுதான் அவளருகே ஒரு ஓசை, உஸ் சப்தம் கேட்டது. கண்களை உயர்த்தி எதிரே பார்த்தாள். படமெடுத்த வெள்ளை நாகம் சீறி வருவதுபோல் நுரை வீசின பெரிய அலை ஒன்று அவளுக்கு சில அடிகளுக்கு முன் மணலில் மோதியடித்து விட்டு, தலை சாய்ந்து பெட்டிப்பாம்பாக வேகம் அடங்கித் திரும்பிக்கொண்டிருந்தது.

குழந்தையின் வாயிலிருந்து தன்னை அறியாமல் திடீரென்று வார்த்தை கிளம்பியது. 'என் வீட்டுக்கிட்ட வந்தியோ, பார்த்துக்கோ! அப்புறம்', என்று உதடு சுருங்க கண்கள் விரிய, விரலை மடக்கிக் காட்டி எச்சரித்தாள் குழந்தை அலையை.

தன் விளையாட்டை கலைக்க வரும், தன் வெற்றியைப்பிடுங்க வரும் ஒரு எதிரியாக, உயிர்ப்பொருளாக நினைத்துப் பேசினது போலிருந்தது அந்த வார்த்தைகள். இதுவரையில் வேடிக்கையாக அவள் கருதி இருந்தாள் அலைகளை! இப்போது?

அவள் எச்சரிக்கை மீது சீறி விழுவதுபோல் அதை யடுத்து இன்னொரு அலை கொஞ்சம் வேகமாக விசும்பிப் பாய்ந்து இன்னும் முன்னுக்கு வந்தது. தன் இடத்தில் ஒரு மனுஷ ஜந்து ஆக்ரமித்து வெற்றி அடைவதா என்ற ஆத்திரம் காட்டினது போல் இருந்தது அது. யந்திர சாதனங்களைக் கொண்டு இயற்கையை அடக்கி ஆள விரும்புகிறான் மனிதன். இயற்கையோ தனக்குத் தடை போட்ட அந்த செயற்கையின் மீது சீறி விழுந்து உக்ரமாக அழித்துச் செல்கிறது.

அலையடுத்து அலை வீசி வரவும் குழந்தையின் மனதில் ஒரு அவநம்பிக்கை தோன்றியது. தனக்கு அது இடைஞ்சல் செய்ய வருவதாக நினைத்துக்கொண்டாள். அதன் இடத்தில்தான் ஆக்ரமித்துக் கொண்ட நினைவு தோன்றவில்லை. அவள் பார்வை அடிக்கொருதரம் எதிரேவரும் அலைகள் மீது சந்தேகத்துடன் விழ ஆரம்பித்தது, அந்த வீட்டை செப்பனிட்டு வாசலைப் பெரிதாக்கி வழியை சரிப்படுத்திக் கொண்டிருந்தபோதும்.

'ஜெயம், பெரிசு பெரிசா அலை வருது. உன் வீட்டை பிடுங்கிண்டு போகப்போகிறது போ' என்று அம்மா நின்றுகொண்டு எச்சரிக்கை செய்தாள்.

'வருமோ, வந்தால் தெரியாது' என்று மிரட்டிப் பதில் கொடுத்தாள் பச்சைக் குழந்தை. அம்மாவின் சிரிப்பு. 'என்ன செய்வாய்?

'பாரேன்'

நானும் பார்க்கிறேன்' என்று சொல்லுவதுபோல் எகிறி வந்தது இன்னொரு அலை.

குழந்தையின் சிரத்தை இன்னும் அதிகமானது.

அலைகளின் ஆரவாரத்தைக் கண்டு 'வீட்டை தொட்டியோ கொன்னுடுவேன்,' என்று மறுபடியும் வீட்டில் எதையோ பழுதுபார்த்துக் கொண்டே அலையை மிரட்டினாள் குழந்தை. அதற்கு பயம் காட்டினது போல் அந்த அலையும் பின் வாங்கிச் சென்றது.

குழந்தையின் மனதில் தெம்பு பிறந்தது. தன்னைக் கண்டு அலை பயப்படுவதாக அவளுக்கு நிச்சயம். அதன்பின் எழுந்த அலைகளெல்லாம் சற்று எட்டியே பின்வாங்கி விட்டன. பயத்திலோ, பதுங்கியோ?

அலை நினைவு மனதில் சற்று மங்கவும் வீட்டை அழகுபடுத்துவதில் ஈடுபட்டாள் குழந்தை. 'அம்மா, வீட்டைப் பாரேன்' நன்று இருக்கா அம்மா,' என்று வேறெதிலோ லயித்து இருந்த தாயின் முத்தானையைப் பிடித்திழுத்து ஜெயம் கேட்டாள்.

அம்மா பார்த்தாள். வாய் சும்மா இருக்கவில்லை. 'ஐய, உன் வீட்டுக்கு

ஜன்னல் ஒன்றும் கிடையாதா, பூ,' என்று கேலி செய்துகொண்டே பார்வையை திருப்பித் தன் பழைய லயிப்பை தொடர்ந்தாள்.

குழந்தை மனதில் அந்தக் குறை சுரீரிட்டது. 'மறந்தே போச்சும்மா; என்று மண்டிபோட்டிருந்தவள் எழுந்து நின்று சுற்றிப் பார்த்தாள், எதையோ தேடுவதுபோல். கண்களில் திருப்தி ஏற்படவில்லை.

நேர் எதிரே ஒருதரம் ஊடுருவிப் பார்த்தாள். ஒரு பிர்மாண்டமான அலை ஒன்று தொலையிலே உருண்டு வருவதை அவள் சரியாக மதிப்பிடவில்லை. அம்மா பக்கம் திரும்பினாள். 'அம்மா இதை பார்த்திண்டு இரு. இதோ வந்துட்டேன்' என்று கொண்டே மணல் மேட்டில் ஏறி இரண்டு எட்டுக்கள் வைத்து விட்டாள். கீழே தெரிந்தது ஒரு குச்சி. ஆவலுடன் அதை குனிந்து எடுக்கப் போனாள்.

'ஜெயம், ஜெயம், ஓடிவா சீக்கிரம்' என்று அழுத்திக் கத்தினாள் அம்மா.

குச்சியை கையில் எடுத்துக் கொண்டே குழந்தை குனிந்தவாறே அம்மா பக்கம் திரும்பினாள். ஒரு பிர்மாண்டமான அலை அம்மாவையும், அவள் வீட்டையும் தாண்டிக் கொண்டு அவள் காலடிக்கு வந்து கொண்டிருந்தது. அவள் காலையும் நனைத்துவிட்டது. குழந்தை திடுக்கிட்டு அம்மா பக்கம் ஓடினாள்.

அவளுக்கு முன்னாலேயே தன் பசியைத் தணித்துக்கொண்டு, பழியையும் தீர்த்துக்கொண்டு ஜலத்தில் கரைந்து போய்விட்டது அந்த அலை!

'ஜெயம், உன் வீட்டைப் பாரு!'

ஜெயத்தின் முகத்தில் ஒரு வெறிப் பார்வை! 'எங்கேம்மா என் வீடு?'

அம்மாவின் முகத்தில் ஒரு சிரிப்பு, ஏளனம்!' அதோ போறதே! அந்த அலையைக்கேளு.'

குழந்தை ஜெயம் மறுபடியும் கண்களை அம்மா காலடியில் செலுத்தினாள். அவள் வீடு இருந்த இடத்தில் ஒரே மணல் பரப்பாக இருந்தது. அது சதம் என்று என்று எண்ணி வீட்டுக்கு ஜன்னலாக ஓட்டையிட, குச்சி தேடப் போயிருந்தாள் குழந்தை! வீடே போய்விட்டது!

மேலும் மேலும் சீறிவரும் அலைக் கூட்டத்தை வெறித்துப் பார்த்தாள் குழந்தை. அலைகளின் பொங்கலுக்கு மேலெழுந்த கோபம் பொங்கிவந்தது அதன் ஹிருதயத்தில்!

இன்னொரு பிர்மாண்ட அலை அவளை நோக்கி அலறிப் புடைத்து ஓடிவந்தது அப்போது. அவள் காலடியைக் கவ்வப் போகிறது. விறுட்சென்று குழந்தை கீழே குனிந்து ஒரு பிடிமணலை வாரினாள். உதடுகளை பல் கடிக்க, 'தூ! சனியன்! நாசமாப்போக' என்று வார்த்தையோடேயே சேர்த்து கைமணலை ஓங்கி விசிறி அடித்தாள் அலையில் முகத்தில்!

ஒரு வேதனை ஓசையை கிளப்பிக் கொண்டு, குழந்தையின் பார்வையிலிருந்து ஓடி மறைந்தது அந்த அலை. 'சீ, இனிமேல் இங்கே வீடே கட்டக்கூடாது', என்று வாய்விட்டு முனகிக் கொண்டாள் ஜெயம்.

* எங்கள் தமிழ் ஐயா *

'வரதன்'

எங்கள் தமிழ் ஐயாவை உங்களுக்கு அறிமுகம் செய்துவைக்க வேண்டும் என்பது என்னுடைய நீண்ட காலத்திய ஆசை. எங்கள் பாட்டி சொல்லி வந்ததுபோல் "காலமும் போதும்" ஒத்துக்கொள்ள வேண்டாமா? எனக்கும் வேறுவித ஜோலி. உங்களைச் சந்திக்கும் சந்தர்ப்பமும் இதுவரை இல்லை. ஆனால் ஐயாவை உங்களுக்கு நேருக்கு நேரே அறிமுகப்படுத்துவது என்பது என்னவோ அவ்வளவு லகுவாக முடியுங் காரியமல்ல. அதற்குக் காரணம், நானோ 'கிராம்மியம்'! அவரோ பழுத்த கர்னாடகம்.

எங்கள் தமிழ் ஐயா சுமார் ஐந்தடி உயரம். நல்ல மாநிறம். வயது அறுபதுக்கு மேலாகியும் நரையில்லாத தலைமயிர். பளிச்சென்று திருநீறு பூசப்பெற்று எப்பொழுதும் பொலிவுற்றிருக்கும் அகன்ற நெற்றி. முகத்தை அழகுபடச் செய்யும் உருண்டை மூக்கு வெள்ளி பிரேம் போடப்பெற்ற கண்ணாடியுடன் விளங்கும் குழி விழுந்த கண்கள். சிரிப்பிலிருந்து எவரும் கண்டுகொள்ளும் அதிருஷ்டக் கன்னங்கள். 'வெடுக்' கென்று சீடையையும் கடிக்கவல்ல கணிசமான பற்கள், முத்துக் கோத்தாற்போல. பிரதம மந்திரி ராஜாஜி அணிந்திருப்பதுபோலத் தூய வெண்ணிற முழுக்கை அங்கி. (அடையாறு கதர் ஜிப்பாவல்ல) அன்றாடம் தானே துவைத்துக் காயவைத்து உடுத்திக்கொள்ளும் 'கோரா மல் மூலைக்கச்சம்.'

இரண்டு பக்கங்களும் தையல் மிஷனில் பட்டை அடிக்கப்பட்டு சட்டைக்கு மேலே அங்கமாய் மடிப்புக் கலையாமல் போட்டுக்கொண்டிருக்கும் சிகப்புக் கரை போடப்பட்ட அழுத்தமான வங்காரம் பேட்டைத் துண்டு. இடதுகையில் நன்னூலைச் சேர்த்து மூன்று புத்தகங்களும் இரண்டு நோட்டுகளும், வலதுகையில் 611 எண்கொண்ட 'ஆயிரங்' காலமாய் ஆண்டுவந்த அசல் மான்மார்க்குக் குடை. இப்படிப்பட்ட அங்க அடையாள வைபவங்களுடன் பள்ளிக்கூடத் துவக்க நேரத்துக்கு அரை மணிக்கு முன்னரே பாடசாலையை நோக்கிச் சாதாரண நடையில் வந்துகொண்டிருக்கும் பேர்வழியைச் சந்தித்தால், உடனே எங்கள் ஐயா என்று நிச்சயமாய் நம்புங்கள்.

எல்லா தமிழ்ப் பண்டிதர்களிடம் 'டிமிக்கி' கொடுப்பதுபோல எங்கள் ஐயாவிடம் பலிக்காது. அவர் சொல்லித்தரும் பாடங்களை மனதில் பதியவைத்துத்தான் மறுவேலை செய்வார். வீட்டில் போய்த் திரும்பிப் பார்க்கவேண்டும் என்ற இம்சை வைக்கமாட்டார். நளவெண்பா, கம்ப ராமாயணம், வில்லிபாரதம், குறள் எதாவதொன்றைப் பாடஞ்சொல்ல ஆரம்பித்தால் போதும். வகுப்பில் ஒரே நிசப்தம்; ஊசி விழுந்தாலும்

ஓசை கேட்கும். பதங்களைச் செவ்வனே பிரித்து, முக்கியமான இடங்களைக் கொஞ்சம் அழுத்திச் சொல்லி, அவைகளுக்குரிய ராகங்களுடன் வாசிக்க ஆரம்பித்தால், எல்லோரும் அங்காந்த வாயுடன் கேட்டு ஆனந்தம் கொள்ளாமல் இருக்க முடியுமா? அதற்கு முந்தின மணியில் கணக்கு போடத் தெரியாமல் தொல்லைப்பட்ட பையன்களுக்கு மன நிம்மதியும், தேக அலுப்பு நிவர்த்தியும் ஏற்படும் என்றால் மிகையில்லை.

படிக்காத பையன்களிடம் தயை, தாக்ஷண்யம் காண்பிப்பவர் எங்கள் ஐயா அல்ல. பணக்காரர் வீட்டுப் பையனானாலும், ஏழைவீட்டுக் குழந்தையானாலும், லக்ஷியமில்லாமல் கண்டிப்பதில் ஐயாவை தர்ம ராஜாவுக்கே நிகரெனக் கூறலாம். ஆளுக்கேற்ற ஔஷதமும், ஒவ்வொருவருக்கும் தனி 'உடைசலும்' கொடுப்பதில் அவருக் கிணை இருத்தல் அசாத்தியம்.

"ஏண்டா, கோபாலா! அறிவாளிகளும், யோக்கியர்களும் நிறைந்த குடும்பத்தில் பிறந்த நீ இப்படிப் படிக்காமல் வருவது நியாயமா? நேற்று யாராவது புதிதாய் வீட்டுக்கு வந்தார்களோ? ஓஹோ! ஆம்! யாரோ ஒருவர் ஒரு மடிசஞ்சியுடன் உன் மாமா சாயல் உள்ளவர் உன் தமையனுடன் கடைத்தெருவில் போவதைக் கண்டேன். ஒரு வேளை அவருடன் அதிக நேரம் அளவளாவி யிருந்துவிட்டனை போலும்! சரி, இனி இப்படிப் படியாமல் வராதே, போ" என்பார் தன் அன்புக்குரிய ஒரு மாணவனிடம்.

"குப்பு! நீ பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளை. உனக்கு வரவு செலவு கணக்குவரையில் தெரிந்தால் போதும்! நீ நல்ல பிள்ளைதான். படிப்பில் மட்டும் படுமோசம்! மத்தளக் கட்டைக்கு உறைபோடுகிற மாதிரி சட்டையையும் கோட்டையையும் போட்டுக்கொண்டு 'டிங்கு, டிங்கு' என்று ந்தால் மட்டும் போதுமா? படித்தால்தான் பெரிய மனிதன் நீ, இல்லையேல் உன்னையும் உன் பணத்தையும் யார் லக்ஷியம் செய்வார்கள்? நாளை முதல் இப்படி வராதே, உட்கார்" என்று அமர்த்திவிடுவார்.

"ஏ கிட்டா! நீ ஒரு முட்டாள். பரீக்ஷையில் கட்டாயம் நீ 'இட்டா'தான் வாங்கப்போகிறாய். உனக்கென்ன கேடுடா? 'ஏ அவிட்டம் பிடிச்ச குட்டிச்சுவரே!' உன் தாய் தந்தையுடன் பேசும் பாஷையிலேயே இந்தவிதமாக சுழித்துக்கொண்டுபோனால் எந்த ஜன்மத்தில் கடைத் தேறுவது? கசாப்புக்கடை வைப்பதற்குத்தான் நீ லாயக்கு. இதிலே கிராப்பு வேறே, அரையிலே "வழிச்சுக்கிட்டான் சட்டை;" எல்லாம் வெள்ளைத்தோல் துரைமாதிரிதான். சீமையிலிருந்து இப்பொழுதுதான் ஓட்டைக்கப்பலில் வந்து இறங்கி யிருக்கிறாருடா? ஏதோ உங்கப்பன் மாதாமாதம் சம்பளத்தை அவிழ்த்துவிடுகிறான். நீயும் சாப்பிட்ட சாதம் ஜீரணமாவதற்கு இங்கு நடந்துவந்து உட்கார்ந்து பெஞ்சியைத் தேய்த்து விட்டுப் போகிறாய். இன்னும் ஒரு மாதத்திற்குள் உன் படிப்பில் போதுமான அளவு தேர்ச்சி காண்பிக்கத்தவறினால் உன்னைப் பரீக்ஷைக்கு அனுப்பாமல் இருக்கத் தகுந்த சிபார்சுகள் செய்திடுவேன்; ஜாக்கிறதை" என்று ஒரே போடாய்ப் போட்டு விடுவார்.

எங்கள் ஐயாவுக்கு வீட்டுவேலை அசாத்தியம். காலையில் ஐந்து மணி அடிப்பதற்கு முன்பே எழுந்திருந்து விடுவார். கொல்லைத் 'தலைமாடு'

முதல் தெரு வாசல் வரையிலும், தினமும் கூட்டிச் சாணம் தெளித்தல் வேண்டும். ஏன், மனைவியில்லையா என்றெண்ணுகிறீர்களோ? மனைவி இருக்கிறாள், மகாலெக்ஷ்மியைப்போல. உத்தமி! ஆனால் சிறிது உடல் நலம் குன்றியவள். அதிகம் நடந்து வேலை செய்யச் சக்தியற்றவள். ஆதலால் பொழுது புலர்வதற்குள் கொட்டில் கூட்டி, சாணியை அப்புறப்படுத்தி, தொட்டிக்குத் தண்ணீர் நிரப்பி, வீட்டுக்கும் ஜலம் சேர்த்து வைத்து விடுவார் ஐயா.

பின்னர் தன்னுடைய ஆடைகளைத் துவைத்து உலர்த்தித் தானும் ஸ்நானம் செய்து கிணற்றடியிலிருந்து வீடு நுழைய மணி எட்டு ஆடுவிடும். பிறகு பள்ளிக்கூட அன்றாட வேலையைக் கவனித்துவிட்டு, உண்டெழுந்து பாடசாலை செல்லவேண்டிய நேரந்தான் மிஞ்சும். அவரது வீட்டுத் திண்ணையைப் பார்த்து நெற்றிக்கு இட்டுக் கொள்ளலாம். அப்படி இருக்கும் அது பளிங்குபோல. காந்தி சொன்னபடி, பகவத் கீதையைக் கூட பாராயணம் செய்யத்தகுந்த இடமாய் இருக்கும் அவர் வீட்டுக் கக்கூஸ்.

இத்தனை வேலைகளையும் அலுப்பு, சலிப்பு சிறிதும் இல்லாமல் அமைதியுடன் செய்து முடிப்பது தான் அதிக சுவாரஸ்யம். மனைவியிடம் கடுமையான பேச்சுக்களைக் கையாண்டார் என்று யாரேனும் சொல்ல வந்தால், அதை வெறும் புரளி என்று ஐயாவைத் தெரிந்தவர் அனைவரும் கூறுவர்; ஆக்ஷேபணையில்லை. அந்த அம்மையும் ஐயா கிழித்த கோட்டுக்குப் புறம்பாக நடந்தவளும் அல்லள். இப்படிப் பரஸ்பர அன்னியோன்யம் வாய்ந்த அந்தக் குடும்பம் ஒரு எடுத்துக்காட்டாக விளங்குவதை எவ்வளவு விஸ்தாரமாகப் பேசினாலும் போதாது.

ஆனால் அவருக்குள்ள ஒன்றிரண்டு குறைபாடுகளையும் ஒளிக்காமல் உரைத்திடுவதே ஒழுங்கு. சுமார் முப்பத்தைந்து வருஷ காலமாய் ஸர்வ்வில் இருந்த ஐயா, ஆயிரக் கணக்கான சீடர்களைச் சேர்த்தாரேயல்லா பணம் அதிகம் சேர்த்தவராகத் தெரியவில்லை. "பணமா பெரிது, மனிதர்கள் தான் வேண்டும் என்று வெகுகாலமாய் இந்த உத்தியோகத்திலேயே இருந்து வருகிறார்" என்று சொல்லுகிறவர்கள் கூற்றில் எனக்கு முழு நம்பிக்கையே.

ஐயா அதிகம் அறிவு படைத்தவர்; அத்தோடு அளவிலா அடக்கமும் கொண்டவர். சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டவர்; ஆனால் வெறும் கோழையல்ல. எங்கள் ஐயா யோக்கியமானவர்; ஆனால் அயோக்கியத்தனத்தில் ஆழங்கண்டு அதை அடக்கி ஆளும் ஆற்றல் படைத்தவர். களங்கமற்ற பேச்சும் கண்ணியமான பழக்கமும், சுத்தமான உடையும், சூதற்ற தூய்மையும், தன்னலமறுப்பும், சாத்வீக குணமும் ஐயாவை ஒரு உயர்ந்த புருஷனாக்கின என்பது என் போன்றாரின் முடிவு.

மின்சார விளக்கு

எடிஸன் பொருத்தமான மின்சாரவிளக்குக் கண்டு பிடித்த சரித்திரத்தை மாத்திரம் இங்கு காண்பிக்கப்படும்.

எடிஸன்

எடிஸனுடையபரிசோதனைச்சாலை மிகவும் சுறுசுறுப்பு பூண்ட காட்சியாக இருந்தது. இரவு, பகல், ஞாயிற்றுக்கிழமை, திருநாள் — என்ற பேதமே இல்லாமல்— இடைவிடாத உழைப்பு ஸ்தலமாக இருந்தது. உத்ஸாஹமும் வீர்யமும் திரண்ட பக்தர்கள்போல், ஆட்கள் வேலைசெய்தார்கள்.

இவர்களில் மேக்கென்ஸி என்பவர் ஒருவர். இவர் ஒரு காலத்தில் ஸ்டேஷன் மாஸ்டராக இருந்தார். அந்த ஸ்டேஷனில் பத்திரிகை விற்கும் பையனாக எடிஸன் வேலை செய்தார். ஒரு நாள் ஷண்டு—செய்யப்பட்ட வண்டி நகர்ந்து வரும் தண்டவாளங்களுக் கிடையில் ஸ்டேஷன் மாஸ்டரின் குழந்தை விளையாடிக்கொண்டிருந்தது. அதைக் கவனித்த பையன் எடிஸன் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து, குழந்தையை அந்த அபாயத்திலிருந்து மீட்டான். அதன் பின்பு, அந்த மேக்கென்ஸியின் சிபார்சின்பேரில், எடிஸனுக்குத் தந்தியாபீசில் வேலை கிடைத்தது.

வெகு காலத்திற்கப்பால், எடிஸன் பிரஸித்தியடைந்த பிற்பாடு, இந்த மேக்கென்ஸி ரயில் வேலையிலிருந்து விலகினார். அப்போது, அவருடைய குடும்பம் பெரியதாக இருந்ததே ஒழிய, திரவியம் ஒன்றுமில்லை. இந்த நிலைமையை அவர் எடிஸனிடம் முறையிட்டுக் கொண்டார். எடிஸன் இவருக்குப் பிச்சை கொடுக்கப் பிரியப்படவில்லை. "நீரோ தந்தியில் பழகியவர். எனக்கு ஒரு புது யந்திரம் வேண்டியிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கவேண்டும். எனக்குப் பல அலுவல்கள். நான் வழிகாட்டுகிறேன். அதைப் பின்பற்றிப் பாடுபடும். பரிசோதனை, செய்திடும்" என்று எடிஸன் அவருக்கு,

வேலையைக் கொடுத்துக் கடைசியாக ஒரு இலாகாவில் அவரைக் கூட்டாளியாகவும் எடுத்துக்கொண்டார்.

மின்சார விளக்கில், வெளிச்சம் தங்குவதற்குவேண்டிய கரி—நூலைத் தயாரிப்பதற்காக—சூரியமண்டலத்தின் கீழ் உண்டான சகல சாத்தியமான பொருள்களையும், அசாத்தியமான பொருள்களையும் எடிஸன் பார்த்துப் பார்த்துப் பரிசோதித்துவிட்டார். அப்படியும் எடிஸனுக்குத் திருப்தி ஏற்படவில்லை. "இன்னும் எதையேனும் பரிசோதிக்க வில்லையோ!" என்று யோசித்துக் கொண்டிருந்த பொழுது, மெக்கென்ஸி அங்கு நின்றுகொண்டிருந்தார். அவருக்கு சிகப்பு நிறமான அடர்ந்த தாடி உண்டு. "கொஞ்சம் கொடும்," என்று அவரிடமிருந்து கொஞ்சம் தாடிமயிரை வாங்கி, "இதுதான் சிலாக்கியமான கரிநூலைக் கொடுக்குமோ என்னவோ!" என்று பரீட்சை செய்தார்.

"எடிஸன் — மெக்கென்ஸி மயிர் விளக்கு" என்று பிரஸித்தி ஏற்பட்டது. அது சிறந்த சிகப்பு ஒளியைக் கொடுத்தது. கொஞ்ச காலத்திற்கப்பால், மயிர் — விளக்குக்கு பேடேன்டும் (பிரத்தியேக உரிமையும்) வாங்கப்பட்டது. எடிஸன் கரிபண்ணிப் பரிசோதித்த சாமான்களில் சிலவற்றைக் கீழே காணலாம்:—

கந்தைக் கோணி நூல்.

வாகைமரத்துத் தழை நரம்பு.
ஜாதிக்காய் மர நரம்பு.

பலவகை அட்டைகள்.
தேவதாரு சிம்புகள்.

ஸெல்லுலாய்டு.
உறிமட்டை நார்.

கொட்டாங்கச்சிக் குடுமி.
செட்டி.

கொதிக்கும் தாரில் தோய்த்த பஞ்சு.
டிராயிங்கு — காகிதம் — பலவகை.

மீன் பிடிக்கும் வலை நூல்.
சணல்.

விளக்குத்திரி.
கரும்புச் சக்கை.

தாரில் ஊறிய காகிதம்.
காரியம்.

விசிறிக் கயிறு.
மெக்கேன்ஸியின் தாடிமயிர்.

நூல்கள்.
பஞ்சுகள்.

சணல் புடவை நூல்கள்.
பின்னிய நூல்கள்.

தார் அடித்து விளக்குக் கரியுடன் சேர்த்து செப்பனிட்ட நூல்கள்.

மெல்லிய தாள்.
ட்வைன் கயிறு.

கந்தகம் கலந்த ரப்பர் நரம்பு.
மரங்களின் சிராய்கள்.

மின்சார விளக்கைத் தணல் விளக்கு என்றழைக்கலாம். ஜ்வாலையில்லாமல் அது வெளிச்சம் தருகிறது.

இந்தத் தணல் விளக்குக்காக ஏராளமான பாடு பட்டார்.

பழைய மெழுகுவத்தி விளக்கில் ஸ்ப்ரிங்கு உண்டல்லவா? அது மாதிரி முறுக்கிய நூல், எடிஸனுடைய முதல் முயற்சிகளில் பரிசோதிக்கப்பட்டது. தார், விளக்குக் கரி இரண்டையும் சேர்த்து ஒரு பிஷினைத் தயாரித்தார்கள். புஜபலமுடைய ஆட்கள் அந்த மாவைப் பிசைந்து பிசைந்து உருட்டினார்கள். ஒரு மணி நேரம் உருட்டிய பின்பு, எடிஸனிடம் கொடுத்தார்கள். எடிஸன் தொட்டுப் பார்த்தார். “அது விண்டுபோகிறது. இன்னும் நாலைந்து மணிநேரம் பிசைந்து உருட்டுங்கள்” என்றார். பின்னிட்டு அது சரியாக வந்தது. ஒரு நூலின் பருமன் ஒரு அங்குலத்தின் ஆயிரத்தில் 7பங்கு இலேசாகத் தயாரிக்கப்பட்டது.

இன்னமும் பரீட்சை பார்த்ததில், காகிதம்தான் ஜெயிக்கும், எனத்தோன்றியது. கரியாக்கப்பட்ட காகிதத்தை நூலாக்கி எடிஸன் வரிசை வரிசையாக விளக்குகளைச் செய்ய ஆரம்பித்தார். விளக்கே நிஜமாக எரிந்து, வெளிச்சம் கொடுக்க, ஆரம்பித்துவிட்டது.

21-12-1879-ந் தேதியில் கம்பிகளில் தொங்கிக்கொண்டு, விளக்குகள் எரிகின்றனவென்று பத்திரிகைகளில் பிரசுரமாகிவிட்டது.

எடிஸன் இடத்திற்கு ரயில்வே கம்பெனியால் விசேஷ வண்டிகள் விடப்பட்டு ஜனங்கள் பல்லாயிரக்கணக்காக விளக்குகளைப் போய் பார்வையிட்டு வந்தார்கள்.

ஸர். ஸி. வி. ராமன் என்ன செய்கிறார் என்று நாம் எங்கே போய் பார்க்கிறோம்! அந்த கவனம் நமக்குக் கிடையாது. எவரேஸ்டு சிகரம் 29,002 அடி உயரம். தன்னந்தனியே ஒரு பாறை அவ்வளவு உயரம் உயர முடியுமா? அகண்டமான ஹிமய மலையை அஸ்திவாரமாகக் கொண்டு எவரேஸ்டு அவ்வளவு உயரம் ஏறியிருக்கிறது.

பௌதிக சாஸ்திரத்தில் லட்சக்கணக்கான ஜனங்கள் அக்கரையுடனும் ஆவலுடனும் கவனம் செலுத்தவேண்டும். பத்தாயிரக் கணக்கான ஜனங்கள் அதில் ஈடுபட்டுப் பாடுபடவேண்டும். அப்போது ஒன்றேடொன்று, பல மூளைகள் உத்ஸாஹமாக வேலை செய்து, சிறப்பான பலன்கள் உதயமாகிக்கொண்டே யிருக்கும்.

அந்த 21-12-1879-இல் ஒரு அமெரிக்க பத்திரிகை கூறியது :-

"நம்ப முடியாததாகத் தோன்றும். ஆயினும் அது நிச்சயமான உண்மை. ஒரே மூச்சு விட்டால் பறந்து போகும்படியான ஒரு காகிதத் துணுக்கிலிருந்து தயாரிக்கப்பட்டு எடிஸனுடைய மின் சார விளக்கு பிரகாசிக்கிறது. இந்தக் காகிதத்தின் வழியே மின் சாரம் ஓட்டப்படுகிறது. இத்தாலி தேசத்தில் இலையுதிர் காலத்தில் மாலை நேரத்தில் சூரியன் கொடுக்கும் ஒளி போன்ற ஒளியை இந்த உபாயம் கொடுக்கின்றது. கனரஜத (ப்ளாடினம்)த்தைக் காட்டிலும் பொருத்தமாக இந்தக் காகிதம் மின்சாரத்தை வாங்கிக் கொள்கின்றது. பாறையைக் காட்டிலும் கெட்டியாக அது நிற்கின்றது. இதன் செய்வகையிலும் பிரமாதமான சிக்கல் யாதொன்றும் கிடையாது."

"காகிதத்தை ஒரு அடுப்பில் சமைக்கப்படுகிறது; கரியைத் தவிர மற்ற அம்சங்களெல்லாம் போய்விடுகின்றன. ஒரு கண்ணாடிப் பந்துக்குள் (Bulb) இந்தக் கரிநூல் வைக்கப்படுகிறது. மின்சாரத்தை உண்டாக்கும் யந்திரத்துடன் கம்பிகளால் இந்தக் கரிநூல் இணைக்கப்படுகிறது. அந்தக் கண்ணாடிப் பந்திலிருந்து, காற்று வெளியே எடுக்கப்பட்டுவிடுகிறது. உடனே வெளிச்சம் தயாராக வந்துவிடுகிறது.

"அபாயகரமான காற்றுகள் யாதொன்றும் உண்டாவதில்லை. புகை கிடையாது. மூக்கை உபத்திரவப்படுத்தும் கந்தங்கள் கிடையாது. ஜ்வாலையில்லாத, அபாயமில்லாத, ஏற்றுவதற்கு நெருப்புக் குச்சியை வேண்டாத, ஸ்வல்ப சூடு கொண்ட, ஆட்டம் முற்றிலும் அற்ற வெளிச்சம் உதயமாகின்றது. மிகவும் மலிவான எண்ணெயிலிருந்து கிடைக்கும் வெளிச்சத்தைக் காட்டிலும், அதிக மலிவாக இந்த வெளிச்சத்தைத் தயார் செய்ய முடியும், என்று இதைக் கண்டு பிடித்த எடிஸன் கோஷிக்கிறார்" என்று அந்த பத்திரிகை 21-12-1879-இல் எழுதிற்று.

பத்திரிகை அவ்விதம் கொண்டாடியபோதிலும், பருத்திநூல் விளக்காவது காகிதக் கரிநூல் விளக்காவது, எடிஸனுக்குத் திருப்தியை அளித்துவிடவில்லை.

இன்னமும் பொருத்தமான பொருளைத் தேடின வண்ணமாயிருந்தார். பூதக்கண்ணாடியை வைத்துக் கொண்டு, எந்த சாமானையும் நரம்புபோன்ற நூலுக்காக பரிசோதித்துக் கொண்டிருந்தார்.

பல புல்கள், பிரம்புகள் இதுபோன்ற சாகவகைகளைப் படித்துப் பரீட்சை செய்து வந்தார். 1880-ம் வருஷத்தில், கீழே கிடந்த பனை-ஓலை விசிறியைக் கவனித்துப் பார்த்தார். அதன் ஓரம் ஒரு மூங்கில்-நாரினால் கட்டப்பட்டிருந்தது. உடனே அதை எடுத்து சிஷ்யரிடம் கொடுத்து "இதைப் பொசுக்கிக் கரிநூல் செய்திடு", என்றார். பரீட்சை ஜயித்தது. மற்ற கரிநூல்களைக் காட்டிலும், இது சிலாக்கியமாக இருந்தது. "நன்றாகப் பொருத்தமாக வேலை செய்வதற்கு, இதுதான் சரி", என்று எடிஸன் தீர்மானித்தார். "ஆயினும், உலகத்தில் இந்த மூங்கிலைக் காட்டிலும் சிலாக்கியமான மூங்கில் வகைகள் இருக்கத்தான் செய்யும்" என்று ஆலோசித்தார்.

உடனே பிரமாண்டமான நரம்பு-வேட்டை ஆரம்பித்தது.

அந்த சிறந்த பொருளைக் கண்டு பிடித்துக்கொண்டு வருவதற்காக, உலகத்தில் வெப்பமான காடடர்ந்த பிரதேசங்களைத் தேடிப் பொறுக்குவதற்கு, ஆட்கள் எட்டுத் திக்குகளிலும் அனுப்பப்பட்டார்கள். அந்தந்தப் பிரதேசங்களிலேயே பரீட்சை செய்வதற்குத் தேவையான முஸ்தீப்புக்களும் அனுப்பப்பட்டன.

எடிஸனுடைய ரஸாயன சாலைக்கு மூட்டைமூட்டையாகச் சரக்குகள் வந்து குவிந்துகொண்டிருந்தன. பத்து வருஷங்கள் வரைக்கும் இந்த நரம்பு-வேட்டை தொடர்ந்து நடந்து வந்தது. இதில் ஒரு இலட்சம் "டாலர்" வரையிலும் செலவழிந்திருக்கும்.

"ரஷ்யாவுக்குப்போ!"

(ரஞ்சனன்)

ரத்னசாமியும் பொறுத்துத்தான் பார்த்தான்; முடியவில்லை. ஆபீசில் ஆசிரியர் தொல்லை பொறுக்க முடியாமல் வீட்டுக்கு ஓடிவந்தால்.... இந்த மனைவி. ஒரு நாளைப்போலவே, ஒவ்வொரு நாளும் 'சள், சள்' ளென்று ஆசிரியரின் பாணங்கள்! ஒரேமாதிரியான கறைபடிந்த, வரையறுக்கப்பட்ட வாழ்க்கையின் வழியில் நடந்து நடந்து அலுத்துவிட்டது. 'எழுதிப் பிழைப்பதைவிட சாகலாம்' என்ற முடிவுக்கு வந்தான் அவன்!

அன்று ஆரம்பித்ததிலிருந்து ஆயிரத்து ஓராவது தடவையாக 'விறகு, நல்லெண்ணெய், இன்னும்...காப்பிக்கொட்டை' என்ற ஜெபம் நடந்து கொண்டிருந்தது வீட்டில்.

தொல்லை பொறுக்க மாட்டாமல் "இருக்கிறதைப் பார்த்துப் பண்ணத்தெரியல்லை! கழுத்தை அறுக்காதே" என்றான் ரத்னசாமி. அவனுக்குக் கோபம் மனைவிமேல் இல்லை. கோபத்தைக் காட்ட வேண்டிய இடத்தில், தன் கோபம் செல்லாது. அவ்வளவு தான். அது மனைவிமேல் வந்து விழுந்தது.

"இந்த எழவு வீட்டில், எப்பொழுதுமே இப்படித்தான்" என்றாள் காமாட்சி. அதற்கு எதிரொலியாக, "சந்நியாசம் வாங்கிக் கொண்டாலும் தேவலை" என்றான் ரத்னசாமி.

நல்ல வேளையாக, அவனுடைய அரசியல் நிபுணத்துவமும், பொருளாதாரப் புரட்சி மனப்பான்மையும் மலைகளிலும், காட்டிலும் போய் மூக்கைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்துவிடத் தூண்டவில்லை. "வாழ்க்கையின் முடிவு இது வல்ல. அது ஆரம்பம்கூட இல்லை. பிறகு...? இதைவிடப் பெரிய, விசாலமான, வாழ்க்கை வேறு இருக்கிறது. சமூகம், தேசம் இவைகளை வீட்டில் பிறக்கும் அற்பத் தொல்லைத் திரைகள் வந்து மறைத்து விடக்கூடாது" என்று பல்லைக் கடித்துக்கொண்டு அவன் வேலையில் ஈடுபட்டிருந்தான்.

"பத்திரிகையில் உதவி ஆசிரியராக இருந்துகொண்டு செய்யும் தேசசேவையும், சமூகத்தொண்டும், பார்த்துப் பெருமைப் படக்கூடிய விஷயங்கள்" என்பது அவன் சித்தாந்தம். 'பேனாவின் சக்தி கத்தி முனையில்கூட இல்லை' என்று அவன் எவ்வளவோ தாம் பேசிக்கேட்

டிருக்கிறேன். ஆகவே அந்த சக்தியை அவமதித்த ஆசிரியரிடம் அவனுக்குக் கோபம் வருவது இயற்கையே யல்லவா? தினசரிகள், வாரப்பதிப்புகள், மாதப்பத்திரிகைகள்—எல்லாம் பார்த்துப் பார்த்துக்கண் பூத்துவிட்டது. விஷயம் முக்கியமாக இருந்தால் தானே எழுதுவதற்கு? ஒன்றுமில்லாமல் 'எழுது, எழுது' என்று பிராணனை வாங்கி, எழுதாவிட்டால் 'இன்னிக்கி லீவு போலிருக்கு' என்று முணு முணுக்கும் ஆசிரியரோடு எவ்வளவு நாள் போராடுவது? ஒரு ஜென்மம் முழுவதுமா? ஒன்றுமில்லாததை வைத்துக்கொண்டு யார், எதை, செய்யமுடியும்! சூன்யத்தில் நிறைவு பிறக்குமா?

மூன்றாவது தரமாக, தான் எழுதிய ராஜினாமாவைக் கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டுவிட்டு ரத்னசாமி கெடியாரத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். பல பல விதத்தில் யோசனைகள் பறந்தன. ஏன் அவன் அப்படி, நசுக்கப்பட்ட புழுவைப்போல் கிடக்கவேண்டும்? அவன் ஏழையாக இருக்கலாம்; ஆனால் மனிதனில்லையா?



அல்லது நாட்டுத்தரித்திரம்தான் அவனையும் பிடித்துக்கொண்டதா? ஏன் அவன் இந்தியாவில் பிறந்தான்? எங்கு, மனுஷ்

யத்வம் பேராசையையும் மீறி, வாழ்கிறதோ, அங்கு தான் என் பிறக்கவில்லை என்று மனம் கனிந்து ஏங்கினன்.

அவனுடைய ஏகாந்தத்தைக் கலைக்க சேட் ஒருவன் 'லொட லொட' வென்று புரியாத பாஷையில் ஏதோ அடுத்தவனிடம் உளறிக்கொட்டிக் கொண்டிருந்தான். கடைசியில் பேச்சு முடிந்ததும் ஆறு நூறுரூபாய் நோட்டுகளை எண்ணி அவனிடம் கொடுத்து விட்டு, சேட் போய்விட்டான்.

ரத்னசாமி நூறு ரூபாய் நோட்டுகளைப் பார்க்காதவனல்ல. ஆனால் அவைகளைத்தொட்டதில்லை. அவை அவனுடைய எண்ணங்களை ஒரு புது வழியில் திருப்பின.

"என்ன தப்பபிப்பிராயம் கொண்டிருந்தேன்! இந்தியாவிலா ஐச்வர்யமில்லை? அஷ்ட லக்ஷ்மியும் தாண்டவமாடும் பாரத தேசத்திலா செல்வமில்லை என்று நினைத்தேன்—!" என்று மறுபடியும் கனவில் முழுகிவிட்டான். ஆனல் கனவு கனவாகிவிடவில்லை. "செல்வம் நம்மிடம் இல்லாமல் போய் விடவில்லை. அப்படியிருந்தால் சேட்டிடம் பணம் கொழிப்பானேன்? பொருள்கள் இல்லாமல் போய் விடவில்லை. அவைகள் மிகச் சில பேர்களிடம்போய் குவிந்து கிடக்கின்றன. பொருளாதாரத் தவறு தலினுல் ஏற்பட்ட திமிர் பிடித்த முதலாளித்வத்தினுடைய, பயங்கரமான வேடிக்கைகளில் இதுவும் ஒன்று! செல்வம் சரியாக வினியோகம் செய்யப்படவில்லை. அதுதான் காரணம் என்று அவன் மனம் தெளிவடைந்தது.

மணி ஐந்தடித்ததே பாக்கி இருந்த காகிதங்களை எடுத்து மேஜைக்குள் திணித்துவிட்டுப் படிக்கட்டுகளில் இறங்கும்போது ஒரு சாது, 'தர்மத்தை எவன் செய்கிருனே, அவனுக்கு மோக்ஷத்தின் கதவுகள் திறக்கப்படுகின்றன' என்று ஹிந்தியில் பாடினுன்.

அவரைப்பார்த்து 'உம்' என்று உறுமினுன் ரத்னசாமி.

மோட்டார் நிற்குமிடத்தில் மைலாப்பூர் பஸ் இல்லை. வர சிறிது நேரம் பிடித்தது. ஆயிரக்கணக்கான மானஸக்கோட்டைகளைக் கட்டிக்கொண்டு நின்றதில் சுற்றி இருந்தவர்கள்—பிச்சைக்காரர்கள்—கெஞ்சியது அவன் காதில் விழவே இல்லை.

"மைலாப்பூர், அடையார்!" என்று பஸ்காரன் போட்ட சத்தத்தில் விழித்துக்கொண்ட ரத்னசாமிக்கு "ஐயா—பசியா இருக்குதையா!" என்ற குரல் ஆத்திரமூட்டிற்று.

"ரஷ்யாவுக்குப்போ!" என்று அவன்மேல் எரிந்து விழுந்து விட்டு, பஸ்ஸில் ஏறினுன் ரத்னசாமி.

மாமல்லனின் பொக்கிஷங்கள்

[ரா. ஆறுமுகம்]



சென்னையின் சந்தடியை விட்டுப் போய் ஒரு நாளாவது எங்காவது நிம்மதியாகக் காலம் கழித்துவிட்டு வரவேண்டுமெனத் தீர்மானித்து, எங்கே செல்வதென யோசித்தோம். செலவும் சொற்பமாயிருக்கவேண்டும்; இடமும் நன்றாயிருக்கவேண்டும். அப்படியானால் சென்னைக்குத்தெற்கே 50 மைல் தூரத்திலுள்ள மஹாபலிபுரம்தான் சரியான இடம் என்று புறப்பட்டோம். நாங்கள் மொத்தம் இருபது பேர் அன்று ரயில் ஏறினோம். திருக்கழுக்குன்றத்திலிருந்து மஹாபலிபுரம் சுமார் 7 மைல்தான். அன்று மப்பும் மந்தாரமுமாக இருந்தபடியால் சூரியனின் உக்கிரம் அதிகமாயில்லை.

மாமல்லன் என்ற அரசன் பெயரைக்கொண்டுதான் மாமல்லபுரம் என்று அக்காலத்தில் இந்த இடம் அழைக்கப்பட்டு வந்தது. ஆனால் நாளாக ஆக 'ஹாமில்டன் பிரிட்ஜ்' பார்பர்ஸ் பிரிட்ஜ் ஆக மாறியது போல இதுவும் மாவல்லிவரம், மஹாபலிபுரம் என்றெல்லாம் மாறிவிட்டது. அவன் காலத்தில்தான் இந்த இடம் ஒரு பெரிய துறைமுகப் பட்டணமாக மாறியது. அவன் காலத்தில்தான் இந்தச் சிற்பங்களெல்லாம் செதுக்கப்பட்டன. தனித்தனி சிலைகளாக அடித்து வைத்தால் பின்னால் வரப் போகும் ஆங்கிலேயர்கள் அவைகளைத் தங்கள் 'மியூஸி' யத்தில் பத்திரமாய் வைத்திருக்கிறோம் என்று

தூக்கிக்கொண்டு போய் விடுவார்கள் என்றெண்ணியோ என்னமோ, பெரிய பெரிய குன்றுகளிலேயே செதுக்கிவிட்டான்.

இதோ நாமும் அந்த இடத்திற்கு வந்து விட்டோம். "ஹா! இவைகள் என்ன ரதங்கள் மாதிரி இருக்கின்றனவே!" என்றார்கள் நண்பர்கள் ஆச்சரியத்தோடு.

ஆம். ரதங்கள் தான். இங்கு இந்த ஐந்தும் சேர்ந்தாற்போ லிருப்பதால் பஞ்ச பாண்டவர்களின் ரதம் என்று சொல்லுகிறார்கள். இதில் பெரிதாயிருக்கிறதே, இது தருமருக்கென்றும், அதற்கடுத்தபடியாயிருப்பது வீமனுக்கென்றும், முறையே சொல்லுகிறார்கள். விக்கிரகங்கள் வைத்துப் பிரதிஷ்டை செய்வதற்காக மூலஸ்தானத்தில் இடமெல்லாம் ஏற்படுத்தி யிருக்கிறதைக் கவனித்தால், இவை முற்றுப் பெறாத சிறு சிறு ஆலயங்கள் என்றே தோன்றுகின்றன.

இதோ இதில் மாத்திரம் கணேசர் விக்கிரகத்தை வைத்திருக்கிறார்களே! இந்த ரதம் மாத்திரம் மாமல்லனின் இரண்டாவது புதல்வனால் நிர்மாணிக்கப்பட்டது என்று சரித்திரம் கூறுகிறது. அக்காலத்தில் இந்த இடத்தில் ஒரு பெரிய குன்று இருந்திருக்க வேண்டும். அதை 5 ரதங்களாகச் செதுக்கி யிருக்கிறார்கள். ரதங்கள் முற்றுப் பெறாதிருந்த போதிலும், இந்தப் பெரிய ரதத்தில் இரண்டடுக்கு மெத்தையும், அதற்கு நடத்திச் செல்லும் வழியும் இருக்கின்றன. என்னே அவர்களின் கற்பனே, மனேதிடம்!

இந்த ரதங்களுக்கும் மத்தியில் தனியாய் நிற்கும் இந்த சிம்ஹத்தைப் பாருங்கள். எவ்வளவு உயரம்! தாவி ஏறி அதன் முதுகில் கூட அமர முடிய வில்லேயே! பெரிய ரதத்தின் அடியில் படுத்திருக்கும் காளையைச் சற்றுக் கவனியுங்கள். தீனியை அசை போட்டுக் கொண்டபடியே படுத்திருக்கிறது.

இதுதான் அக்காலத்திலிருந்த (லைட் ஹவுஸ்) கலங்கரை விளக்கம். இதற்கென்று தனியாக ஒரு ஸ்தூபியைக் கட்டாமல், இங்குள்ள குன்றுகளிலெல்லாம் உயர்ந்த இக் குன்றையே உபயோகப்படுத்திக் கொண்டிருந்தது, அவர்களுடைய அறிவு விலாசத்தைக்காட்டுகின்றதல்லவா? ஆனல் இக்குன்றில் அந்த நாளில் சாதாரண எண்ணெய் விளக்குத்தான் எரிந்திருக்கும். இப்போதோ நாகரீகம் முதிர்ந்துவிட்டபடியாலும், இதையடுத்துள்ள நீர்ப் பாகங்களெல்லாம் பாறைகள் மலிந்திருப்பதாலும் தூரத்தில் செல்லும் கப்பல்களுக்கு எச்சரிக்கை செய்யும் பொருட்டு இதோ பக்கத்தில் புதிதாக ஒரு லைட் ஹவுஸ் நிற்கிறது. இதுவும் சென்னையிலுள்ள லைட் ஹவுஸ் உயரமேயிருக்கிறது. இதில் பார்க்கவேண்டியது விசேஷமாக ஒன்றுமில்லே.

இதிலிருந்து பாறைகளினூடே வளைந்து வளைந்து செல்லும் ஒற்றையடிப் பாதையில் இன்னும் சற்று தூரம் போகலாம். இது தான் ராமாநுஜர் மண்டபம் என்பது. குன்றைக் குடைந்தெடுக்கப்பட்ட இம் மண்டபத்தின் இருபக்கத்துச் சுவர்களையும்

பாருங்கள். வலப்புறத்தில் துர்க்கா தேவி மகிஷாசுரனை வதம் செய்யும் காக்ஷி. அடேயப்பா, என்ன கோரம்! எவ்வளவு பயங்கரம்! அவள் கண்களிலிருந்து கோபாக்கினி எப்படி வீசுகிறது! பக்கத்தில் நெருங்கக்கூட பயமாயிருக்கிறதே! வில்லின் நாணை இழுத்து அம்பெய்யும் அவள் புஜத்தைப் பாருங்கள். என்ன பராக்கிரமம்! அவளுடைய மற்ற மூன்று கரங்களிலிருக்கும் ஈட்டியும், வாளும், கேடயமும் எப்படிப் பிரகாசிக்கின்றன.

அவள்தான் அப்படியென்றால், அவள் சவாரி செய்யும் அந்தச் சிங்கம்தான் எப்படி யிருக்கிறது? ஆனால் இதை யெல்லாம் பொருட்படுத்தாமல் முன்னேறி வருகிறானே, அந்த அசுரனுக்குத்தான் என்ன தைரியம்! அவன் வாகனமாகிய அந்தஎருமையின் கொம்புகளிலுள்ள வரந்தைகூட அப்படியே இருக்கிறது! கண்களின் முழிகள்கூட உருளுகிறதுபோலிருக்கிறது!

இடது பக்கத்துச் சுவரில் திருமால் பள்ளிகொண்டிருக்கிறார். லக்ஷ்மி கால்வருடிக் கொண்டிருக்கிறாள். எதிர்ச்சுவரிலிருக்கும் துர்க்கையின் கொடூரக்கோலமெங்கே? இவருடைய சாந்தமெங்கே? இவ்விரண்டையும் ஒரே சிற்பிதான் செய்தான் என்று நம்ப முடியவில்லை.

அதையடுத்து இருக்கும் இது தான் திருமூர்த்திமண்டபம். பிரமாவும் விஷ்ணுவும் இருபக்கத்தில் நிற்க, சிவன் மத்தியில் நிற்கிறார்.

இன்னும் ஒரு பர்லாங்கு தூரம் செல்லுவோம். இதோ கிருஷ்ணன் மண்டபம். இதுவும் பாறையைக் குடைந்தெடுக்கப் பட்டதுதான். கோவர்த்தன கிரியைக் குடையா கப்பிடித்து நிற்கிறான் கண்ணன். கோபாலர்கள் எல்லாம் தங்கள் பெற்றோர்களுடன் அதனடியில் நிற்கிறார்கள். கண்ணனின் புன்னகையால், அவன் கன்னத்தில் ஏற்பட்டிருக்கும் குழியைக் கவனியுங்கள். அதோ அந்தப் பசுக்களெல்லாம் அவனை ஏன் அப்படி அண்ணாந்து பார்க்கின்றன? அவற்றின் கழுத்தில் தொங்கும் மணிகளின் நாக்குகள்கூட அசைகிறது போலிருக்கிறது. கோவர்த்தனகிரி பெரிய குன்றல்லவா? அதை இந்த மண்டபத்திற்குள் அடைக்கவேண்டாமா? அதனால் தான் இம்மண்டபம் மற்றவற்றைக் காட்டிலும் பெரிதாயிருக்கிறது போலும்.!

இன்னும் பார்க்க வேண்டியது அநேகமிருக்கிறது. இந்தப்பாறை தான் எவ்வளவு உயரம், எவ்வளவு அகலம்! அக்காலச் சிற்பிகள் இதைப் பயன் படுத்திக் கொண்டிருக்கும் முறையைப் பாருங்கள். பாறையில் ஒரு அடியாவது காலியாக இருக்கிறதா? முதல் வரிசையில் அதோ தெரிகிறதே, எலும்புந் தோலுமாய், அந்த உருவம் யாருடையதென்று நினைக்கிறீர்கள்? ஆம். பகீரதன் கடுந்தவம் செய்கிறான். அதனால்தான் அவன் அந்நிலையடைந்திருக்கிறான். ஒட்டிய வயிறு; தோலையும் கிழித்துக் கொண்டு தெரியும் எலும்புகள். இவைகளைத்தான் எவ்வளவு தத்ரூபமாக அச்சிற்பிகள் சித்தரித்

திருக்கிறார்கள்! அவர்கள் கையி லிருந்தது கேவலம் கல் உளியா, அன்றி மந்திரக் கோலா?

அவர்கள் நகைச் சுவையில் எவ் வளவு தூரம் ருசி கொண்டிருந் தார்கள் என்பதற்கு, அதோ பகி ரதனுக்கு நேர் கீழே ஒரு பூனை யும் அவனைப் போல் தவம் செய்வ தாக ஒரு நையாண்டிச் சித்திர மிருக்கிறது பார்த்தீர்களா?

முதல் வரிசையின் கடைசியில் போதி மரத்தடியில் புத்தர்பிரான் யோக நித்திரையிலிருப்பதைப் பாருங்கள். அவர் முகத்தைச் சுற் றிலும் ஜோதி போன்ற ஒரு வளை யத்தை நாம் அச்சுப் பிரதிகளில் காண்கிறோமல்லவா? ஆனால் அதையே இச்சிற்பிகள் அவரு டைய முக பாவத்தில் எவ்வளவு நேர்த்தியாய்க் காண்பித்திருக்கி றார்கள்.

இன்னும் இது போன்ற சித்திரங்கள் ஆங்காங்கே வர் ணிக்க முடியாதபடி மலிந்து கிடக் கின்றன. ஆனால் இந்தப் பெரிய யானை மட்டும் நம் மனதை விட்டு என்றென்றைக்கும் அகலாது. அது தன் துதிக்கையை வளைத்து நிற்கும்போது அதில் ஏற்பட்ட சுருக்கங்களை புகைப் படம் பிடித் தது போலல்லவா காட்டி யிருக் கிறார்கள்!

இனி பாறை மீதேறிச் செல் வோம். இந்தச் சிறு சிறு மண்ட பங்களெல்லாம் ஏன் இப்படிக் காலியாகக் கிடக்கின்றன? ஒவ் வொரு தூணையும் என்ன நேர்த்தி யாகச் செதுக்கி யிருக்கிறார்கள்! இதோ இம்மண்டபத்திற்குள் பார்க்கலாம். முக்காலியில் கம் பீரமாய் அமர்ந்திருக்கிறாரே, இவர் தான் சிம்மவிஷ்ணு. மாமல்ல னின் பாட்டன். அவர் கை சின் முத்திரையி லிருக்கிறது. இரு பக்கத்திலும் நிற்கிறார்களே பெண்கள், அவர்களணிந்திருக் கும் கிரீடத்திலிருந்தே அவர்கள் அவருடைய பட்ட மகிஷிகள் என்று தெரிகிறது. அவர்கள் காதில் தொங்கும் அணிகலன், தற்காலத்தில் நவநாகரீகப் பெண் கள் அணியும் 'டோலக்'குகளைப் போலத்தானிருக்கிறது. காலில் மாணிக்கப் பரல்கள் திணித்த பாதசரமா! அக்காலத்திலேயே நாகரீகம் எந்த நிலையிலிருந்த தென்பதற்கு இதைக் காட்டிலும் வேறென்ன சாட்சி வேண்டும்?

இவர் யார்? தன் ராணியை இடது கையில் பிடித்துக்கொண்டு வலக்கரத்தால் ஏதோ தூரத்தில் ஒன்றைச் சுட்டிக் காட்டுகிறாரே. ஓஹோ, அங்குத் தெரியும் ஆல யத்தையா காட்டுகிறார்! இதோ கீழே ஏதோ எழுதியிருக்கிறதே! "பெருமை தங்கிய ஆதிராஜன் மஹேந்திரவர்மன்." ஓ, மாமல்ல னின் தந்தை! இவ்வளவெல்லாம் செய்த அந்த மாமல்லன்—தன் தந்தைக்கும் பாட்டனுக்கும் மண் டபங்கள் நிர்மாணித்து அதில் அவருடைய உருவங்களைச் செதுக் கச் செய்த அவன்—தனக்கென ஒரு மண்டபத்தை நிருவி, தன் உருவத்தைச் செதுக்கச் செய்ய வில்லையே! என்னே அவனுடைய பெருந்தன்மை!

அநேகமாய், எல்லாம் பார்த்து விட்டோம். இதென்ன இவ்வளவு பிரம்மாண்டமானபாறை? யாரோ தூக்கிவைத்த பந்துபோலிருக் கிறதே. அதனடிப்பாகம் 4 கஜ

சுற்றளவுள்ள இடத்தில் எப்படி நிற்கிறது? மந்திர சக்தியா? நாம் எல்லாம் சேர்ந்து புரட்டி கீழே உருட்டிவிடலாம் போலிருக்கிறதே. ...... முடியாது. பிரமன் தன்னால் சிருஷ்டிக்கப்பட்ட சிற்பிகள் சிருஷ்டித்த இச் சிற்பங்களைக் கண்டு களிக்கும் மாந்தர்கள் எங்கே தன்னை மறந்துவிடப் போகிறார்களோ என்று கருதி, தன்னை இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்திக் கொள்ளுமாறு செய்த தந்திரம்போலிருக்கிறது இப்பாறை.

அவ்வளவுதான். இனி கடற்கரையை நோக்கிச் செல்வோம். 2 பர்லாங்குதான். பாறையை வெட்டிநிர்மாணித்த ரதங்களையும், குன்றைக் குடைந்தெடுத்த மண்டபங்களையும், கற்களில் செதுக்கிய சிற்பங்களையும் இதுவரை கண்டு களித்தோம். கடலின் அலைகளை அடிக்கடி கட்டித் தழுவிக் கொண்டு நிற்கிறதே, இந்த ஆலயத்தைப்பார்க்கலாம். கற்களை ஒன்றின்மேலொன்றாக அடுக்கிக் கட்டும் ஓர் நுட்பத்தைச் சிற்பிகள் தமிழகத்திற்கு முதன் முதலாக இவன் காலத்தில்தான் கற்பித்தார்கள்.

சுற்றுப் பிரகாரம், கர்ப்பக்கிரஹம், அதன் மேல் சிகரம், ஸ்தூபி, முதலிய அபிவிருத்திகளை இதில் காண்கிறோம். பிரதக்ஷணமாகச் சென்று ஆலயத்திற்குள்ளே நுழைவோம். மதில்களில் என்ன வேலைப்பாடுகள் கொண்ட ஓவியங்கள்! 'காம்ப வுண்ட்' சுவரில் வரிசையாக அமர்ந்திருக்கும் நந்திகளின் அழகை வர்ணிக்க யாரால் முடியும்? சரி, உள்ளே நுழைந்தால் ஒரே இருட்டாயிருக்கிறதே! நல்லவேளை, 'டார்ச்' இருக்கிறதா, அதோ பள்ளிகொண்டிருக்கும் உருவம் யாருடையது? இதோ வருகிறானே யாரோ, அவனைக் கேட்போம்.

"இது யாருடைய சிலை தெரியுமாப்பா உனக்கு?"

"இதுதானுங்க மஹாபலிச் சக்காவர்த்தி, 3 அடி மண் குடுத்தாரே அவருதான். அதனாலே தான் இந்தஇடத்துக்கு மஹாபலிபுரம் என்கிற பேருகூட வந்துங்க" என்றான்.

"அடே நிறுத்துடா. எவனாவது வெள்ளைக்காரன் வந்தால் அப்படிச் சொல்லி காசு வாங்கிக் கொள். எங்களிடம் உனக்குத் தெரியாத கதையை அளக்காதே" என்று அவனை எச்சரித்தார், எங்களில் ஒருவர். ஆனால் எங்களுக்கும் அந்த உருவம் சரியாய்த் தெரியவில்லை. உள்ளே மூச்சைப் பிடித்துக்கொண்டு வெகுநேரம் நிற்கவும் முடியவில்லை.

இதோ மேலே கோபுரத்திற்கு வழி போகிறது, செல்லலாம். இதென்ன இப்பதுமைகளின் மூக்கெல்லாம் தேய்ந்து விட்டனவே! இவ்வளவு தூரம் ஏறிவந்து யார் இவைகளைச் சிதைத்திருப்பார்கள்? அதோ வருகிறதே, அந்த அலைகள் தான். ஒரு நாளா, இரண்டு நாளா? சுமார் 1300 வருடங்கள் வெய்யிலிலும், மழையிலும், எல்லாவற்றிற்கும் மேலாக இந்தக் கொடிய அலைகளாலும் தாக்கப்படும் இவைகள் கல்லாயிருக்

தாலும் கறைவது இயல்புதானே! அல்லது ரயில்வேக்களில் பழப் பார்சல்களனுப்பும்போது 'கெட்டுப்போகக் கூடியவைகள்' என்ற சீட்டு ஒட்டியனுப்புகிறார்களே, அதுபோல இச் சிற்பங்களிலும் காலத் தச்சன் எழுதிவிட்டான் போலும்! அதோ தனித்து நிற்கிறதே அந்தப் பாறையில் கூட ஒரு ஓவியமா? மஹிஷாசுரன் தன் கையில் ஒரு கோடரியுடன் நிற்கின்றான். ஆனால் இவனும் அலையால் கரைந்து கொண்டே வந்திருக்கிறான். இன்னும் 50 வருடத்திற்குள் முற்றிலும் மறைந்து விடுவான்.

எல்லோரும் அன்று ஒரு நாள் பொழுதை வெகு இன்பகரமாய்க் கழித்துவிட்டு மறுபடியும் சென்னையை நோக்கிக் கிளம்பினோம்.

அன்பர்களே! நம் மூதாதையர்கள் சேமித்து வைத்திருக்கும் அந்த அழியாத கலைப் பொக்கிஷத்தை நீங்கள் போய் ஒரு முறை பார்த்துவிட்டு வரலாகாதா? அவர்களுக்கு நாம் இன்று செய்யும் கைம்மாறு அது ஒன்று தான்!

நீ கொடுக்க வேண்டிய சின்ன பாக்கிக்கு நாலுதரம் வர வச்சுட்டியேப்பா!

பிரமாதமாச் சொல்றீங்களே! உங்க கிட்ட இதை வாங்கறத்துக்கு எத்தனைதரம் நடந்தேன்னு ஞாபகமில்லீங்களா?

"சதைப் பற்றற்ற" காதல்

(கரிச்சான்)

" சரிதான் ஸார், அதெல்லாம் வெறும் கதை. காதல் மனதில் இருப்பது என்பதெல்லாம் சுத்தப் புளுகு. சரீர ஸ்பரிசம் இல்லாமல் காதல் என்று யாராவது சொன்னால் அவன் அயோக்கியன், அல்லது —" என்றார் ஹெல்த் இன்ஸ்பெக்டர்.

" அவ்வளவு ஓங்கி அடித்துவிடாதீர்கள். உமது கட்சி பலத்த கட்சி என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். டால்ஸ்டாய் என்ற மகான் கூட உங்கள் பக்கமாகத்தான் பேசுகிறார். ரொம்பப் பச்சையாகக் கூடச் சொல்லிவிட்டார். ஆனால் நமது மனநிலையையும் உணர்ச்சியை யும் வைத்தே உலகம் பூராவையும் தராதரமின்றி அளந்து விடுவது சரியன்று. சரீர சம்பந்தமில்லாத காதலும் இருக்க முடியும். இருந் திருக்கிறது" என்று ஓவர்சியர் சொன்னார்.

" இருக்க முடியும் என்பதை நான் ஒப்புக்கொள்ளவே முடியாது. இருந்திருக்கிறது என்று நீங்கள் சொன்னால், முடியாமைதான் அதற் குக் காரணமாக இருக்கவேண்டும்."

" எனக்கும் கொஞ்சம் அறிவிருக்கும் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு நீங்கள் பேசவேண்டும்."

" ஸார், ஸார் உங்களுக்கு அறிவில்லை யென்று யார் சொன்னது? ரொம்ப கோபித்துக் கொள்ளுகிறீர்களே?"

" கோபமே இல்லை. 'இருந்திருக்கிறது' என்று நான் சொன் னால், வேறு காரணங்கள் இல்லாமல், நாம் தர்க்கிக்கிற முறையிலேயே தான் இருந்திருக்கிறது என்று நான் என் மனதில் திருப்தி யடைந்து தானே சொல்லுவேன்? அதை நீங்கள் கவனிக்கவேண்டாமா?"

இரவு எட்டுமணி. ஹெல்த் இன்ஸ்பெக்டர், லோகல் பண்டு ஓவர்சியர், தாலூகா ஆபீஸ் ஹெட்கிளார்க், எல்லோருமாக ஹோட்ட லில் சாப்பிட்டுக்கொண்டிருந்தபொழுதுதான் அந்தப்பேச்சு வந்தது.

அன்றைய பத்திரிகையில் ஒரு விசேஷமான செய்தி வந்திருந் தது. சென்னையில் இரு காதலர்கள் தங்கள் இஷ்டப்படி கலியாணம் ஆகாது என்று தெரிந்ததும் விஷம் உண்டு மாண்டார்கள். அதைப் பற்றிப் பேசிய பேச்சிலிருந்து தர்க்கம் கிளம்பி வளர்ந்து கொண்டே போயிற்று. கடைசியாகக் காதல் தத்துவத்தைப்பற்றியே பேச்சு திரும்பிவிட்டது.

மூன்று சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் இலக்கியகர்த்தர்களுக்கும் மனோதத்துவ சாஸ்திரிகளுக்கும் மட்டும் உரிமையான ஒருவிஷயத்தைப்பற்றிப் பேசுவதென்றால் அது விசேஷம்தானே?

நானும் அவர்களுக்கிடையே ஒரு சிறு தாலூகா குமாஸ்தாவாக உட்கார்ந்து கொண்டு அவர்கள் பேசினதைக் கேட்டுக் கொண்டிருந்தேன். சர்க்கார் தஸ்தாவேஜுகளை வருஷக்கணக்காகப் பார்த்துப் பார்த்து மனம் மரத்துப் போயிருந்ததும்கூட அவர்கள் காதலைப்பற்றி அலசி அலசிப் பேசினது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. நான் கலாசாலையிலிருந்து வெளியேறி வேலைக்கு வந்த சமயம். என் மனம் இன்னும் உணர்ச்சியற்றுப் போகவில்லை. சம்பாஷணை அப்படியே என் மனதில் பதிந்துவிட்டது.

"எப்படி ஸார் இருக்க முடியும்?" என்று ஹெல்த் இன்ஸ்பெக்டர் கேட்டார்.

".என் இருக்க முடியாது என்று நான் கேட்கிறேன். பிடிவாதத்திற்கு எங்காவது தர்க்கத்தில் முடிவுண்டா?" என்று ஓவர்ஸியர் கொஞ்சம் குத்தலாகப் பேசினர்.

"பிடிவாதம் இல்லை. மனித ஸ்வபாவத்திற்குப் பொருந்தாததான ஒரு விஷயத்தை நீங்கள் 'உண்டு' என்று சொன்னால், அது பிடிவாதமா, நான் சொல்லுவது பிடிவாதமா?"

"மனித ஸ்வபாவத்திற்குப் பொருந்தாதது என்று யார் நிர்த்தாரணம் செய்திருக்கிறார்கள்?"

"மனோதத்துவ சாஸ்திர ஆராய்ச்சியாளர்கள்!"

"அவர்கள் பொதுவாக நிர்ணயிக்கிறார்கள், நீங்கள் சொல்லுவது போல வைத்துக் கொண்டாலும். அதற்கு மாறுபாடான விசேஷ பிரகிருதிகள் இல்லையா என்ன?"

"அவர்களைப்பற்றிப் பேச்சில்லை. அவர்களுக்கும் வாழ்க்கைக்கும் என்ன சம்பந்தம்?"

"இந்த சம்பந்தம்தான் — அவர்கள் வாழ்க்கைக்கு வழி காட்டியான கலையில் இருக்கும் லட்சிய பிரகிருதிகள்."

"கலை யென்ன நபும்ஸகவாதமா?"

"ஆண்மைவாதமுமல்ல. வாழ்க்கையின் உன்னத அம்சங்களைச் சித்தரிப்பது."

"உங்களுடைய 'சதையுணர்ச்சி' யற்ற காதல் அந்த ரகத்தைச் சேர்ந்ததோ? ஆமாம், பின் ஏன் அந்தக் காதலுக்கு ஆணும் பெண்ணும் வேண்டியிருக்கிறது?"

"சதை என்ற சேற்றில் முழுக அல்ல; அதற்குமேலே போய் தாமரையைப்போலத் தலையெடுத்து நிற்க. இரவும் பகலும் போலவும், துக்கமும் சுகமும் போலவும் வேற்றுமை கொண்டிருக்கும் ஸ்திரீ

புருஷ ஸ்வபாவங்களை ஒன்றாக்க! அவை ஒன்றாக உடல்கள் சேரவேண்டிய அவசியமில்லை."

"என்ன என்ன?"

"இரண்டு வகைப் புஷ்பங்களிலிருந்து கிளம்பும் இருவிதமான வாசனைகள் எப்படிக் காற்றில் கலந்து ஒன்றாகின்றனவோ அப்படி இரண்டு உள்ளங்களும் உணர்ச்சியில் கலக்கின்றன. அந்த சங்கமத்தால் இரு உள்ளங்களும் கலப்புணர்ச்சிகள் பெறுகின்றன—பிரயாகையில் கங்கை ஜலத்தை யமுனையும் யமுனை ஜலத்தை கங்கையும் பெறுவதுபோல."

"அதெல்லாம் வெறும் கவிதைபோல இருக்கிறது. நடைமுதல் உண்மைக்குப் பொருத்தமல்ல."

"அப்படிச் சொல்லப்போனால் நடை முதல் உண்மை கூட உண்மையல்ல; உண்மை அதற்கும் கீழானது."

"எப்படி?"

"எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் ஆடவருக்கு சதையுணர்ச்சி ஏற்படுகிறது என்பதுதான் பட்டவர்த்தமான உண்மை. நீங்கள் நடைமுதல் உண்மை என்று கூறுவது தாயிடமும், சகோதரியிடமும், பிறர்மனைவியிடமும் அவ்வுணர்ச்சிஏற்படக்கூடாது என்று மனிதன்ஏற்படுத்தியிருக்கும் கட்டுப்பாடு—ஏற்பாடு; அதற்கு மேற்படியாக லட்சிய உலகமும் ஒரு ஏற்பாடு—நடை முதல் உண்மைக்கு மேற்போன நடைபெறவேண்டிய உண்மை. எதற்காகச் சொல்லுகிறேன்! காதலியிடம்மட்டும்தான் சதையுணர்ச்சி ஏற்படவேண்டும் என்று நீங்கள் சொல்லுவது ஸ்வபாவமல்ல. அது இயற்கை யல்ல. விலங்கு பட்சிகளிடமும் சில அநாகரிகமான புராதன ஜாதியினரிடமும் நாம் காண்பதுபோல எல்லாப் பெண்களையும் மனிதன் கொள்ளக்கூடாது; மனைவியென்றும் காதலியென்றும் ஒருவளை வரித்தல் வேண்டுமென்றும் ஏற்பட்டிருப்பது கலை. அவ்வகைப் பெண்ணின் சேர்க்கைதான் இன்பம் என்பதும் அதன் கோட்பாடுதான்"

"அப்புறம்?"

"அதற்கு மேற்போன கோட்பாடும் உண்டு; காதலுக்கு உடற்சேர்க்கை கூடத் தேவையில்லை. மனச் சேர்க்கை போதும் என்பதுதான் அது. புனித உள்ளங்களுக்கு அதே பெருத்த கலவியின்பந் தரும். ஆண்டாள் அப்பேர்ப்பட்ட இன்பம் பெற்று தானே இளகி இளகிப் பாடினாள் தன் பேரின்பக் கலவியைப்பற்றி?"

"அது வெறி, பித்து, ஸ்வபாவமல்ல!"

"எது வெறி, எது ஸ்வபாவம்! ஸ்வபாவம் என்பதால் ஒன்று உயர்வா? வெறியென்று ஒன்றைத் தாழ்த்திக் கூற நமக்கு என்ன அதிகாரம்?"

"விபரீதமானது வெறி!"

"வெறி நிலையிலிருப்பவர்களுக்கு ஸ்வபாவம் என்று நாம் கருதுவது விபரீதமாகத் தோன்றுதா?"

"அவர்கள் ஒரு சிலர் தானே? பெருவாரியான மனித சமூகத்தில் தென்படுவது தானே ஸ்வபாவம்."

"அதை நான் முன்பே சொன்னேனே நீங்கள் ஸ்வபாவம் என்பதே ஒரு விதியின் கீழ் ஏற்பட்டது தானே?"

"நீங்கள் மனித சுபாவத்தையே ஒரு செயற்கை என்கிறீர்களா?"

"சந்தேகமில்லாமல் மனித சுபாவம் யுகம் யுகமாக சமூகக் கட்டால் கட்டப்பட்டது. மிருக சுபாவம்தான் மனிதனுக்கு இயற்கையானது."

"நீர் என்னென்னமோ சொல்லுகிறீர். அதையெல்லாம் நான் ஒப்புக்கொள்ளத் தயார் இல்லை. அதிருக்கட்டும், நீர் என்ன சொல்லுகிறீர் இப்பொழுது?"

"காதலுக்கு சதைப்பற்று முக்கியமல்ல. சொல்லப்போனால் அருகாமைகூட அதற்குத் தேவையில்லை. அதனால்தான் பிரிவாற்றுமையில் காதல் வளர்கிறது. 'விரகே பிரேம ராசீபவதி' என்று காளிதாஸன் கூடச் சொல்லுகிறார்."

"பின் ஏன், இந்தக் காதலர்கள் தற்கொலை செய்துகொண்டார்கள்?"

"தங்கள் மன ஒற்றுமைக்கிடையே பிறர் வரக்கூடாதென்றுதான்!"

"நீர் சொல்லுவது எனக்கு அர்த்தமாகவில்லை, நீர் புதிர் போடுகிறீர்."

"புதிர் ஒன்றுமில்லை. பச்சையாகவா சொல்ல வேண்டும்? இவர்களுக்குள் கலியாணம் ஆகிவிட்டால் அவளுக்கு வேறு புருஷன் கட்டாயம் வந்துசேருவான் அல்லவா? அப்பொழுது மன ஒற்றுமை உலைந்துபோகும்."

"நீர் பேசுவது முன்னுக்குப்பின் முரணாக இருக்கிறதே!"

"ஒன்றும் முரண் இல்லை. நீங்களாக நினைத்துக் கொள்ளுகிறீர்கள். சதைப்பற்றால் மட்டும் காதல் ஏற்படுவதில்லை என்றேன், அவ்வளவுதான்."

"சரி, சரி, வேலை கிடக்கிறது தலைக்குமேல். நாளைக்கு ஆபீஸ் இன்ஸ்பெக்ஷன். இதென்ன இழவு தர்க்கம் வேண்டியிருக்கிறது."

"இழவு தர்க்கத்தின் ஸ்வாரஸ்யத்தில் சாப்பிட்ட கை கூட உலர்ந்துபோய்விட்டதே!"

"கூட்டமில்லாத ஹோட்டலாக இருப்பதால் பிழைத்தோம்."

காதல் பேச்சுமுடிந்து, கச்சேரிப் பேச்சு ஆரம்பமாயிற்று. நான் எழுந்திருந்து வெளியே வந்துவிட்டேன்.

* தர்ம தேவதை *

(ஸ ர ஸி)

பீரங்கிகள் முழங்குகின்றன. பூமி அதிர்கிறது. ஈட்டிகள் பாய்கின்றன. புல் பூண்டெல்லாம் கலங்குகின்றன. ஆவேசகோஷங்கள் எழுகின்றன. கைகள் கலக்கின்றன. மண்டைகள் உருளுகின்றன. உறுமல்! ஓலம், உதிர வெள்ளம்! மனுஷ்ய வாழ்வே அங்கு துச்சமாய் மதிக்கப்படுகிறது. சம்ஹாரக் கடவுளுக்கு மனுஷ்யன் நடத்தும் பெரு விருந்து அது! அதுதான் ரணகளம்.

அங்கேயும் தர்மதேவதை நர்த்தன மிடுகிறாள். அது அவளது வீரதாண்டவம். அதோ ஓடுகிறானே ஒரு கோழை; அவனைப் பார்த்து அவள் காறியுமிழ்கிறாள். மனிதனை மனிதன் கொல்லவாவது என்று மயங்கி மனங்குழைகிறானே இதோ ஒருவன்; இவனைக்கண்டு, அவள் எரிந்து நகைக்கிறாள். போர்முகத்திலே ஒப்பாரியாவது! கருணைக்கு அங்கே இடமில்லை—லாப நஷ்ட கணக்குக்கு அங்கே மதிப்பில்லை. யுத்த பூமியிலே, தர்ம தேவதைக்கு ஒரே ஒரு சொரூபம் தான் உண்டு. அது அவளது வீரத் திருமேனியாகும். வீரம் ஒன்றுதான் அங்கே தர்மமாகும்.

* * *

மற்றோர் காட்சி. அலங்கோலமாய் மனிதர் அலக்கணுறுகின்றனர். வானளாவி வட்டமிடுகிறது புகைத்திரள். வெடிக்கின்றன மரங்கள், விழுகின்றன கட்டிடங்கள். கோரத்தீ சூழ்கிறது. அன்னை யொருத்தி அலறுகின்றாள். "என் குழந்தை! ஐயோ! என் குழந்தையைக் காப்பாற்றுவோர் இல்லையா!" என்ற தீனப்புலம்பல். இல்லை! மிஞ்சிவிட்டது! சாத்தியமில்லை. பயங்கர பூதங்கள் நீட்டும் நாக்குகளைப்போல் ஜ்வாலைவீசும் அந்த எரி நெருப்புக்குள்ளே யார் நுழையமுடியும்?

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து ஏங்குகிறார்கள். ஆனால், ஒரு வீரன் அலட்சியமாய்ப் பாய்கிறான். அந்தத் தீக்கோயிலுக்குள்ளே, அவன் பஸ்மமானானோ, திரும்பி வந்தானோ? அதைப் பற்றித் துக்கிக்கவோ, களிக்கவோ நாம் யார்? உயிர் பறிக்கும் வீரர்களை ரணகளத்திலே கண்டோம்; உயிரளிக்கும் வீரனை இங்கு காண்கிறோம். அங்கே ஆவேச வீரம்; இங்கே அருள் வீரம். தர்மதேவதையின் மற்றோர் திருமேனி இது.

* * *

தர்மதேவதையின் ஒரு கண், கருணை; மறுகண், கோபம், ஒரு கை வீரம்; மறு கை தியாகம். ஒரு மூச்சு, அன்பு; மறு மூச்சு,

பகைமை. கருணையும் கோபமும், வீரமும் தியாகமும் அன்பும் ஆவேசமும் அவளிடம் இசையுடன் கலந்து ஒளிர்கின்றன. அவள் தியாகியின் தெய்வம்; வீரனின் தெய்வம். கோழையின் தெய்வமல்ல; சுயநலமியின் தெய்வமல்ல. அவளைச் சூத்திரச் சங்கிலிகளால் தளைக்க முடியாது; சாத்திரக் குடுக்கையிலே போட்டடைக்க முடியாது; சம்பிரதாயச் சோட்டிலே உருட்டிவிட முடியாது.

ஹிருதய பக்குவத்திலே தான் அவள் பிரசன்னமாவாள். உன்னத உணர்ச்சிகள் ஊறும் ஊற்றாக உள்ளம் செம்மை பெற வேண்டும். கல்லினும் கடியதாய் வயிரம் பாய்ந்து, பூவினும் மெலியதாய், மென்மை பெற்று, தன்னல மிழந்து, உயர்லட்சியங்கள் சூழ்ந்த ஹிருதயத்திலேதான் அவள் கோயில் கொள்ளுவாள். வேறு வேறு காலத்தில் அவள் வேறு வேறு ரூபங் கொள்ளுவாள். வேறு வேறு இடத்தில் வேறு வேறு சாத்திரம் செய்வாள். வேறு வேறு சந்தர்ப்பத்தில், வேறு வேறு உணர்ச்சியில் வெளிப்படுவாள். வேறு வேறு மனிதரிடத்தில் வேறு வேறு பணியை வாங்குவாள்.

* * *

அவளுக்கு வேதாந்தமுண்டு. ஆனால், அது ஒரு மனிதனுடைய வாழ்வு தாழ்வை நினையாது, மனித குல பரிணாமத்தையே சுருதியாகக் கொண்டிருக்கும் அவளுடைய லாப நஷ்டக் கணக்கு, வாழ்க்கையின் சூத்திரங்களை மாற்றும் ரஸவாதமாகும். தர்மம் தலை காக்கும். யார் தலையை? உன் தலையையா? அது தானில்லை. அப்படி எதிர்பார்த்து ஏமாறுதே. உன் தலையை அடகு பெற்று, உலகத்தின் தலையைக் காக்கத்தான் தர்ம தேவதை எப்போதும் உன்னை நாடுகிறாள்.

அவள் ஒரு சமயம் சமாதானத்தோடு நம்மிடம் வருவாள்; மறு சமயம் போரைத்தான் கொண்டு வருவாள். சமாதானப் பித்து அவளுக்கில்லை. போர் வெறியும் அவளுக்கில்லை. கோழையின் சமாதானத்தை அவள் விரும்புவதில்லை; கிராதகனின் வீரத்தையும் அவள் நச்சுவதில்லை.

* * *

வான அண்டங்களை யெல்லாம் இயக்கும் ஆகர்ஷண சக்தி போல, மனித குலத்தை, தனி மனிதர்களை, அவர்களறிந்தோ, அறியாமலோ, தர்ம தேவதை, சூத்திரப் பாவைபோல் நடத்திச் சென்றுதான் வருகிறாள். மொட்டை மலரச் செய்யும் இயற்கை விதியைப் போல, மனித குலத்தை விகாசமடையச் செய்து வருகிறாள். அவள். அந்த மூல சூட்சுமத்தை உணர்ந்து கொண்டவன், தர்மத்தைப்பற்றிக் கவலைப்படமாட்டான். தர்ம ஸ்தாபனத்தை நாம் செய்ய முடியாது. தர்மத்தை நம் பக்கத்தில் நாம் இழுக்க முடியாது. ஆப்ரஹாம் லிங்கன் சொன்னாராம். "கடவுள் நம் பக்கத்தில் இருக்கிறாரா, எதிரி பக்கத்தில் இருக்கிறாரா என்பதல்ல கேள்வி. நாம் அவர் பக்கத்திலிருக்கிறோமா என்பது தான் கேள்வி." அதே போல, நாம்தான் தர்மத்தின் பக்கத்தில் நிற்கவேண்டும்.

கலைஞான வரலாறு

(முன் கதைச் சுருக்கம்.)

[கருப்பூர் என்னும் கிராமத்தில் சிவஞான தேசிகன் என்னும் பிராமணன் தன் மனைவியோடு இல்லறம் நடத்திவர, தவத்தன்மையால், தக்க காலத்தில் ஓர் மகனைப் பெற்றனர். அம்மகனுக்கு சுவாமிநாதன் என்னும் பெயரிட்டு, கல்வி பயிற்பித்து அன்போடு வளர்த்து வந்தனர். சகல சாஸ்திரங்களிலும் தேர்ந்தோங்கிய அம்மறைமகன், பத்தொன்பதாம் வயதில் ஞான மேலீட்டினால், தாய் தந்தையர் செய்வித்த மண ஏற்பாடுகளை வெறுத்து, பெற்றோர் அறியாமல் முனிவற்கிடமான வனத்தை யடைந்து, அங்கொரு முனிவரையடுத்து, ஞான உபதேசம் உபதேசித்தருளும்படி அவரை வேண்டினன். முதலில் முனிவர் அவனைத் தடுத்து இல்லறத்தினின்றும் நற்கதி அடைவதற்கு மார்க்கமுண்டு என பல உரைத்தும், துறவறத்தையே அம்மறைமகன் வேண்ட, முனிவரும் ஞானம் உதயமாகும் சில உபதேசங்கள் செய்து தனது இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றார். இது இப்படியிருக்க, மகன் வரவைக் காணாத தாய் தந்தையர்கள், தவித்துத் துயரில் ஆழ்ந்து, தமது வீட்டுக்கோயிலில் உள்ள விக்ரக வடிவமான உமாதேவியாரின் பாதங்களில் வீழ்ந்து துதித்துப் பிரலாபித்துப் பின்னும் சில புகல்வாராயினர்.

சிவஞான தேசிகரும் அவரது மனைவியாரும், தங்கள் மகனது பிரிவாற்றாமல் சோகமுற்றனர். எனினும் ஒருவாறு தேறி, தங்கள் இல்லத்தை விடுத்து, மகனைத் தேடி, வனவழி சென்றனர். வனவழியில் நெடுந்தூரத்தில், ஆசிரமம் ஒன்று அவர்களுக்குத் தென்படவே, அங்கு சென்றனர். அந்த ஆசிரமத்தில் எழுந்தருளியிருந்த முனிபுங்கவர், வந்தடைந்த சதிபதிகளின் மனதைத் தேற்றுவதற்காக, முனிவர் பெருமானான அகஸ்திய மாமுனி, உபதேசம் செய்ததை, தேசிகருக்கும் அவரது மனைவியாருக்கும் எடுத்துச் சொல்ல விருப்பங் கொண்டு, சிலவற்றைச் சொல்லுகின்றார்.]

அகத்தியன் வரவை அறிந்த எம்பெருமான், அம் முனிவனை நோக்கி "முனிபுங்கவ, வருக, விடைபெற்றும் உமது இருப்பிடம் போகாமல் பின்னும் நம்மை அடுத்து வந்த காரணம் யாது? புகல்வாயாக!" என்றனர்.

பரமேசுவரர் திருவாய் மலர்ந்தருளியதைக் கேட்ட முனிவர், பரமேசுவரரையும், பார்வதிதேவியாரையும் பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து, புறத்தில் நின்று சில சொல்வாராயினர். "காலகண்டத்தையுடையவரே! தேவரீருடைய கிருபாகடாட்சத்தைக் கொண்டு இக் கலியுகத்தில் தோன்றிவரும் மானிடர்களுக்கு இல்லற தருமத்தின் தன்மையை அடியேன் அரிய தமிழில் சொல்லுவதற்குப் பிரியப்பட்டுளேன். ஆனால் இல்லறச்செயலை அனுபவத்தால் அறிந்தேன் இல்லை.

தற்கான படிப்பினைத் தங்களால் அறிந்து இயற்றுதற்கு இன்புற்று பின்னும் இங்கு வந்துளேன்" என்று துதித்தனர்.

துதிக்கும் முனிவனை பரமேசுவரர் நோக்கி "முனிவ, நின் மனம் போல் ஆகுக. எதிரில் தோன்றும் ஞானத்திரையை ஒரு கடிகை காண்பாயாகில், கலியின் போக்கில் மாயவலையில் மானிடர்கள் கட்டுண்டு மடியுந் தன்மையை அறிவாய். பின்னும் நமதிறைவி இமாசல மன்னனின் புதல்வியாய் தோன்றிய காலத்தில் ஜயவதி-குணபதி என்னும் சதிபதிகளின் வாழ்நாளில் இல்லறத்தினின்றும் மோக்ஷம் அடைந்த தன்மையையும் சில காண்பாய். இதனைக்கொண்டு இல்லற தருமம் என்பது யாதென்றும், ஆங்கு மாயையால் நேருந் தீங்குகளையும் நன்கறிவாய். இச்செயல்களைக்கொண்டு நின் மனோபாவத்தை முடிப்பாயாக" என்றருளிச் செய்தனர்.

பின் முனிவர் தேவனைப்போற்றி, எதிரில் தோன்றும் ஞானத் திரையை ஒரு கடிகை மட்டும் நெறியோடு உற்று நோக்கிய வண்ணமிருக்க, நடந்ததாக, இனி நடக்கப்போகும் கலியுகத்தின் இல்லறத்தார்களின் நாடகமெல்லாங் கண்டு சிலவற்றிற்கு மகிழ்ந்தும், சிலவற்றால் சோர்வுற்றும் தயங்கி நிற்கும் அகத்தியனை பரமேசுவரர் நோக்கி, "முனிவ, கலியின் தன்மையைக் கண்டனையோ? தியக்கம் ஏன்?" என்றார்.

"சுவாமி! என்ன புகல்வேன்? ஐயோ! மாய வலையில் கட்டுண்டு, மானிடர்கள் கிடந்தழியும் தன்மையைக் காணில் மனம் பதைக்கின்றது. ஆயினும் தேவியார் அருளைப்பெற்று, ஜயவதி—குணபதி என்னும் சதிபதிகள் நடத்திய வாழ்நாள் மெச்சத்தக்கது. ஆ... அவர்களின் கற்பும், சாந்தமும், பக்தியும் தீரமும் தியாகமும் என் புகல்வேன்! தேவாதி தேவ, தங்கள் அருளால் நான் கண்ட இக் கலியுகத்தின் பூதலக்காக்ஷியை முற்றும் பேச என்னால் இயலுமோ? அதில் சில உரைக்கவும் நினதருளைக் கோருகிறேன்" என்று முனிவர் துதித்தார்.

பரமன் "நின்மனம் போலாகுக" என்று ஆசீர்வதித்தருளுதலும், முனிவர் விடை பெற்றுப் பொதிகைக்கேகி, காசிப முனிவருக்கு கைலையில்தான் கண்ட காக்ஷிகளை முற்றும் புகன்று தேவியார் மலையறையன் மகளாய் அவதரித்தது முதல் தொடர்ந்து இல்லறச் செயலையும், அம்முனி புங்கவருக்குப் புகன்று வந்தார். "அக்காலையில் நாமும் காசிப முனிவருடன் உற்றிருந்தோம். ஆதலின் அதிற்சில உங்கட்குச் சொல்லுகின்றேன். கேட்டு வருவீராக" என்று முனிவர், களைப்பினின்றும் தெளிந்த சிவஞான தேசிகருக்கும் அவர் மனைவியாருக்கும் சொல்லுவதற்குத் தொடங்கினர். அவர்களும் மகன் பிரிந்த சோகம் ஒருவாறு நீங்கி, அமைதியுடன் கேட்டனர்.

முனிவர், "தேசிகரே! முன் ஒரு காலத்தில் கைலாய கிரியில் சகல தேவர்களும் பணிய திருக்கோலங் கொண்டு எழுந்தருளியிருந்த சிவபெருமானை உமாதேவியார் துதித்து, "சுவாமி!

தேவரைத் துதியாத தக்கன் மகள் என்னும் காரணமாயுதித்த, தாக்ஷாயணி என்னும் பெயரையும், அக் கொடியோன் போஷித்த உடலையும் மாற்ற விரும்புகிறேன். தங்களின் மனம் யாது?" என தேவி விளம்ப, அதற்குச் சிவபெருமான் "மாதே! இமாசல மன்னனை மலையறையன் உன்னைப் புதல்வியாகப் பெற மாதவஞ் செய்து கொண்டு வருகின்றனன். அவனிடம் சென்று, குழந்தையாக உதித்திருதி. உரியகாலத்தில் யாம் வந்து மணஞ் செய்து அழைத்து வருவோம்" என பரமேசுவரர் உரைத்தார்.

அதற்கிணங்கி உமாதேவியார் ஹிமவத்கிரியை யடைந்து இமாசல மன்னன் தவஞ்செய்யும் வனத்தொரு புரத்தினுள்ள தடாகத்தில் செயற்கையால் உற்பவித்த பெரிய தாமரை மலரின்மீது தேவி உதித்தருளினர்.

இது இப்படி யிருக்க, சிவஞான தேசிகரின் புதல்வனுன சுவாமிநாதனை, முனிவர் தனது ஆச்ரமத்திற்கு அழைத்துச் சென்று, பசிப்பிணி நீக்குதற்கான சில உணவுப்பொருள்களை ஈந்து புசிக்கச் செய்து, தனது மாலைக்கடனை முடித்துவந்து, "குழந்தாய்! நீ இங்ஙனம் கிடந்து நித்திரை செய்து இவ்விரவைக் கடக்கக் கடவாய்" என்று உரைத்து தனது அரிய ஆசனத்தில் அமர்ந்து யோக நித்திரையில் ஆழ்ந்தனர்.

மறுநாள் அருணோதய காலத்தின் முன் முனிவர் யோகத்தினின்று எழுந்து சுவாமிநாதனையும் அழைத்துக்கொண்டு மடுக்கரைக்கேகி காலைக்கடன்களை முடித்து, சிறு ஆகாராதிகளை உட்கொண்டு, தமது பன்ன சாலையை அடுத்து இருவரும் தனித் தனி ஆசனத்தில் அமர்ந்தனர்.

பின்னர் சுவாமிநாதனை முனிவர் நோக்கி, "குழந்தாய்! முன்தினம் புகன்றவையாவும் நன்குணர்ந்தனையோ? இன்னும் அம்மானிட ஜனனத்தினின்றும் கடைத்தேறி, ஞானநிலையை அடைதல் வேண்டுமாயின், உன்னை யார் என்று முதலில் தெரிந்துகொள்ளல் வேண்டும். நமது தேகம் மிகப்புனிதமானதென்று அறிந்தவுடன், மாயை விலகிப்போம். மாயை நீங்கி இச்சரீரம் நஷ்டமாகாது. நீடிப்பதற்கான வகையைக் கையாளுதல் வேண்டும். அரிய இம்மானிட தேகத்தையும் ஜீவனையும் நட்டஞ்செய்வதற்கு முதற்காரணங்கள் யாதெனில், அகங்காரம், ஆகாரம், நித்திரை, பயம் ஆகியவாம். ஆதலின் இவைகளில், சதாகாலமும் சர்வ ஜாக்கிரதையோடு நடந்துகொள்ளல் வேண்டும்."

"பொதுவாக இவைகளில், நெருங்கிப் பழகிவரின் இச்சரீரம் அதிசீக்கிரத்தில் அழிந்துவிடும். ஆதலின் தேகம், இரத்தம், சுக்கிலம், ஆன்மா இவைகளைப் பக்குவப்படுத்தி ஆத்ம ஞானத்தையடைந்துவரும் பொழுது இச்சரீரம் மகா உன்னதமானதென்று உண்மை விளங்கும்" என்றார்.

(தொடரும்)

‘பாரத தேவி’

விளம்பர விகிதம்

உட்பக்கங்கள்

	ஒரு தடவைக்கு 1 பக்கம்	½ பக்கம்	¼ பக்கம்
	ரூ.	ரூ.	ரூ.
ஒரு தனி விளம்பரம்	30	16	9
13 தொடர்ந்த விளம்பரங்கள்	27	14	8
26 தொடர்ந்த ,,	24	13	7
52 தொடர்ந்த ,,	20	11	6

¼-பக்கத்துக்குக் குறைந்த விளம்பரம் அங்கீகரிக்கப்படமாட்டாது.

ராப்பர் பக்கங்கள்

உள் ராப்பர் ஒரு கலர் விளம்பரத்திற்கு 25% அதிகம்.
கடைசி பக்கம் இரண்டு கலர் ,, 50% அதிகம்.

முன்பக்கத்தில் விளம்பரம் செய்யப்படமாட்டாது.
ராப்பர்களில் முழுபக்க விளம்பரந்தான் ஒப்புக்கொள்ளப்படும்.

குறிப்பு :—சினிமா முதலிய தமாஷ் விளம்பரத்திற்கு ஷை விகிதத்தில் 10% குறைக்கப்படும்.

ஆபீஸ் :—31, பிராட்வே, சென்னை.

பாங்க் ஆப் ஹிந்துஸ்தான், லிமிடெட்

மூன்று வருஷ உத்தரவாதமுள்ள சர்டிபிகேட்டுகள்

ரூபாய் 100-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைகளுக்கும் மூன்று வருஷங்களுக்கும் நிர்ணயமான $2\frac{1}{4}$% வட்டியுடன் கூடிய சர்டிபிகேட்டுகள் கொடுக்கப்படும். அவற்றை கூட்டாகவும் மைனர்கள் பேரிலும் வாங்கலாம்,

பணம் செலுத்துவோர்களுக்கென பிரத்தியேகமான உத்தரவாதமுள்ள செக்யூரிடிகளின் பேரில், வசூலாகும் பணங்களை போட்டு வைப்பதால் டிபாசிட்டு செய்வோர்களுக்கு சந்தேகமற்ற உத்திரவாதமளிக்கப்படுகிறது.

சர்டிபிகேட்டுடன் சேர்க்கப்பட்டிருக்கும் கூபன்கள் மூலம் மூன்று மாதத்திற்கு ஒருமுறை வட்டியைப் பெறலாம்.

விதிகளுக்கு பாங்கின் தலைமை ஆபீசுக்கோ அல்லது எந்த கிளை ஆபீசுக்கோ எழுதிக் கொள்ளவும்.

* ஆம்ரபாலி *

(கு. ப. ராஜகோபாலன்)

வைசாலி நகரமே அன்று ஒரு விதமான ஆனந்தத்தில் மூழ்கியிருப்பது போலத் தென்பட்டது. ஊரெங்கும் அதே பேச்சுதான். அரசன் பிம்பஸாரன் அரண்மனை அந்தப்புரத்திலும் கூடப் பெண்கள் ஒருவிதப் பரபரப்புடன் அவருடைய வருகையைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

ராஜபிக்ஷு புத்த பகவான் வைசாலி நகரத்திற்கு வருவதற்கு முன்பே அவருடைய புகழ் அவருக்கு முன் சென்று அங்கே பரவிவிட்டது. என், நாடெங்கும் அவருடைய அதிசயச் செயல்களைப் பற்றியும் அமானுஷ சக்திகளைப் பற்றியும் ஜனங்கள் பயத்துடனும் பக்தியுடனும் பேசினார்கள்.

அவருடைய அருள்மொழிகளின் அதிசயமான ஆறுதல் ஒருபுறமிருக்க, அவருடைய மூர்த்தி தரிசனமும் பாத ஸ்பர்சமும் க்ண் பார்வையுமே ஜனங்களுக்கு அபூர்வ அமைதியையும் ஆதரவையும் அளித்தன. அவருடைய தரிசனம் அவர்களுக்கு வாழ்க்கையின் புனிதத்துவத்தை பளிச்சென்று எடுத்துக் காட்டிற்று. அவர் சென்ற விடமெல்லாம் நோய், துன்பம் முதலிய பிசாசுகளும் அசுராம்சங்களும் ஒளியைக் கண்ட இருள்போல அகன்றன.

அப்பொழுது பகவானுக்கு வயது எண்பது. உயர்ந்த தேகம் தவ ஒளியில் தங்கம்போல இருந்தது; அந்த உடம்பைச் சுற்றி காஷாய வஸ்திரம் இளஞ் சூரியனைச் சூழ்ந்த அருணோதய மேகங்கள்போலத் தென்பட்டது. முகத்திலும் தலையிலும் மயிர் நரைத்து வெண்மையாக இருந்தது. சங்கத்தின் நியமப்படி முண்டனம் செய்து கொண்டிருந்தார்.

அவருடைய உபதேசம் அப்பொழுது எங்கும் பிரபலமாகி இருர்தது. அவர் அந்த தடவை வைசாலிக்கு வந்தபொழுது அவருடன் பல புனிதமான சிஷ்யர்கள் இருந்தார்கள். யசோதரையும் ராகுலனும் கூட பிக்ஷுணி பிக்ஷுவாக அவரைப் பின்பற்றினார்கள். அவருடைய பூர்வாசிரமத்தில் அவருக்கு நெருங்கியிருந்த அவர்களுடைய ஞானோதயத்தின் பிறகுதான் அவருடைய உபதேசமே பரிபூர்ண பலனை அடைந்தது.

அன்று ராஜகிருகத்தில் பிக்ஷை என்று எற்பாடாகியிருந்தது. பகவான் நகரத்திற்கடுத்தாற்போலிருந்த மாங்தோப்பில் இறங்கியிருந்தார். அங்கிருந்து அவர்

மறுநாட் காலை பத்து மணிக்குப் பட்டணப் பிரவேசம் செய்ய வேண்டியதென்று பிம்பஸாரன் முன் ஏற்பாடு. அரசன் தானே கோட்டை வாசலுக்குச் சென்று வரவேற்பதென்று தீர்மானித்திருந்தான். அவனுடைய பட்டமகிஷி அந்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்த வண்ணம் புளகாங்கிதமாகி யிருந்தாள்.

பகவானின் விஜயத்தைப்பற்றி ஆம்ரபாலியும் கேள்விப்பட்டாள். அவருடைய சரித்திரத்தை அவள் கேட்டபொழுதெல்லாம் அவள் உள்ளம் நிறைவு பெற்றது. அவளறியாத ஓர் அபூர்வ ஆனந்தம் அவளுக்கு ஏற்பட்டது அவருடைய பெயரைக் கேட்டாலே.

அவள் வைசாலி நகரத்தில் பிரதம தாஸி. அழகிலும் ஐசுவரியத்திலும் அவளுக்கு ஈடு அங்கு யாருமே கிடையாது. கலைஞர்களும் கனவான்களும் அவளுடைய கடாட்சத்தை நாடி அவள் வாயிலில் காத்துக் கிடந்தார்கள். அரசனுக்கே அவளிடம் ஒரு மோகம்.

ஆனால் சில தினங்களாகவே அவள் யாரையும் கண்ணெடுத்துப் பார்க்கவில்லை. புத்தன் மாந்தோப்பிற்கு வந்தது முதலே அவளுக்கு ஒரு ஏக்கம், ஆவல், அவரைக் காணவேண்டுமென்று. தன் காதலனான ஒரு ஓவியக்காரனை மட்டும் கண்ணெடுத்துப் பார்த்து புத்த பகவானின் உருவப்படம் ஒன்றைச்சித்தரித்து வரும்படி உத்தரவிட்டாள். அவன் மாந்தோப்பிலிருந்த மகா தபஸ்வியின் சாயலை அப்படியே வர்ணத்தில் பிடித்துக்கொண்டு போய் அவளிடம் கொடுத்தான்.

அதை வைத்துக்கொண்டு வியப்பில் ஆழ்ந்தாள் அவள். அதைப் பார்த்துப் பார்த்து பரவசம் கொண்டாள். அந்த உருவத்திலிருந்து பிறந்து வந்த சாந்தி அவளுடைய உள்ளத்தை நிரப்பி அவள் என்றும் பெற்றிராத ஒரு திவ்யமான நிம்மதியை அளித்தது.

பிரபுவைத் தன் வீட்டிற்கு அழைத்து அவர் பாதத்தைத் தொட்டு பேரின்பம் பெறவேண்டுமென்று அவள் துடித்தாள். ஆனால் பகவான் தாஸியான தன்னைக் கண்ணெடுத்துப் பார்ப்பாரோ என்று அவளுக்கு சந்தேகம்.

தோழி ஒருவளைத் தோப்பிற்கு அனுப்பி சிஷ்யர்களிடம் கேட்கச் சொன்னாள். சிஷ்யர்கள் அவள் தைரியத்தைக்கண்டு ஆச்சரியம் அடைந்தார்கள். பகவானிடம் சொல்லக்கூட யோசனை செய்தார்கள்.

யசோதரை தான் கடைசியாக தைரியமாக முன் வந்து அந்த வேண்டுகோளை அவரிடம் தெரிவிக்க ஒப்புக்கொண்டாள். புத்தன் அதைக் கேட்டு புன்னகை புரிந்தார். சிஷ்யர்கள் திகைத்துப் போனார்கள். அவருடைய திருப்தி அவர்களுக்கு அர்த்தமாகவில்லை. அவர் பார்வையில் அப்பொழுது தென்பட்ட தயையும் இரக்கமும் சிஷ்யர்கள் வாயை அடைத்துவிட்டன.

"ஆம்ரபாலியின் அன்பு பிக்ஷையை நாம் ஏற்றுக்கொள்ளு

"குழந்தாய்! உனக்கு மங்களம் உண்டாகும்!" என்றூர் மெதுவாக.

வோம்!" என்று புத்தன் சொன்னார்.

போதிசத்துவன் ஒரு தாசியிடம் பிக்ஷை பெறுவதா என்று சிஷ்யர்கள் பரபரப்புக் கொண்டார்கள். அவ்வளவுதூரம் தன் உபதேசத்தை கிரகித்தும், அவ்வளவு வருஷங்கள் தன்னுடன் கூட இருந்து சத்திய மார்க்கத்தில் பழகியிருந்தும் அவர்களுக்குப் பக்குவம் ஏற்படாததைக் கண்டு புத்தன் விசனமடைந்தார்.

"ஆனால் நாளைக்கு ராஜ கிருகத்தில் பிக்ஷை இருக்கிறதே!" என்று ஆட்சேபித்தார்கள்.

"இருக்கட்டும்!" என்று பதில் சொல்லி புத்தன் மௌனமாகி விட்டார்.

தோழி சொன்ன செய்தியைக் கேட்டு ஆம்ரபாலி மெய் சிலிர்த்தாள்.

"என் பிரபு வருகிறார் என்னைக் காண!" என்று எண்ணி எண்ணி வியந்தாள். "எப்பொழுது, எப்படி வருவாரோ?" என்று யோசித்துக்கொண்டே இருந்தாள்.

"ஆம்ரபாலி, ஓவிய உருவமா உன்னை இப்படி உருக்கிறது? நான் இருக்கிறேனே அதைச் சித்தரித்தவன்?" என்று காதலன் கெஞ்சினான்.

"உன்னைக்காட்டிலும் அந்த ஓவியம் பெரிது. அதைக்காட்டிலும் பெரிது அந்த மூலமூர்த்தி!" என்றுதான் அவள் சொன்னாள்.

தானே வீடெல்லாம் கழுவி விளக்கேற்றி வைத்தாள். அவள் மனதையும் கழுவிவிட்டாள் அத்துடன். அதில் விளக்குமட்டும் ஏற்றிவைக்க அவர் வரவை எதிர்பார்த்தாள்.

தன் மனையிலும் மனத்திலும் பழைய மாசு கொஞ்சம்கூட இல்லாமற் போகும்படி நன்றாகத் துலக்கினாள். அவர் வந்து பிக்ஷை பெற அவை லாயக்காக வேண்டாமா? அவருக்குப் பாத பூஜை செய்ய அவை தகுதியுள்ளனவாக ஆகவேண்டாமா?

பாதி இரவு கழிந்ததுமே அவள் பரபரப்படைந்தாள். விடியவேண்டுமென்று அவளால் காத்திருக்க முடியவில்லை. அப்பொழுதே எழுந்து சென்று தன் ஆடை அலங்காரங்களை - முன் செய்த தீவினைத் தொடர்புகளைப் போல—கடைசி முறையாகக் களைந்தெறிந்தாள். சுத்த ஜலத்தில், அறிவில் முழுகுவதுபோல, முழுகி தூய ஆடை உடுத்துக் கொண்டாள். உதயதாரகையின் தெளிவுடனும் தூய்மையுடனும் மாடியில் நின்றுகொண்டு அவரை எதிர்பார்த்தாள். அவர் எப்பொழுது வருவாரோ? வரும் பொழுது தயாரா யில்லாமல் ஏமாந்துப் போகக்கூடாதே!

புத்தன்கூட அன்றிரவு தூங்கவில்லை. ஆம்ரபாலியின் அழைப்பு அவருக்கு ஒரு அபூர்வ திருப்தியைக் கொடுத்து அவர் உள்ளத்தைக் கிளறி விட்டது. அவளைக் கூட, இளமையும் அழகும் ஐசுவரியமும் நிறைந்த தாசியைக் கூட, ஆழத் தொட்டு எழுப்பி விட்டது எது என்று ஆலோசனை செய்தார். அது தனது மூர்த்தியல்ல நிச்சயம்—தனது சித்தாந்தம் தான். தனது மூர்த்தி அதனால் ஏற்பட்ட ஒரு ஜ்வாலை, அவ்வளவுதான். சித்தாந்தம் தான் உண்மையான காரணம் - அக்னி. அவளுடைய பக்தி, அவள் அவ

ரிடம் காட்டிய பிரேமை—சித்தாந்தத்தின் பிரதி பலிப்பு. அதற்கு அவர் கண்ணாடி—இந்த மாதிரி அவர் எண்ணங்கள் ஓடின.

அப்பொழுது உலகமே தன்னை மறந்து உறக்கத்தில் நிலைதப்பி இருந்தது. யசோதரை உள்பட சிஷ்யர்கள் எல்லோரும் தூக்கத்தில் ஆழ்ந்து கிடந்தார்கள்.

அருணோதயத்துக்கு முந்தின மங்கல் வேளை. புத்தன் தன் ஆசனத்திலிருந்து எழுந்து தனியாக வெளியேறினார்—தோப்பை விட்டு, தனியாகப் போனார்—அந்த மௌனத்திலிருந்து கிளம்பின காலைக் குரல்போல. தனியாக வைசாலி நகரத்தில் நுழைந்தார். இருள் கொஞ்சம் கொஞ்சமாக நீங்கிக்கொண்டிருந்த ராஜ வீதியில் ஒளி உருவமாக நடந்து சென்றார். அதை நகரம் அறியவில்லை. நகரம் தூங்கிக்கொண்டிருந்தது.

நட்சத்திரங்களற்ற காலைச் சந்திரன்போல புத்தன் தனியாக நடந்துவந்ததை ஆம்ரபாலி மாடியிலிருந்து பார்த்துவிட்டாள். தன் உள்ளத்தில் கோவில் கொண்டுவிட்ட உருவம் தன்னைத் தேடி வருவதைக் கண்டு அவள் தன்னை மறந்தாள்.

புத்தன் வீதியின் இரு பக்கங்களையும் நிதானமாகப் பார்த்துக்கொண்டே வந்தார். எங்கும் யாரும் இல்லை. அந்த நேரத்தில் யார் விழித்திருப்பார்கள்? ஆனால் அவருக்குத் தெரியும் ஆம்ரபாலி தன்னை எதிர்பார்த்துக்கொண்டு காத்திருப்பாள் என்று. தன் கண்களில் அப்பொழுது பட்ட பெண் வடிவு அவள்தான் என்று அறிந்தார். நடுத்தெருவில் நின்று விட்டார்.

ஆம்ரபாலி கீழே இறங்கி ஓடி வந்து அவர் காலடிகளில் விழுந்து கால்களைப் பிடித்துக்கொண்டாள். அவளுடைய நீண்ட கேசம் அவர் பாதங்களைத் துடைத்தது.

கருணை பொங்கிய பார்வையுடன் அவளைக் குனிந்து பார்த்து பகவான் அவளைத் தன் கைகள் கொண்டு தூக்கினார்.

“குழந்தாய், உனக்கு மங்களம் உண்டாகும்!” என்றார் மெதுவாக.

“பிரபோ! பாதப் பிரஸாதம் வேண்டும்!” என்றாள் ஆம்ரபாலி.

“அம்மா, கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு போ, வழி காட்டு—பக்தியும் சிரத்தையும் குடிகொண்ட உன் அன்பு மாளிகைக்குப் போவோம்!” என்றார் பிரபு.

“நான் அளிக்கும் பாத பூஜையை ஏற்க—” என்று தடுமாறினாள் அவள்.

“பிக்ஷை யிடு!” என்று பதில் வந்தது.

நட்சத்திர குணாதிசயங்கள்

(8) பூசம்.

ஜென்ம நட்சத்திரம் :	பூசம்
இதற்கதிபதி :	இராகு
இஷ்டதேவதை :	வியாழன்
பகை :	உத்திராடத்தில் பிறந்தவர்கள்
உருவம் :	ஆண்
குணம் :	சாத்மீகம்
சுபப்பலன் தரும்வாரம் :	வியாழன்
திசாதிபன் :	சனி

குணாதிசயங்கள் : அசுவ வாகனப்பிரியன், சாட்சியம் சொல்லப் பிரியப்படுபவன், பரிகாச வசனன், உயரமுள்ளவன், பசிப்பிணியைத் தாங்கான், நற்குணன், பரிமளப்பிரியனுமாவான்.

இத்துடன் முதற்பாகத்தில் பிறக்கின் கெர்ப்பரோகியும், நிஷ்டூரனும், கோபியும், தீர்க்காயுசுள்ளவனும், தர்மவானும், புத்திசாலியுமாவான்.

இரண்டாவது பாகத்தில் பிறக்கின் எதினும் குறைசொல்லுபவனும், பிரபுவும், ஜனங்களுக்கு இம்சைகொடுப்பவனும் சிநேகப்பிரியனுமாவான்.

மூன்றும் பாகத்தில் பிறக்கின் ஞானியும், புத்திசாலியும், சந்தோஷியும், சர்வகாரிய சுபக்ஷனும் சுற்றத்தாருக்கு உதவுவோனுமாவான்.

நான்காம் பாகத்தில் பிறக்கின் கோபியும், சண்டையிடுவதில் பிரியனும், பெண்களிடத்தில் மிகப் பிரியமுடையவனுமாவான்.

(9) ஆயில்யம்.

ஜென்ம நட்சத்திரம் :	ஆயில்யம்
இதற்கதிபதி :	கேது
இஷ்டதேவதை :	ஆதிசேடன்
பகை :	பூராடத்தில் பிறந்தவர்கள்
உருவம் :	ஆண்
குணம் :	ராசதம்
சுபப்பலன் தரும் வாரம் :	சனி
திசாதிபன் :	புதன்

குணாதிசயங்கள் : வனசஞ்சாரப்பிரியன், சாமர்த்தியமுள்ளவன், சதாகிலேசமுள்ளவன், தாய்தந்தையர்க்கன்பன், சிற்றுணவில் பிரியன், எவரையும் ஏளனஞ் செய்வோன், வலிவுடையார்க்கும் அஞ்சாதவன், விசால நேத்திரன், அடர்ந்த புருவமுடையவன், சகல சுகங்களேயும் அனுபவிப்பவன்.

பின்னும் முதற்பாகத்தில் பிறக்கின் பற்பல தொழில்களிலும் ஈடுபடுவோனும்|பெண் போன்ற சில உருவம் அமைந்தவனும், புத்தி சாதுர்யமும், பெரிய காரியங்களைச் செய்ய|ஆசைபடுபவனும் ஆவான்.

இரண்டாம் பாகத்தில் பிறக்கின் அடிமைப் படுவோனும், அழகுள்ளவனும், தீயவழியில் நடப்பவனும், துர்ப்புத்தி யுடையாரை அண்டுபவனும், ஏக்கமுள்ளவனும் ஆவான்.

மூன்றும் பாகத்தில் பிறக்கின் கோபியும், மனைவியை நம்பாதவனும், துறவறம் மேல் என்று சிந்திப்போனும், காரியம் செய்யாது சிந்தனையில் இருப்பவனும், நலமில்லாத வார்த்தைகளைப் பேசித் திரிபவனுமாவான்.

நான்காம் பாகத்தில் பிறக்கின் முன்னோர் பாக்கிய மழிப்பவனும், பஞ்ச பாதகங்களில் ஈடுபடுபவனும், தீயவர்களுக்கு உதவிசெய்பவனும், பறைச்சியர் போகம் விரும்பித் திரிபவனுமாவான்.

(10) மகம்.

ஜென்ம நட்சத்திரம்:	மகம்
இதற்கதிபதி	சூரியன்
இஷ்டதேவதை :	சுக்கிரன்
பகை :	ரேவதியில் பிறந்தவர்கள்
உருவம் :	ஆண்
குணம் :	தாமதம்
சுபப்பலன் தரும் வாரம் :	ஞாயிறு
திசாதிபன் :	கேது

குணாதிசயங்கள் : கலங்கின நேத்திரமுடையவன், தேச சஞ்சாரப் பிரியன், சங்கீத ஞானமுடையவன், ஸ்நானப் பிரியன், பரிமள கந்த வாசனைப் பிரியன், செல்வவான், வலது பக்கத்தில் மருவுள்ளவன், தீவிவான் அற்ப நித்திரையுள்ளவனுமாவான்.

பின்னும் முதற் பாகத்தில் பிறக்கின் சிவந்த கண்களையுடையவன், பேராசையுள்ளவன், எதையும் யூகித்து அறிபவன், சிவந்த தேகமும், ரோமமும் உடையவனுமாவான்.

இரண்டாம் பாகத்தில் பிறக்கின் பொருட்செலவு செய்ய விருப்பமுடையவனும், சிவந்த நேத்திரமுடையவனும், சுயபுத்தியில்லாதவனும், குற்றம் செய்பவனும், செவிப்பிணியுடையவனுமாவான்.

மூன்றும் பாகத்தில் பிறக்கின் பலசாலி, சாது, பரிசுத்தன், ஆதி மத்திய அந்த காலங்களில் இடர் காயத்தால் சரீரத்தில் பின்னப்படு பவனுமாவான்.

நான்காம் பாகத்தில் பிறக்கின் சீலமுடையவன், பெண்புத்தி கேட்பவன், சொரி சிரங்குடையவன், மனோ வியாகூலம் உடையவனு மாவான்.

(11) பூரம்

ஜென்ம நட்சத்திரம் :	பூரம்
இதற்கதிபதி :	சந்திரன்
இஷ்ட தேவதை :	பார்வதி
பகை :	உத்திரட்டாதியில் பிறந்தவர்கள்
உருவம் :	பெண்
குணம் :	சாத்மீகம்
சுபப்லன் தரும் வாரம் :	புதன்
திசாதிபன் :	சுக்கிரன்

குணாதிசயங்கள்: —கல்வியில் சிறந்தவன், பலரும் புரியப்படத் தக்க வார்த்தைகளைப் பேசுவான், வருத்தப்பட்டு பாக்கியந் தேடுப வன், எக்காரியங்களையும் ஆய்ந்தோய்ந்து பார்ப்பவன், வியாபார வகைகளில் சென்று சித்தியடைபவன். உலகத்தில் யாரும் அறிந் திராத நூதன காரியங்களை அறிவதற்கு ஆசைப்படுபவன். வேசி கள் நேசமுடையவன், வரிசையான பற்களை யுடையவன்.

பின்னும் முதற் பாகத்தில் பிறக்கின் இனிய வசனன், தீரன், கோபி, ஆசாரமுள்ளவன், சவுரியவான், அடக்கமான இடத்தில் வசிக்க ஆசைப்படுபவன், செல்வச்சுகமற்றவன், வாணிபஞ்செய்ய விருப்பமுள்ளவனு மாவான்.

இரண்டாம் பாகத்தில் பிறக்கின் பூமி பலிதமுள்ளவன், தரும தானம் பிரிய முடையவன், சிறு பகையில் கிலேச முடையவன், சகாய மற்றவனுமாவான்.

மூன்றும் பாகத்தில் பிறக்கின் நற்குணன், எப்போதும் மேன் மையடையும் எண்ண முடையவன், நற்கீர்த்திகளை விரும்புவனு மாவான்.

நான்காம் பாகத்தில் பிறக்கின் துக்கமுள்ளவனும், பல கருமம் செய்பவனும், பின்ன முள்ள தேகமுடையவனும், தெய்வங்களையும் தவசிகளையும் தூஷிப்பவனுமாவான்.

குற்றவாளி

"மணி"

நாம் எதிர்பாராத சமயங்களில், எதிர்பாராத சம்பவங்கள் நடந்து நம்மைக் குலுக்கி எடுத்துவிடுகின்றன என்பதற்கு வரதராஜனை உதாரணமாக எடுத்துக் கொள்ளவே வேண்டியதில்லை. அற்புதங்கள் நடக்கத்தான் நடக்கின்றன. கடவுளைப் பார்க்கக் காலமெல்லாம் தவங்கிடந்தவர்கள் இன்று அவரைக் கண்டுவிட்டனர்—அவர் 'இருப்பதாகச் சொல்லப்படுமிடத்தில் போய்! மதுவிலக்கும் ஒரு வெற்றி! இவ்வளவிற்கும் நடுவில் வரதராஜனின் மாறுதல்தானா ஒரு பெரிய ஆச்சரியம்! இல்லை. ஒருக்காலுமில்லை. அதுவும், அந்த மாறுதல் மஹத்தானதொரு தியாக வாழ்க்கையில் பிறந்ததென்று தெரிந்த உடனே நமக்கு ஒரு உள்ளக் கிளர்ச்சி யுண்டாகிறது.

தம்பி போய்விட்டான். கோர்ட்டில் அவனுக்களிக்கப்பட்ட மரண தண்டனையை அவன் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொண்டானும். வரதராஜன் அப்போது அங்கில்லை. இருந்து என்ன உபயோகம்? 'பாவி இருக்கும் சட்டத்தில் நியாயமே இல்லை' என்பதற்கு மற்றொரு உதாரணம்! அவன் எவ்வளவு சொன்னால் என்ன? எவ்வளவு வேண்டினால் என்ன? 'தம்பியைக் காப்பாற்றுவதற்காக, ஒரு பொய்யைக் கற்பனை செய்து சொல்லுகிறான்' என்றுதான் அவர்கள்—கோர்ட்டார் — சொல்லுவார்கள்! சட்டம், சாட்சியத்தைத் தேடுகிறது. அதற்கு, அவன் எங்கே போவான்? உண்மையை உண்மை என்று நிரூபிக்கவேண்டிய அவசியம் வந்துவிட்டால், இதைக் காட்டிலும், 'உலகம் பைத்தியம் பிடித்து ஓடுகிறது' என்பதற்கு என்ன உதாரணம் வேண்டும்? அதனால், வரதராஜன் இன்று உயிரோடு இருக்கிறான். இல்லாவிட்டால் அவன் போயிருப்பான். இதே இடத்தில் அவன் தம்பி நின்றுகொண்டு யோசித்துக்கொண்டிருக்கலாம்!

முழுவதும் நியாயம், சட்டம் என்று சொல்லி நடந்ததற்குக் காரணம் கற்பித்து விட முடியாது. அவன் தம்பியும்கூட அவ்வளவு பிடிவாதமாக இருந்தான். அவனுக்கு இவ்வளவு தைரியமும் தியாக புத்தியும் எங்கிருந்து வந்தது? அவன் இருந்து வாழ்வதைவிட, வரதராஜன் இருப்பது மேல் என்று எதனால் அவன் நினைத்தான்? அது அவனுடைய அந்தராத்மாவின் கட்டளை—உள்ளத்தின் ரகசியமாகவே போய்விட்டது!

கடைசி நிமிஷம் வரையில் எவ்வளவு தூரம் கெஞ்சினான் வரதராஜன்! "நான் செய்த அநியாய குற்றத்தை, நீ ஏன் ஏற்றுக்கொள்ள வேண்டும்? நான் செய்ததற்கு, நான் தண்டனையை அனுபவிப்பதல்லவா நியாயம்? தகப்பனார் இறந்த துக்கத்தோடு, உன்னையும் அக்கிரமமாகக் கொன்றேன் என்ற எண்ணம் வேறு என்னைச் சூழ்ந்துகொண்டு வருத்த வேண்டுமா?

வண்டாம். நீ இல்லை என்று வாக்கு மூலம் கொடுத்துவிடு. நான் அதை ஒப்புக் கொள்ளுகிறேன்" என்று தம்பியிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். அவன் கேட்கவில்லை. "நீதான் அதைச் செய்தாய் என்பதற்கு என்ன அத்தாட்சி?" என்று சட்டம் பேசிவிட்டுச் சிரித்தான்! அந்தச் சிரிப்பு!

மறுநாள் காலை, அகண்டாகாரத்தில் ஜீவன் ஐக்கியமாய் விட்டது! சூரியோதயமாகும்போது, ஆஹா— என்ன சாந்தி!

* * * *

கொட்டும் மழையில் நின்று கொண்டு வரதராஜன், கள்ளுக் கடைக்குள்ளே போவோர்களை, 'போகவேண்டாம் - குடிக்க வேண்டாம்' என்று காலைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினான். அக்காலத்தில் மதுவிலக்கு, சத்யாக்கிரஹத்தின் மூலம் மறியல் செய்யப்பட்டதே ஒழிய, சட்டத்தைக் கொண்டு தடுக்கப் படவில்லை! 'கெட்டவன் கெட்டும்; நான் வாழ்கிறேன்' என்று நினைத்த காலம் அது.

ஆனால் அவனுடைய விரதமே வேறாகப் போய்விட்டது! முதல் நாள் கொஞ்சம் தயக்கமாகத் தானிருந்தது! ஊரில் எவனுக்குத் தான் தெரியாது, வரதராஜன் குடிகாரன், என்று? ஆகையால், அவனே வந்து குடித்தலுக்கு எதிரிடையாகப் பிரசாரம்செய்யஆரம்பித்தால் யாருக்குத்தான் ஆச்சரியமாக இருக்காது?

ஆனால், எவர் என்ன நினைத்தால் அவனுக்கென்ன? உண்மையாகவே, மதுவிலக்கிற்காகவே, பாடு படுபவனாக அவர்கள் நினைத்துக் கொண்டால், நினைத்துக் கொள்ளட்டும். அல்லது அவன் வெளிவேஷம் போடுகிறான் என்று அவர்கள் எண்ணிக் கொண்டாலும், வரதராஜனுக்கு அதைப்பற்றி அக்கரை இல்லை. அவன் எடுத்துக்கொண்ட பிரதிக்ஞையை, அவன் நிறைவேற்ற போகிறான். உடலுக்கு உ. ரத்தத்திற்கு ரத்தம் - இப்பட கொடுத்து தான் பாபத்தை நிவர்த்தித்துக் கொள்ளவேண்டும் என்பது அவன் பிரதிக்ஞை. அவனுடைய தொண்டுக்கு அரசாங்கம் கொடுக்கும் பரிசு, போலீஸ்காரர்கள் கையில் இருக்கும் குண்டாந்தடிப் பிரயோகம், என்பது அவனுக்கு நன்றாய் தெரியும். அது தான் அவன் வேண்டிப் பெற்ற பரிசு! அது அவனுக்குக் கிடைத்தால் அவனுடைய தவம் பூர்த்தியாகிவிடும்! உள்ளத்தில் கொதித்துக் கொண்டிருக்கும் ஆசை, நிறைவு பெற்றுவிடும்.

உள்ள முருகி, உணர்ச்சி மிகுந்து சொல்லும் எதுவும் மனித வர்க்கத்தின் மனதில் பதியாமல் போகாது. சொல்லும் முறையில் ஏதாவது தவறு இருக்கவேண்டும். அல்லது அவன் சொல்லுவதை அவனே சரியாகத் தெரிந்துகொள்ளாமல், நம்பாமல், இருக்கவேண்டும். அப்பொழுது தான் அவன் சொல்லுவதைப் பிறர் நம்பும்படியும், ஏற்றுக் கொள்ளும்படியும் செய்வது கடினம். அரை குறையாகச் செய்யப்படும் எந்தக் காரியமும் அரைகுறையான பலனைத்தான் கொடுக்கும்! சந்தேகமென்ன?

ஆனால் வரதராஜன் அப்படியல்ல. அனுபவித்துச் சொல்லுகிறான். அதைவிட உருக்கமும், சோகமும் நிறைந்த வேண்டுகோள் வேறொன்று இருக்கமுடியாது என்பது நிச்சயம். குடியால், தகப்பனை இழந்துவிட்டான்; தம்பியை இழந்துவிட்டான். எவ்வளவோ உன்னதமான ஸ்திதியிலிருந்த வீடு பாழடைந்து கிடக்கிறது. இன்னும் என்ன வேண்டும்?

மழை கொட்டிக் கொண்டிருக்கிறது. அதை அவன் பொருட்படுத்தவில்லை. பிரித்து; அழகாய், வார்த்தை வார்த்தையாக, எல்லோ

கும் புரியும்படி அவன் பாடு ன். இயற்கை இனிமையோடு, குடியால் வந்த கனமும் சேர்ந்துகொண்டு அந்தக் கடையின் செங்கல் சுவரிலிருந்து எதிரொலிக்கிறது. அதில் உள்ள உண்மையும், அர்த்தத்தையும் அவர்கள் எவ்வளவு சீக்கிரமாக அறிந்து கொள்ளுகிறார்கள்!

* * * *

தகப்பனார் இறப்பதற்கு முதல் நாள்.

குடித்துவிட்டு அந்த வெறியில் நிலை குலைந்திருக்கும்போது, யாரோ பின்னாலிருந்து தோளில் கையை அழுத்தி இழுத்ததும் அவன் திரும்பிப் பார்த்தான்.

குகைக்குள் போய் காதைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்தாலும் வந்துவிடலாம், வரதராஜனை அவனுடைய சினேகிதர்களிடமிருந்து பிரித்துக்கொண்டு வருவது முடியாத காரியம். எல்லோரும் தடுமாற்றத்தில் தானே இருப்பார்கள்! ஒருவருக்காவது தான் சித்தஸ்வாதீனமிருக்காதே! ஆகையால் அங்கே போகவேண்டியவன் எதை மட்டும் எதிர்பார்க்க முடியும் என்பதைச் சொல்லுவது கஷ்டம்.

அவனுடைய தம்பி தைரியத்தோடேயே வந்திருந்தான். எப்படியும் வரதராஜனை அழைத்துக்கொண்டு போய்விட வேண்டுமென்று.

“யாரது?” என்றான், நெருப்பைக் கக்கும் குரலில். உயர்தர சாராயத்தின் நாற்றம் அவன் வாயிலிருந்து அடித்தது.

இழுத்தது தம்பி தான். அவனுக்கு அங்கேவர எவ்வளவோ தைரியம் வேண்டும். புலியைக்

அதற்கு இரண்டு நாள் முந்தி, நிலைகெட்டு, உயிரில்லாதவனைக்கொண்டு வருவதுபோல், வரதராஜனைக் கொண்டுவந்து யாரோ இரண்டு பேர் வீட்டில் போட்டுவிட்டுப் போனார்கள். அன்று முதல் அவனுடைய தாயார், தகப்பனார், தம்பி எல்லோ

ரும் பட்ட வேதனை சொல்லில் அடங்காதது. வார்த்தைகளைத் தாண்டி நின்றது!

இரவின் அந்த நேரத்தில், அப்பா, வரதராஜனைத் தேடப் புறப்பட்ட போது, தம்பிக்குச் சொல்ல முடியாத பயம் உண்டாயிற்று. அவர் அவனைப் பார்த்து விட்டால்......

அவருக்கு ஏதேனும் ஆபத்து வந்துவிட்டால்............

வரதராஜன் இருக்குமிடம், தம்பிக்குத் தெரியும். ஆகையால் வரதராஜனை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்துவிட்டால், தகப்பனையும், அண்ணனையும் எப்படியாவது சமாதானப்படுத்தி, வீட்டின் அமைதியை திரும்பவும் சீர்திருத்தி விடலாம் என்பது தம்பியின் எண்ணம். அதனாலேயே அப்பாவை வீட்டில் இருக்கச் சொல்லிவிட்டு தம்பி புறப்பட்டான்.

வரதராஜனைக் கட்டாயப்படுத்தி, வீட்டுக்குக் கொண்டு வரப்பட்ட பாடு தெய்வமறிந்துவிட்டது. ஆனால் தெய்வம் அவனுக்கு இரங்கவில்லை!

அப்பாவுக்கும் வரதராஜனுக் பேச்சு வலுக்கவே, காரியம் மி விட்டது. இரத்த வெள்ளத் அப்பா கிடந்தார். கொஞ்சநேரம் தான் நினைவுடன் இருந்தார். பிறகு இறந்துவிட்டார்.

இதற்குள் வாசலில் ஊர் கூடி விட்டது. வெளியில் வரக்கூடாத விஷயம், வரவேண்டாமென்று நாம் எண்ணும்போது எவ்வளவு சீக்கிரமாக வந்து விடுகிறது, என்பதற்கு உதாரணமாக வாசல் கதவை 'டக்-டக்' என்று யாரோ இடிக்கும் சத்தம் கேட்டது.

வேறு யார்? போலீஸ்காரன் தான்!

தயங்கவில்லை. ஒரு நிமிஷம் கூடத் தாமதிக்கவுமில்லை. தம்பி வேகமாக கீழே இறங்கிப் போய், அவனிடம், "அப்பாவை நான் கொன்றுவிட்டேன். போலீஸ் ஸ்டேஷனுக்குச் சொல்லியனுப்பு!" என்றான்.

வெட்டுப்பட்ட கை

(ஜி. தாதாச்சாரி)

18690

ஸ்ரீமான் சம்பந்தம் மதுரை ஜில்லாவில் பத்து வருஷங்களுக்கு மேலாக சப்மேஜிஸ்திரேட் உத்தியோகம் பார்த்தபின், பென்ஷன் பெற்றுக் கொண்டு, தமது ஜன்மஸ்தானமாகிய தஞ்சாவூரில் புதிய பங்களா ஒன்றைக் கட்டிக்கொண்டு சுகவாசம் செய்தார். அவ்வூரிலுள்ள மற்றப் பென்ஷனர்களைப்போல அவரும் தினந்தோறும் சாயந்தர வேளையில் "மார்ஷ் ஹால்" என்னுமிடத்துக்குப் போவதுண்டு. அங்கே, சீட்டுக்கச்சேரி நிகழ்வது சாதாரணம். அதைக் காட்டிலும் சாதாரணம் வம்புக்கச்சேரி. ராஜீய விஷயமாகவோ, மத விஷயமாகவோ உலகத்தில் எந்தப் பிரதேசத்தில் எது நிகழ்ந்த போதிலும் அது இந்தப் பென்ஷனர்களுடைய சர்ச்சைக்கு வராமல் போகாது. அப்படியிருக்க நீடாமங்கலத்தில் நடந்த ஒரு அதிசயக் கொலையைப் பற்றி இவர்கள் விவாதித்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

"இது அமானுஷ்யமாகத்தான் தோன்றுகிறது. எப்படிப் பார்த்தாலும் இதற்கு யாதொரு துப்பும் தெரியவில்லையே" என்றார் பென்ஷன் தாசில்தார் பொன்னரங்கப்பிள்ளை.

"இதை அமானுஷ்யம் என்கிறீர்களே! என் தகவலுக்கு எட்டிய ஒரு கொலையைப்பற்றிய விவரத்தைச் சொல்லுகிறேன். அப்புறம் உங்கள் தீர்மானத்தைத் தெரிவியுங்கள்" என்றார் சம்பந்தம்.

"சொல்லுங்கள் கேட்போம்" என்றார் பென்ஷன் ஜில்லா ரிஜிஸ்த்ரார் ராகவராயர்.

ஸ்ரீமான் சம்பந்தம் நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டு பின்வருமாறு கூறத் தொடங்கினார்:

நான் சொல்லப்போவதில் அமானுஷியம் இல்லையென்பதே என் கருத்து. காரணத்தை நம்மால் கண்டுபிடிக்க முடியவில்லை என்று தான் சொல்லவேண்டும். அந்தக் கொலை நடந்து பதினைந்து வருஷங்களுக்கு மேலாகிவிட்டது. அப்போது நான் திருமங்கலத்தில் சப்மாஜிஸ்திரேட்டாக இருந்தேன். அந்தப் பிராந்தியத்தில் அடிக்கடி கொலைகள் நடந்தன. அவைகளின் காரணங்களை விசாரித்தறிவதற்கு நான் "ஸ்பெஷல் டூடி"யில் நியமிக்கப்பெற்றேன்; வாரம் ஒரு கொலை என் தகவலுக்கு வரும். கள்ளர் நாட்டின் விவகார முறையே வேறு. அற்பக் குற்றத்துக்கும் பழிக்குப்பழி வாங்கும் சுபாவம் கள்ளர்களிடம் உண்டு.

ஒரு நாள் அவ்வூருக்கு ஓர் ஆந்திரன் வந்து, கிராமத்தின் மேலைக் கோடியில் ஒரு வீடு அமர்த்திக்கொண்டு குடி புகுந்ததாகக் கேள்விப்பட்டேன். பழனிப் பக்கத்தினனான ஒரு தமிழ் வேலைக்காரன் ஒருவன் அந்த ஆந்திரனிடம் பணி செய்து வந்தான். பிரதிதினமும் காலையிலும் மாலையிலும் ஊருக்கு வடக்கேயுள்ள ஊருணிக்கு ஸ்நானம் செய்வதற்குச் செல்லும் போது மட்டுமே அந்த ஆந்திரன் கண்ணுக்குபுலப்படுவான். மற்ற வேளை

ளிலெல்லாம் வீட்டுக்குள்ளேயே அடைத்துக் கிடந்தான். ஒருவரோ அவன் பேசினது கிடையாது. ஊரார் அவனைப் பற்றிப் பற்பல கதைக சொல்லத் தலைப்பட்டனர். அவன் ஒரு மகான் என்று சிலர் கருதினா. இன்னும் சிலர், அவன் ஏதோ ஒரு பெரிய குற்றத்தைச் செய்துவிட்டு இங்கு ஓடிவந்து ஒளிந்திருப்பதாகச் சொன்னார்கள். அந்தக் குற்றம் எப்படிப் பட்டதாக இருக்கலாம் என்பதை ஜனங்கள் பலபடியாக ஊகித்து, அவரவர்களுடைய மனோபாவப்படி அதற்குக் காலும் கையும் வைத்து ஜோடித்தனர். எனக்கு, உத்யோக முறையில் அவனைப்பற்றி அறியவேண்டுமென்ற அவா உண்டாயிற்று. அவ்விஷயமாக நான் செய்த முயற்சிகள் எல்லாம்

பயனற்றன. அவன் பெயர் ஜம்பு ரங்கய்யா என்பது மட்டும் தெரிந்ததேயன்றி, அவனைப்பற்றி சந்தேகத்துக்கிடமான விவரங்கள் யாதொன்றும் என் காதுக்கு எட்டவில்லை. என்றாலும் ஊர் வம்பு மட்டும் வாவா அதிகமாகியது. ஆகவே அவனை நேரில் கண்டு பேசவேண்டும் என்று எண்ணினேன். அவனைப்போல நானும் காலை வேளைகளில் ஊருணிக்கு ஸ்நானத்துக்குச் சென்றேன். அவனுடைய பழக்கத்தைப் பெறுவதற்கு ஒரு மாதமாயிற்று. ஒரு நாள் நான் ஸ்நானத்துக்குப் போகாமல் மற்றொரு நாள் போனேன். அதை வியாஜமாக வைத்துக்கொண்டு அவன் என்னை ஏதாவது கேட்பான் என்று நினைத்தேன். நினைத்தபடியே ஆயிற்று. முன்னமேயே அவன் ஸ்நாநம் செய்துவிட்டு வந்து, தன் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தான். என்னைப் பார்த்ததும் பாதி தமிழிலும் பாதி தெலுங்கிலுமாக, "நீரு நென்ன ஸ்நாநம் சேய ராலேது?" என்று கேட்டான்.

"நேற்று சீர்க்கேர்வையாக இருந்தது. அதனால் வரவில்லை" என்று சொன்னேன்.

"சாவகாசம் உண்டே உள்ளே தயசேயண்டி" என்றான் அவன்.

"நான் எதிர்பார்த்த சந்தர்ப்பம் அதுவே யாகையால் உடனே உள்ளே நுழைந்தேன். ஆபாசமான தமிழில் அவன் பேசத்தொடங்கினான். தன் தேசத்தைக் காட்டிலும் தமிழ்த்தேசம் எல்லாவிதத்திலும் நன்றாக இருக்கிறதென்று அபிப்பிராயத்தை வெளியிட்டான். நான் சாவதானமாக அவனுடைய வாழ்க்கையைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்தேன். அவன் தாராளமாக எல்லாவற்றையும் சொல்லிவிட்டான்.

"அப்படியானால் நீங்கள் பற்பல பிரதேசங்களையும் பார்த்திருக்கிறீர்கள். ஆங்காங்கு அதிசயங்களையும் கண்டும் கேட்டும் இருப்பீர்கள்."

"நான் பல ஊர்களுக்குப் போயிருக்கிறேன். பல பேர்களைச் சந்தித்திருக்கிறேன். காடுமலைகளிலும் சஞ்சரித்திருக்கிறேன்."

"காடுகளில் சுரடி, சிறுத்தை, யானை முதலிய கொடிய மிருகங்களையும் கண்டிருக்கவேண்டும். உங்களுக்குப் பயம் உண்டாகவில்லையா?"

"சிற்சில சமயங்களில் தூரத்தில் அவைகளைக் கண்டதுண்டு. நாம் ஹிம்சை செய்யாவிட்டால் அவைகள் நம்மை ஒன்றும் செய்வதில்லை. ஈசுவர சிருஷ்டியில் கொடிய பிராணி எதுவெனில் மனிதன் தான் என்பது எனது அபிப்பிராயம்."

"இந்த வார்த்தை என்னைத் திடுக்கிடச்செய்தது. நான் தலையை நிமிர்ந்து பார்த்தேன். சுவரில் ஒரு சிவப்புத்துண்டு தொங்கவிடப்பட்டிருந்தது. அதில் ஒரு மனிதனுடைய கை பொருத்தப்பட்டிருந்தது. அதைக் கூர்ந்து கவனித்தேன். கையின் எலும்பு மட்டுமே தென்பட்டது. சில இடங்களில் உலர்ந்துபோன ரத்தக்கரையும் காணப்பட்டது. சுவரில் சற்று தூரத்தில் பொருத்தப்பட்டிருந்த இரும்பு வளையத்தினின்றும் ஒரு சங்கிலி தொங்கியது. அது அந்த எலும்புக் கையுடன் இணைக்கப்பட்டிருந்தது.

"அதன் மர்மத்தை அறியவேண்டுமென்ற அவா எனக்கு இருந்தபடியால் "அது என்ன?" என்று நான் கேட்டேன்.

"அதுவா? அதுதான் எனது பரமசத்துரு, அந்தக்கை ஒரு ஒரியா ஜாதியானுடையது. அந்தக் கையைக் கத்தியால் துண்டித்துத் தோலையுரித்து, வெயிலில் உலர்த்தி, இப்படி வைத்திருக்கிறேன்."

விரல்கள் நீளமாகவும் பருமனாகவும் இருந்தன. அவைகளைப் பார்ப்பதற்கே பயங்கரமாக இருந்தது. ஏதோ ஒரு பழிக்குப்பழி வாங்கிய விவரத்தை அக்கை தெரிவித்தது.

"அவன் பலிஷ்டன் என்று தோன்றுகிறது" என்று நான் சொன்னேன்.

"ஆமாம், அவன் பலிஷ்டன்தான். நான் அவனுக்கு மேற்பட்ட பலிஷ்டனாக இருந்தேன். அந்தக் கை ஓடிப்போகாமல் இருப்பதற்காகத்தான் அந்தச் சங்கிலியைப் பிணைத்து வைத்திருக்கிறேன்."

“இப்போது அந்தச் சங்கிலி அவசியம் இல்லையே. கை ஓடிப் போ விடாதே!”

“இந்தக் கை எப்போதும் ஓடிப்போகத்தான் பார்க்கிறது. ஆதலால் தான் சங்கிலி அவசியமாக இருக்கிறது.”

ஒரு சமயம் அவனுக்குச் சித்த ஸ்வாதீனம் இல்லையோ என்ற சந்தேகம் எனக்கு உண்டாயிற்று. ஆகவே அவனை ஏறிட்டுப் பார்த்தேன். அவன் முகத்தில் ஒரு தெளிவும் சோபையும் தென்பட்டன. பிறகு, அந்த விஷயத்தை விட்டுவிட்டு, வேறு விஷயங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்து வீட்டுக்குத் திரும்பினேன். அதன்பிறகு இரண்டு மூன்று முறை அவனைச் சந்தித்துப் பேசினேன். அப்பால் சந்திக்கவில்லை. ஊராரும் அவனிடம் அக்கரை பாராட்டவில்லை.

இப்படி ஒரு வருஷம் கழிந்தது. கார்த்திகை மாதத்தில் ஓர் நாள் எனது சேவகன் என்னிடம் வந்து, ஜம்பு ரெங்கய்யா முந்திய இரவில் கொலை செய்யப்பட்டு விட்டார் என்ற சமாசாரத்தைச் சொன்னான். உடனே போலீஸ் இன்ஸ்பெக்டரையும் அழைத்துக்கொண்டு ரெங்கய்யா இருந்த இடத்துக்குச் சென்றேன். அவனுடைய தமிழ் வேலைக்காரன் வீட்டுவாசலில் அழுதுகொண்டு நின்றான். நான் முதலில் அவன்மீது தான் சந்தேகம் கொண்டேன். பின்னர் அவன் நிரபராதி என்பது தெரிந்தது. கொலை செய்தவன் இன்னானென்று தெரியவேயில்லை.

ரெங்கய்யா வழக்கமாகப் படுத்துத் தூங்கும் அறைக்குள் நான் நுழைந்தேன். தரையின் மத்தியில் அவனுடைய சரீரம் மல்லாக்க கிடந்தது. அவன் தரித்திருந்த ஷர்ட்டு கிழிக்கப்பட்டிருந்தது. ஷர்ட்டின் ஒரு கையும் தையல் விடுபட்டுக் கீழே கிடந்தது. கொலைசெய்தவனும் செய்யப்பட்டவனும் கோரமான சண்டை போட்டிருக்கவேண்டுமென்றே தோன்றியது.

ரெங்கய்யாவின் முகம் வீங்கிப் பார்வைக்குப் பயங்கரமாக விருந்தது. இறுகியிருந்த பற்களினிடையே ஏதோ ஒரு பொருள் காணப்பட்டது, ரத்தக்கரை படிந்திருந்த கழுத்தில் ஆழமான ஐந்து துவாரங்கள் தென்பட்டன. பிரேதத்தைப் பரிசோதித்த டாக்டர் “ஏதோ ஒரு எலும்புக் கையால் இவன் குரல்வளை இறுகப் பிடிக்கப் பட்டதன் மூலம் கொலை செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது” என்று சொன்னார்.

எனக்குத் திடுக்கிட்டது. சுவர்ப் பக்கமாக நிமிர்ந்து பார்த்தேன் வழக்கமாகக் காணப்பட்ட கை அங்கு தென்படவில்லை. அதைப் பிணித்தி ருந்த சங்கிலி அறுந்து தொங்கிக் கொண்டிருந்தது. பிணத்தை ஜாக்கிர தையாகக் கவனித்தேன். பற்களினிடையே அந்த எலும்புக் கையின்விரல் ஒன்று துண்டிக்கப்பட்டிருந்தது. கொலையைப் பற்றிச் சில விசாரணைகள் செய்தோம். ஒரு துப்பும் புலப்படவில்லை. அன்றைய இரவில் அந்த வீட் டுக் கதவாவது ஜன்னலாவது பெயர்க்கப்படவில்லை. பெட்டிகள் ஒன்றும் உடைக்கப்படவில்லை. வேலைக்காரனுடைய வாக்குமூலத்திலிருந்து இரண் டொரு விஷயங்கள் தெரியவந்தன. ஒரு மாதம் முன்தொடங்கி, அவனு

டைய எஜமானனுக்குச் சில கடிதங்கள் வந்தனவென்றும், அவன் அவைகளை உடனே கிழித்துப் போட்டுவிட்டான் என்றும், அவன் அடிக்கடி கோபாவேசனாகி ஒரு சவுக்கை எடுத்துக்கொண்டு, அந்தக்கையை ஓங்கி அடிப்பதுண்டென்றும், கொலை நடந்த க்ஷணத்திலேயே அந்தக்கை மறைந்துவிட்டதென்றும் வெளியாயின. அடிக்கடி அவன் இரவில் யாருடனோ சண்டைபோடுவது போலத்தோன்றும் என்றும், கொலை நடந்த இரவில் அப்படிப்பட்ட சப்தம் யாதொன்றும் தனக்குக் கேட்கவில்லை என்றும் அந்த வேலைக்காரன் சொன்னான்.

ரெங்கையாவைப்பற்றி எனக்குத் தெரிந்திருந்த விஷயங்களையும் நான் சொன்னேன். மூன்று மாதங்கள் வரையில் விசாரணை செய்தோம். ஒன்றும் புலப்படவில்லை.

பிறகு ஒரு நாள் இரவில் எனக்கு ஒரு தோற்றம் உண்டாயிற்று. அந்தக் கை நான் படுத்திருந்த அறைச் சுவர்மீது ஊர்வதைப்போலத் தோன்றியது. மூன்று முறை நான் தூங்கி எழுந்தேன். அந்த மூன்று முறையும் எனக்கு அந்தத் தோற்றமே தென்பட்டது. மற்றும் நாள் அந்தக் கை என்னிடம் கொண்டு வரப்பட்டது. ரெங்கய்யாவைப் புதைத்த விடத்தில் அது காணப்பட்டதாம். அதில் ஆள்காட்டி விரல் காணப்படவில்லை. இது தான் எனக்குத் தெரிந்தது.

இந்த விபரத்தைக் கேட்ட தாசில்தார், இதில் அமானுஷியமானது ஒன்றும் இல்லை என்பதை எப்படி நீர் நிரூப்பிப்பீர்?" என்று கேட்டார்.

"கைக்குச் சொந்தக்காரன் இறக்கவில்லை. அவன் அதைத் தேடிக் கொண்டு வந்திருக்க வேண்டும். ஆனால் அவன் எப்படி அதைப் பெற்றான் என்பது மட்டும் எனக்கு விளங்கவில்லை" என்றார் சம்பந்தம்.

திரைப்படச் செய்திகள்

நார்மாவின் சென்னை விஜயம்

"என்னுடைய அடுத்த படம் வெற்றிகரமாய் முடிய வேண்டியதுதான்; உடனே மூன்று மாதம் லீவெடுத்துக்கொண்டு இந்தியாவுக்குப் போய் வரப் போகிறேன். முக்கியமாக நான் பார்க்கவேண்டிய இடங்களில் சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய மூன்று நகரங்களேயும் சேர்த்துக்கொண்டிருக்கிறேன்" என்று ஹாலிவுட்டிலிருந்து வெளியாகும் ஒரு பத்திரிகை நிருபரிடம் சொல்லியிருக்கிருளாம் அந்தப் பிரசித்த நடிகை நார்மா ஷியரர். இங்குள்ள எத்தனையோ சினிமா ரசிகர்கள் ஹாலிவுட் சென்று அங்குள்ள பிரசித்த நக்ஷத்திரங்களைக் காண தினசரி கனவு கண்டு வருகின்றனர். அவர்களுடைய கனவு பூர்த்தியாகும் காலம் நெருங்கி வருகிறது. ஆனைப் பட்ட ஹாலிவுட் நக்ஷத்திரம் நார்மாவே சென்னைக்கு வருகிருள் என்ருல் இந்த ரசிகர்களின் அதிர்ஷ்டத்தைத்தான் பாருங்களேன்!

* * *

நக்ஷத்திரங்கள் திரும்பி வந்தன

அஸந்தாஸின் 'மணிமேகலை'யை உருவாக்கக் கல்கத்தா சென்றிருந்த அத்தனை நடிகர்களும் சென்ற வாரம் அவர்களுடைய வேலையை முடித்துக்கொண்டு சென்னைக்குத் திரும்பி விட்டனர். படமும் இரண்டொரு வாரத்தில் சென்னைக்கு வந்துவிடும் என்று கூறுகிருர் மேற்படி படத்தில் நடித்துள்ள ஸ்ரீ. பி. என். சேஷகிரி பாகவதர்.

* * *

சியாமசுந்தர் படத்தில் நடிப்பதற்காகக் கோலாப்பூர் சென்றிருந்த ஸ்ரீ தவமணி தேவி சென்ற சனிக்கிழமை யன்று சென்னை வந்து சேர்ந்தார். மேற்படி படத்திற்காக கோலாப்பூர் சென்றிருந்த அவர் அங்கே ஒன்றரை வருஷம் 'டிகாணு' போடும்படி ஆயிற்று. அடுத்தபடியாக அவர் சியாமளா பிக்சர்ஸார் எடுக்கப்போகும் ஒரு படத்தில் கதா நாயகியாகத் தோன்றுவாராம். அது என்ன படம் என்பதை விசாரித்து எழுதுகிறேன்.

ஷெர்லி டெம்பிளின் அடுத்த படத்திற்கு ‘நீலப் பறவை’ என்பது பெயராம்.

*　　*　　*

டைரக்டர் கேதார் சர்மா எடுக்கப்போகும் அடுத்த ஹிந்திப் படத்தில் ‘அமர்ஜோதி,’ ‘பாக்பன்’ இவ்விருபடங்களிலும் நடித்துப் புகழ்பெற்ற ஸ்ரீ. நந்தரேகர் கதாநாயகனாகத் தோன்றுவாராம்.

*　　*　　*

முன்பே நாம் குறிப்பிட்டபடி வைகால், நியூ தியேட்டர்ஸை விட்டு விலகப்போவதில்லை என்ற செய்தி ஊர்ஜிதமாகி விட்டது.

*　　*　　*

நக்ஷத்திரங்கள் இடம் விட்டு இடம் மாறுவது சகஜம். அதைப் போல சினிமா நக்ஷத்திரங்களும் அடிக்கடி இடம் மாறுவதைக் கேள்விப்பட்டு வருகிறோம். இப்போது ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. பம்பாய் டாக்கீஸை விட்டு அசோக் குமார் விலகுவாராம். பிறகு எங்கே போய்ச்சேருவார் என்று இன்னும் தெரியவில்லை.

*　　*　　*

“வாழ்க்கை வாழ்வதற்கே” என்ற அடுத்த சந்தாராமின் படத்தில் சாஹு மோதக் நடிக்கிறார்; இப்படத்தில் அவர் பணமின்றி அவஸ்தைப்படும் படமுதலாளி வேஷத்தில் தோன்றுகிறார்.

*　　*　　*

‘அருந்ததி’ என்ற படத்தின் ‘ஷூடிங்’ சென்ற வாரம் மோ-பி-பு-கம்பெனியில் ஆரம்பமாய் விட்டது. அதிர்ஷ்ட நக்ஷத்திரம் சூர்யகுமாரி நடிக்கிறாள் இப்படத்தில். பெங்களூர் ராமகிருஷ்ண பிலிம்ஸின் முதல் படமிது.

*　　*　　*

விஷ்ணுபந்த் பக்னீஸ் நடித்துள்ள ‘பக்த துளசிதாஸ்’ படம் கல்கத்தாவில் ஆரம்பமானபோது பண்டிட் மாளவியாஜி அதைப் பார்த்துப் புகழ்ந்தாராம். துளசிதாஸர் சீக்கிரமே சென்னை ஸாகர் டாக்கீஸிற்கு வந்து சேருவார்.

ஒரு நிமிஷக் கதைகள்

பிழைப்பு கெட்டுவிடும்

நாட்டுப்புறத்தான்:— “வைத்தியரே, இந்த இரண்டு மருந்து பாட்டில் மேலேயும் எது மாட்டுக்கு, எது என் மனைவிக்கு என்று எளுதிக்கொடுத்துடுங்க. அப்புறம் வித்தியாசம் தெரியாமே, மருந்தை மாத்திக் கொடுத்துட்டு, மாட்டுக்கு ஏதாவது ஆபத்து வந்ததுன்னா, என் வயிற்றுப் பிழைப்பிலே மண் விழுந்துடும் சாமி.”

* * *

புரியவில்லை

காஷியர்:—உமது பெயரென்ன ?

பணம் வாங்க வந்தவர்:—அதோதான் கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிறேனே! அதில் பார்த்துக் கொள்ளுங்களேன்.

காஷியர்:—சரிதான் ஐயா, அதைப்பார்த்த பிறகுதான் உங்களைக் கேட்க வேண்டுமென்று தோன்றிற்று.

* * *

பொதுவில் சொன்னார்

வீடு வாங்கியவர்:—என்ன ஐயா, அநியாயம் பண்ணி விட்டீரே? இந்த வீட்டை நீர் எனக்கு விற்கும்போது இதை அடமானம் வைத்திருப்பதாக என்னிடம் சொல்லவேயில்லையே?

வீடு விற்றவர்:—அதுதான் அப்பொழுதே பொதுவாகச் சொன்னேனே, வீடு இந்தக்காலத்து வீடுகளைப் போலத்தான் இருக்குமென்று?

* * *

ஜவுளிக்கடையில்

வாங்கவந்தவர்:—ஏதாவது ஒரு மாதிரியில் ஒரு புடவை எடும்.

விற்பவர்:—எந்த மாதிரியில்?

வாங்கவந்தவர்:—எந்த மாதிரியானாலும் சரிதான்.

விற்பவர்:—என்ன விலையில் இருக்கலாம்?

வாங்கவந்தவர் :—எந்த விலையாக வேண்டுமானாலும் இருக்கட்டும்.

விற்பவர் :—ஏன் அப்படிச் சொல்லுகிறீர்?

வாங்கவந்தவர் :—நான் எந்தமாதிரியில் எவ்வளவு விலையில் வாங்கிக்கொண்டு போனால்தான் என்ன! என் மனைவி என்னமோ அதைத் திருப்பி அடித்து, வேறு புடவை வாங்கிவரச் சொல்லப்போவது நிச்சயம்.

* * *

கேள்வி எப்படி?

"ஏண்டி உன் அக்கா எங்கே?"

"மாடிமேலே கமலாவுக்குத் தலை பின்னிண்டு இருக்கா."

"கமலாவும்கூட இருக்காளோ இல்லையோ?"

* * *

அவள் சாதுர்யம்

"ஸார், எனக்கு இப்போ பிறந்திருக்கும் பெண் என் ஜாடையாகவே இருக்கிறதாம்."

"ஆமாம் ஸார். எனக்குக் கூட அப்படித்தான் தோன்றிற்று. சொன்னால் நீர் கோபித்துக்கொள்ளப்போகிறீரே என்று சும்மா இருந்துவிட்டேன்."

* * *

அவன் தப்பல்ல!

உபாத்தியாயர் :—(பரீக்ஷையில்) அடே! நீ இதுவரை பக்கத்துப் பையனுடைய பேப்பரை மூன்று தடவை பார்த்துவிட்டாய்.

பையன் :—ஆமாம், ஸார், அவன் என்னமோ புரியாமல் எழுதுகிறான்.

* * *

உபாத்தியாயர் :—ஏய்! உன்னை எத்தனைதரம் கூப்பிடுகிறது? பதில் சொன்னால் என்ன?

பையன் :—நேற்றுதானே, ஸார், திரும்பிப் பதில் பேசாதே என்று என்னை அடித்தீர்கள்.

மறைந்த கானம்

(கே. வெங்கட்டராமன்)

அவன் ஓர் தனியன். உற்றூர் இல்லை! உறவினரும் இல்லை! ஏன், இப் பெரிய நகரமே அவனுடைய சொந்த ஊரில்லை. உறங்குவதற்கு ஓர் சொந்தமான இடமில்லை. சேர்த்துவைக்கப் பணமில்லை. அன்புடன் கவனிப்பாருமில்லை. அவனால் கவனிக்கப் படுவதற்கும் ஒருவரும் இல்லை! ஆனால் ஒன்று உண்டு!

அதுதான், அவனுக்கு உயிருக்குயிரான, அவனுடைய சொந்த வஸ்துவாகிய அந்த ஹார்மோனியப் பெட்டி. அந்தப் பெட்டி ஒன்றுதான் அவனுடைய பொக்கிஷம், ஐசுவரியம், உயிர்! பகலில் பிழைப்பதற்கு உதவும் அது, இரவிலும் அவனுக்குத் தலையணையாக உதவி வந்தது.

பகலில் அதைக் கழுத்தில் மாட்டிக்கொண்டு, தெருத்தெருவாகச் சென்று, பக்த கீதங்களையும், காதல், சோகம், ஆனந்தம், வீரம் இவைகள் நிறைந்த கீதங்களையும், பாமர மக்களின் காதுகளில் புகுத்தி, அவர்களைத் திக்குமுக்காடச் செய்து, அவர்களால் கொடுக்கப்படும் சொற்ப காசுகளைக் கொண்டு தன் காலத்தைக் கழித்துவந்தான், இந்த நாடோடி பாடகன் புஜங்கன். எப்பொழுதும், அவனைச் சுற்றிப் பத்துப் பேர்களாவது இருந்துகொண்டேயிருப்பார்கள். அவர்களில் பாதிப் பேராவது, புஜங்கனைப்போல் பூமாதேவியின் மக்களாயிருப்பார்கள்!

புஜங்கனின் கானம் மக்களின் மனத்தை ஊடுருவிச் சென்றுவிட்டது! கடைவீதி, குடிசை, பங்களா, ஒவ்வொரு இடத்திலும், அவன் கானமும், குரலோசையும், பிரதிபலித்துக் கொண்டிருந்தது. அவனுடைய அபாக்கிய நிலைக்கு மனமிரங்கி, பல காருண்ய ஆத்மாக்கள், பொருளுதவி செய்துவடன், துணியும் சில சமயம் அன்னமும் அளித்து ஆதரித்து வந்தார்கள் பலர். எல்லாம், அவ் வினிய கானத்தை எழுப்பும், அந்த கிடைத்தற்கரிய மாணிக்கம் போன்றதான ஹார்மோனியத்தின் சக்தியல்லவா?

அதைச்சுற்றிக் கட்டப்பட்டிருக்கும் கயிற்றை தன் கழுத்தில் மாட்டிக்கொண்டு, ஒரு கை காற்று போட, மற்றொரு கையின் விரல்கள் ஹார்மோனியத்தின் பல கட்டைகளின்மேல் விரைந்து ஓட, புஜங்கன் கண்டோர் பிரமிக்கும்படிப் பாட்டுகளை உதிர்த்

துத் தள்ளி, எல்லோரையும் ஆனந்தத்தில் மூழ்கவைத்து வந்தான். சோக ரசம் ததும்பும் பாடல்களைப் பாடும்பொழுது, அவன் கண்களினின்றும் நீர் பிரவாகமாக ஓடும்.

* * *

சாயங்காலம். மணி சுமார் ஐந்திருக்கும். சர். சாமா வீட்டில் ஓர் அபிநயக் கச்சேரி. சர். சாமாவின் மகளுடைய கல்யாணத்தை ஒட்டி, ஏற்பாடு செய்யப்பட்ட கச்சேரி அது! அபிநயக் கச்சேரி என்றால், கூட்டத்தைக் கேட்பானேன்! அழைக்கப்பட்டவர்களும், அழைக்கப்படாதவர்களுமாய்ச் சேர்ந்து, பந்தலில் எள்ளுப் போட இடமில்லாமல் அடைந்து கிடந்தார்கள்!

ஆனாலும், அந்தக் கும்பலினின்றும், அபிநயக்கலையை நன்குணர்ந்தவர்கள், முன் வரிசையில் உட்கார்ந்து கொண்டிருந்தவர்கள், எழுந்திருந்து, கும்பலைத் தள்ளிக்கொண்டு வெளியில் வந்துகொண்டிருந்தார்கள்.

அபிநயம்-சந்தரா தேவி. பின் பாட்டு-சந்திரா தேவியின் பாட்டி இந்திரா தேவி.

“அடடா, என்ன அபிநயம்! அபிநயம் பிடிப்பது பேத்தியா, பாட்டியா?” என்றார் எழுந்து வந்துகொண்டிருந்தவர்களில் ஒருவர்.

“பேத்தி யென்னும் பாட்டி! அபிநயம் என்று தானா எண்ணிக் கொண்டிருந்தீர்கள்! அட அப்பாவி மனுஷரே!

“தெருக்கூத்தே” இதனிடம் பிச்சை வாங்க வேண்டுமய்யா, என்றும் சொல்லிப் போவார்கள்.

* * *

“பின்பாட்டா அது! உலகத்திலுள்ள எல்லா அபஸ்வரங்களும் ஒருங்கே திரண்டு வந்தால்கூட இவ்வளவு கேவலமாயிருக்காதே” என்றார் ஒரு சங்கித விமர்சகர்.

ஆனால் இந்த அபிநயக் கச்சேரியையும், பந்தல் உள்ளே பல ஆத்மாக்கள் அநுபவித்துக்கொண்டுதானிருந்தார்கள். அப்பொழுது, சிவ பூஜையில் கரடி புகுந்தாற்போல், எங்கிருந்தோ, தன் ஹார்மோனியத்தை மீட்டிக்கொண்டு, அங்கே வந்து சேர்ந்தான் புஜங்கன்.

புஜங்கனின் சங்கீதம், பந்தலுக்குள் நுழைந்ததும், அங்கே ஒரு பரபரப்பு ஏற்பட்டது! சர். சாமாவுக்கு அசாத்திய கோபம் வந்து விட்டது. ராகமெல்லாம் ரோகமென்று சொல்லும், அந்த மனுஷர் வெளியே வந்தார்! ஊருக்குப் பெரியவர்! செல்வாக்குப் படைத்தவர்! அப்படிப்பட்டவருக்குக் கோபம் வரக் கேட்பானேன்! உடனே புஜங்கனின் கழுத்திலிருந்து ஹார்மோனியத்தைப் பிடுங்கினார்.

சர். சாமாவின் கோபத் தணல் வீசும் கண்களைப் பார்த்ததும், புஜங்கனின் உடல் நடுங்கியது.

“எசமான்! இங்கே ரொம்ப கும்பலாயிருக்கிறது! நிறைய துட்டு கிடைக்கும்னு வந்துட்டேன்! இதோ போயிடறேன். என் பெட்டியை மட்டும் கொடுத்துடுங்கோ! நீங்க எனக்கு

வேறொன்னும் கொடுக்கவேணும்" என்று கதறிக்கொண்டே, அவர் கால்களைப் பிடித்துக் கொண்டான்.

சே! ஒரு பிச்சைக்காரனுக்கா விட்டுக்கொடுப்பது! நம்ப கௌரவம் என்ன, என்று எண்ணினார் சர் சாமா. அடுத்த வினாடி "அயோக்கியப் பயல்கள்" என்ற வார்த்தைகளுடன், ஹார்மோனியப்பெட்டி தடாலென்று கீழே எறியப்படும் சப்தம், புஜங்கனின் காதுகளில் ஈட்டியைப்போல் பாய்ந்தது.

* * *

"சாமி, காலணா, கொடுங்கோ, நாலு நாளா பட்டினி" என்று ஒரு குரல் கேட்டதும், ஏதோ கேட்ட குரல் மாதிரி இருக்கிறதே என்று, பஸ்ஸில் உட்கார்ந்திருந்த நான் திரும்பிப் பார்த்தேன். அப்பொழுது நான் கண்ட காட்சி, என் கண்களின் பார்வையையே சந்தேகிக்கச் செய்ததுபோலிருந்தது.

எலும்பும் தோலுமாய், இடுப்பில் ஓர் கந்தை அங்கவஸ்திரம் தொங்க, அங்கே, அந்த பஸ் ஸ்டாண்டில், தன்னந்தனியனாய்ப் பிச்சை யெடுத்துக் கொண்டிருந்தான் புஜங்கன். அவன் கழுத்தில், ஹார்மோனியப் பெட்டி மாட்டியிருந்ததின் தழும்பு காணப்பட்டதே ஒழிய, அந்த வேணுகானப் பெட்டி காணப்படவில்லை! அது தான், அவனுடைய அந்த நிலைமைக்குக் காரணம் போலும்!

ஆளுக்கே மோசம்

முதலாளி:—(டிரைவரைப் பார்த்து) ஆமாம்; அந்த 'டய'ரில் அவ்வளவு பெரிய பொத்தல் எப்படி ஏற்பட்டது?

டிரைவர்:—பெரியதொரு கண்ணாடி பாட்டிலின்மேல் ஏறி விட்டது கார்.

முதலாளி:—சரி; அந்தக் கண்ணாடி உன் கண்ணுக்குத் தெரியவில்லை? அதுவரை நீ என்ன பண்ணிக்கொண்டிருந்தாய்?

டிரைவர்:—அந்தக் குடிகாரனுடைய சட்டைப் பைக்குள் இருந்தது அது. அதனால் தெரியவில்லை.

* * *

என் கண்ணே போ

பையன்:—அம்மா, அம்மா, நீ ஏன் அப்பாவைக் கலியாணம் பண்ணிண்டே?

அம்மா:—என் கண்ணே போ. உனக்கு இருக்கிற யோசனையும், புத்தியும் எனக்கு அப்போ இல்லாமெ போச்சேடா, என் ராஜாவே!